

திருவள்ளுவர் கிறித்தவரா !

ஆசிரியர்
புலவர் - மு. தெய்வநாயகம்

மெய்ப் பொருள் பதிப்பகம்

திருவள்ளுவர் கிறித்தவரா?

புலவர் மு. தெய்வநாயகம்

மெய்ப்பொருள் பதிப்பகம்
2ஏ, அப்பாத்துரை நாயக்கர் தெரு,
அயன்புரம் :: சென்னை-23.

இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 1969.

விலை ரூ. 3-50

கிடைக்குமிடம் :

மெய்ப்பொருள் பதிப்பகம்
2ஏ, அப்பாத்துரை நாயக்கர் தெரு,
அயன்புரம் :: சென்னை-23.

பரணி அச்சகம் சென்னை-7.

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9.

மே 23, 1969

காலம், இனம், நாடு என்னும் எல்லைகளைக் கடந்து எல்லா நாட்டினருக்கும், எல்லாக் காலத்தவர்க்கும் ஏற்ற அறிவுக் கருவூலமாகத் திகழ்வது திருக்குறள். அறிவும், அழகும், துடிப்பும், துள்ளலும் நிறைந்த பிள்ளையை, ஊரார் அனைவரும் தம் வீட்டுப் பிள்ளையாக எண்ணி மகிழ்வதுபோல், தமிழகத்திலுள்ள பல்வேறு சமயத்தினரும், திருவள்ளுவப் பெருந்தகையை, தம் சமயத்தினராக எண்ணுவது, அவர்மேல் அவர்கள் கொண்டுள்ள அளவற்ற அன்பையும், மதிப்பையுமே எடுத்துக்காட்டுகிறது.

புலவர் மு. தெய்வநாயகம் தமது 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்னும் நூலில் பல நூல்களிலிருந்து எடுத்துத் தந்துள்ள மேற்கோள்களும், கருத்துக்களும், வரலாற்றுக் குறிப்புகளும் படித்து இன்புறத்தக்கன.

திருவள்ளுவர் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவர் என்னும் கருத்தையே நான் வரவேற்கிறேன். இருப்பினும் இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் படிப்போரின் சிந்தனையைத் தூண்ட வல்லவையாகும்.

ஆசிரியருக்கு என் வாழ்த்துக்கள்.

திருவள்ளுவர் கிறித்தவரா ?

திகைப்பூட்டும் தலைப்பு! இத்தகைய கேள்வி எழவும் கூடுமா? இதை எண்பிக்க நூல் ஒன்றை இயற்றவும் முடியுமா? என்ன பொருளற்ற கேள்வி? என்ன ஆதாரமற்ற ஆராய்ச்சி! எப்படித்தான் தோன்றியதோ இவ்வெண்ணம் இந் நூலாசிரியருக்கு! என்று கேள்விக் கணைகள் பல தொடுக்கத் தோன்றலாம் இந் நூலின் பெயரைக் கேட்டதுமே! எனினும் திருவள்ளுவர் கூறியதுபோல்,

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ஆகவே "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்," அதற்கு ஓரளவேனும் மதிப்புக் கொடுத்து, அப்பொருள் உடனே ஏற்கத்தக்கதன்றெனினும், ஆய்வுக்குரியதாகவெனினும் கருதப் படலாமன்றோ? இந்நூலைப் பொருத்த அளவில் இதன் ஆசிரியர் விரும்புவதும், எதிர்பார்ப்பதும் அஃதேயாம். ஆகவே வாசக நண்பர்கள் இதனைப் படிப்பதோடு நின்றுவிடாமல், ஆக்க முறையில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால், மேலும் ஆய்வினைத் தொடர்ந்து நடத்த உதவக்கூடும். இந்நூலாசிரியர் வேண்டுவதும் இஃதேயாம்.

இத்துணைத் துணிவுடன், இத்தகைய அரியதொரு ஆய்வினைத் தொடங்கி வைக்கும் இந் நூலாசிரியர் அருமுயற்சியை யான் பெரிதும் பாராட்டுவதோடு, வெற்றிகரமான முறையில் ஆய்வு நடைபெற வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றேன்.

† **ஆர். அருளப்பா**
சென்னை மயிலை ஆர்ச் பிஷப்.

வெளியீட்டு விழா

இந்நூல் வெளியீட்டு விழா சென்னை ஒய்.எம்.சி.ஏ. சார்பாக 23-8-69 அன்று டாக்டர் எம். சந்தோஷம் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

வானொலி ஆசிரியர் திரு. தனபாண்டியன் அவர்கள் இறை வணக்கம் பாடினார்கள். தலைவர் தன் முன்னுரையில் நூலைப் பாராட்டினார்கள். நூலாசியரின் உரைக்குப்பின்னர் தமிழகக் கல்வி சுகாதார அமைச்சர், மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நூலை வெளியிட்டு உரையாற்றினார்கள். அவர்கள் தன் உரையில் திருக்குறளின் கருத்துக்களும் கிறித்தவக் கருத்துக் களும் ஒற்றுமை யுடையனவே எனவும், தமிழகத்திற்கும் யூதகிரேக்க நாடுகளுக்கும் நீண்ட காலமாகத் தொடர்பு உள்ளது எனவும், இவ்வகை ஆராய்ச்சிகளுக்கு யாவரும் ஆதரவு நல்குவதன் மூலம் தமிழகத்தின் ஆராய்ச்சித்துறையை மேலும் சிறப்பிக்க முடியும் எனவும், ஆதரவற்ற ஆராய்ச்சி யாளர்கள் ஒரு நூலுககுப்பின் தொடர்ந்து வெளியிட முடியாமல் அத்துறையை விட்டே ஒதுங்கிவிடுகின்றனர் எனவுங் கூறினார்கள்.

மறைத்திரு. சவரிமுத்து ஐயரவர்கள், நூலின் சிறப்புக்களைக்கூறி,பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவில் இத்தகைய ஆய்வாளர்கள் இடம்பெற அரசு ஆவன செய்ய வேண்டியது அவசியம் எனக் கூறினார்கள். சென்னை மயிலை ஆர்ச் பிஷப் ஆர். அருளப்பா அவர்களின் ஆசிச் செய்தி யும், மாண்புமிகு அமைச்சர் வேழவேந்தன் அவர் களின் வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டன.

பின்னர், திரு. உ. ஜெயராமன் அவர்களும், பேராசிரியர் பொன்னு ஆ. சத்தியசாட்சி அவர் களும் பாராட்டினார்கள்.

செயலாளர் நன்றி நவின்ற பின்னர் விழா இனிது முடிவடைந்தது.

விழாவில் நூலாசிரியர் உரை

விழாத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அறிஞர்களே, தாய்மார் களே நண்பர்களே வணக்கம்.

இந்நூல் எவ்வாறு உருவாயிற்று? ஏன் உருவாயிற்று? என்பன போன்ற வினாக்கள் உங்கள் உள்ளங்களிலே உருவாகலாம். அவைகளுக்கு விடையளிக்க நான் கடமைப்பட்டவன் என்ற முறையில் சில சொல்லுகின்றேன்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்றான் பாட்டுக்கொரு புலவன் பாரதி. ஏன் மற்றப் புலவர் களின்றும் வள்ளுவரைப் பிரித்து உலகுக்களித்தான். சிந்திக்கவேண்டிய ஒன்று. வள்ளுவர் கருத்து உலகப் பொது. தமிழகத்திற்கு மாத்திரம் உரிய தன்று; ஆகவேதான் அது 'பொதுமறை' என வழங்கப்படுகிறது. பொதுமறைதானா?

சென்ற ஆண்டு மெரினா கடற்கரையில் கிறித் தவ ஒருமைப்பாடு மன்றத்தின் ஆதரவில் நடை பெற்ற கூட்டத்தில் பேசும்படி பணிக்கப்பட்டிருந் தேன். நான் பேச வேண்டியது கிறித்தவ வாழ்க் கை. ஆனால் என் உள்ளத்தில் உருவானது வள்ளுவத்தின் வாழ்க்கை. ஏன் இந்த ஒற்றுமை? எப்படி இந்த ஒற்றுமை? என்ற வினாக்கள் என் உள்ளத்திலே உருவாகலாயின. இரண்டுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என உணரலானேன். மேலும் குறிப்புகள் அதை வலுப்படுத்தலாயின. கூட்டத்திலே முதன் முதலாக கிறித்தவமும் வள்ளுவமும் ஒன்றே என்ற இக்கருத்தை வெளி யிட்டேன். மேடையிலிருந்து கீழே இறங்கியதும், நண்பர்களின் எதிர்ப்பு, ஆதரவு என்றஇரண் டையும் சந்தித்தேன். பின் இக்கருத்தை

மேலும் ஆய எண்ணினேன். வள்ளுவத்தைப்பற்றி எனக்குக் கிடைத்த நூல்களை நுணுகி நோக்கினேன். ஒவ்வொருவர் கோணத்தையும் எடுத்து ஒன்று சேர்த்தகாலை ஒரு புதுக்கோணத்தைக் காணலானேன். அக்கோணம் எனக்கொரு புதுக்கதையைப் புகட்டியது.

வள்ளுவர் கூறியதற்கிணங்க, மெய்யப்பொருள் காணும் அவாவினால் இதில் ஈடுபட்டேனேயொழிய, சமயச் சார்பாக, அல்லது சமயத்திற்கு ஆதரவுதேட எண்ணி நான் இதில் ஈடுபடவில்லை. ஆகவேதான் இந்நூலுள் ஒவ்வொரு தலைப்பையும் பற்றி ஆயும் பொழுது, அதன் இரு கோணங்களையும் விருப்பு வெறுப்பின்றிச் சந்தித்துள்ளேன். எனது இந்த நிலையை, இந் நூலை நுணுகி நோக்குபவர்கள் காண முடியும்.

இந்நூலுள் வள்ளுவத்தின் அடிப்படையை ஒவ்வொரு சமய அடிப்படையுடனும் ஒப்பிட்டு முடித்திருக்கிறேன். இன்னமும் ஆழ்ந்த கருத்துக்கள் தற்போது குறிப்பளவில் நின்று வரப்போகும் நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளன.

நான் கண்டுள்ள இப்புதுக் கோணத்தை அறிஞருலகத்திற்கு இந்நூலால் அறிமுகப்படுத்த எண்ணியே, இந்நூலுக்கு இத்தலைப்புக் கொடுத்துள்ளேன். எனது இக்கோணத்தை அறிஞருலகம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனது எண்ணமல்ல. ஆனால் இப்படியொரு கோணமும் உண்டு என்ற கருத்தினை ஏற்றுக் கொண்டு ஆயவேண்டியது அறிஞருலகத்தின் கடமையாகும். அறிஞருலகத்திற்கு இப்புது ஆய்வின் தொடக்க நூலே இந்நூல். அதன் தொடக்க விழாவே இவ்விழாவாகும், விழாவினைச் சிறப்பித்த யாவருக்கும் எனது நன்றி.

மு. தெய்வநாயகம்

பொருளடக்கம்

வருக!

"திருவள்ளுவருடன் எவ்வகையிலும் தொடர்பில்லாத (புற மதத்தவர்கள்) கிறித்தவர்கள்கூட திருவள்ளுவருடன் சொந்தம் கொண்டாடுவது வியத்தற்பாலதே."

—சோ. சதாசிவன், (திருவள்ளுவன் பக். 83)

"அக்காலத்தில் ஏசுதாசரான தோமன் முனிவர் மைலாப்பூரில் மாதா கோவில் கட்டி சமயோபதேசஞ் செய்து கொண்டிருந்தார். வள்ளுவர் பைபிளையும் கேட்டிருக்கிறுர்."

—சுவாமி சுத்தானந்த பாரதியார்,
(திருக்குறளின்பம் பக். 13)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

—திருவள்ளுவர்.

தமிழகத்தில், மற்றப் புலவர்களைப் பற்றி எழாத "கிறித்தவரா?" என்னும் சொற்போர் வள்ளுவரைப் பற்றி மட்டும் நீண்ட காலமாக நிலவக் காரணம் என்ன? மெய்ப் பொருள் காண்போம் வாரீர்!

வள்ளுவனுர் செல்லும் வழிகாண மாநிலத்தீர்
உள்ளுகவே உள்ளம் உவந்து.

இப்பொருள் காட்டும் எழிலார்ந்த மெய்ப்பொருளைத்
தப்பாமல் ஆய்க தரித்து.

ஆசிரியர்.

சிந்திக்க, சீர்தூக்க, வருக! வருக!!

திருவள்ளுவர் சமயம் பற்றி ஆராயப் புகுந்துள்ள தங்களை வருக! வருக! என வரவேற்று தங்களோடு சேர்ந்து கருத்தைப் பரிமாறிக் கொள்ளுவதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

வள்ளுவர் சமயத்தைப் பற்றிப் பலவிதக் கருத்துக்கள் உலவுகின்றன. அவைகளுள் அவர் எம் மதத்தைச் சார்ந்தவர் என ஆய்வோம். திருவள்ளுவரின் சமயத்தைப் பற்றி ஆராயும் நாம் முதலில் அவர் வாழ்ந்த காலம் என்ன? என்பதை நோக்க வேண்டியவர்கள் ஆகிறோம். வாழ்ந்த காலம் தெரிந்தால்தான், அக்காலக் கட்டத்தில் திகழ்ந்த மதங்கள் எவையெனக் கண்டு, அதன் மூலம் வள்ளுவர் கருத்து எச்சமயத்துடன் ஒத்துத் திகழ்கிறதெனவும் நாம் காணமுடியும். ஆகவே முதலில் அவர் வாழ்ந்த காலத்தையும், பின்னர் அவர் கருத்தையும், அதன்பின் ஒவ்வொரு சமயக் கருத்துக்களும் வள்ளுவர் கருத்துடன் எவ்வெவ்வாறு ஒன்றுபட்டும் வேறுபட்டும் திகழ்கின்றன எனவும் ஆய்வோம்.

கிறித்தவம் நம் தமிழகத்திற்கு எப்போது வந்தது? கிறித்தவத்திற்கும் வள்ளுவருக்கும் தொடர்பிருக்க முடியுமா? திருவள்ளுவர் கருத்து கிறித்தவக் கருத்துடன் ஒத்துத் திகழ்கின்றனவா? திருவள்ளுவர் கிறித்தவராக இருக்க முடியுமா? என்பவற்றை எல்லாம் நாம் நிரல்பட விருப்பு வெறுப்பு இன்றி ஆராய்ந்து சென்றால் உண்மையைக் காணமுடியும்.

ஆய்வில் ஈடுபட்டுள்ள நாம் கைக்கொள்ள வேண்டியன யாவை :-

எதையும் ஆராயப் புகுங்கால், விருப்பு வெறுப்பு அகற்றி அதற்குமேல் தன்நிலை நிற்றல் வேண்டும். தான், தன் நாடு, தன் மொழி, தன் கொள்கை இவையே மேல், இதற்கு ஆதாரம் தேடவேண்டும் என்னும் எண்ணம் வேண்டாம். இதுவரை நாம் கடைப் பிடித்துவந்த கொள்கைக்கு மாருக ஆய்வின் முடிவு வருங்கால், அதைத் தயங்காது ஏற்றுக் கொள்ளும் இதயத் துணிவு நமக்கு வேண்டும். உலகம் முழுவதும் ஒன்று. எந்த நிலையாலும் ஏற்றத்தாழ்வு கிடையாது என்னும் பரந்த எண்ணம் உள்ளத்தின் அடித்தளத்தில் இருக்குமானல் ஆய்வின் முடிவில் வரும் எக் கருத்தையும் துணிவுடன் ஏற்கும் இதயத் திண்மை ஏற்படும். நாம் கூறும் முடிவை நமது காலத்தில் வாழும் மக்கள் ஏற்க மறுக்கலாம். ஆனல் காலம் நிச்சயம் நமக்கு வரவேற்பு அளிக்கும். கருத்தைத் தெரிவிப்பதால் வரும், ஆதாயம் இழப்பு ஆயும் எண்ணம் ஆய்வாளனுக்கு அணுவளவும் வரக் கூடாது. வருமானல் கருத்தின் ஆழம் குறைந்து சிறந்த ஆய்வாக அது திகழ முடியாது போகக் கூடும்.

ஆய்வாளன் எல்லோருடைய கருத்துக்கும் வரவேற்பு அளிப்பவனுக இருக்க வேண்டும். ஆய்வாளராகிய உங்கள்முன் வரப்போகும் கருத்துக்கள் வைக்கப்படுகின்றன.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு.

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இத்தன்மைத் தான இப்பொருளை உங்கள் நடுநிலை பிறழா உள்ள மாம் துலாக் கோலில் இட்டு, நல் அறிவாம் துணைக்

கொண்டு முடிவுகாண வேண்டுகிறேன். விருப்பு அற்ற உங்கள் ஆய்வின் முடிவு மேலும் ஆய்விற்குத் துணைபுரிந்து நிற்க இறையருள் பெருக வேண்டு கிறேன். ஆய்வுக்கு ஆள் முக்கியமல்ல, கருத்தே முதன்மை.

*எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

என்பதற்கிணங்க சொல்லும் ஆளை நோக்காது கருத்தினை நோக்க வேண்டுகிறேன். அப்பொழுது நிச்சயம் மெய்ப் பொருளைக் காணமுடியும். இனி மேலே செல்லுவோம் மெய்ப் பொருளை நாடி.

முதற்கண் வள்ளுவர் காலத்தை நோக்கு வோம். அதைக் கீழ்க்கண்டவாறு மூன்றுகப் பகுத்துக்கொண்டால் அதை எளிதில் கடக்க வாய்ப்பாக இருக்கும். அவை 1. வள்ளுவருக்கு முன் 2. வள்ளுவருக்குப்பின் 3. வள்ளுவர் வாழ்ந்த காலம்.

வள்ளுவருக்கு முன்

தமிழ் வளர்ச்சிக்கு உதவியாக மூன்று சங்கங்கள் இருந்தனவென்றும், இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள், அகத்தியம் தலைச் சங்கத்திற்கும், தொல்காப்பியம், இடைச் சங்கத்திற்கும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் கடைச் சங்கத்திற்கும் உரியன எனப் பகுக்கப்படுகின்றன. தலைச்சங்க நூலாகக் கருதப்படும் அகத்தியம் முழுவடிவில் நமக்குக் கிடைக்கவில்லை. ஆசிரியர் பலர் மேற்கோளாகக் காட்டிய அதன் நூற்பாக்களுள் சிலவே கிடைத்துள்ளன. இன்று முழுவடிவில் கிடைக்கும் முதல் நூல் தொல்காப்பியம் ஒன்றுமேயாகும். தொல்காப்பியத்தின் காலம் கி. மு. 300க்கு முற்பட்டு, பல காலங்கள் அறிஞர் பெருமக்களால் கூறப்படுகின்றன.

தொல்காப்பியத்திற்கு முன் அல்லது அதன் சம காலத்தில் திருக்குறள் நிலை பெற்றதா என ஆய்வோம்.

தொல்காப்பியம் ஓர் முழு இலக்கண நூல். இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் இயம்பலின் தொல்காப்பியர் காலத்தில், அதற்கு முன் இயற்றப் பட்ட பெருகிய இலக்கியங்கள் பரந்துபட்டு இருந்திருத்தல் வேண்டும். அது மட்டுமல்லாது இலக்கண நூலும் பல இருந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியர் அவர் காலத்தில் நிலவிய இலக்கியத்தின் சாரத்தை வடித்து, முற்கூறப்பட்ட இலக்கணத்தின் சாரத்தையும் அதனுடன்

தொகுத்துக் கூறியுள்ளார் என்பது, 'என்மனுர் புலவர்' 'மொழிப' 'என்ப' 'வல்லோர் ஆறே' 'எனப்படுமே' என ஏறத்தாழ 260 இடங்களில் குறித்துள்ளமையால் விளங்குகிறது. ஆகவே தொல்காப்பியத்தின் கருத்து அதற்கு முன் நிலவிய நூல்களின் சாரமேயாகும் என்பது தெளிவு.

திருக்குறள் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலத்திலோ அல்லது அதன் சம காலத்திலோ இயற்றப்பட்டிருக்குமானுல், இலக்கியமாகிய திருக் குறளின் தன்மை இலக்கணமாகிய தொல் காப்பியத்தில் வெளிப்பட்டு இரண்டும் ஒன்றி யைந்து நடைபெறல் வேண்டும். ஆனுல் இணைந்து செல்ல வேண்டியதற்கு மாருகப் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. அவைகளை நோக்குவோம்.

1. தொல்காப்பியம் எழுத்து – சூத் – 62-ல்

" *சகரக் கிளவியும் அவற்ருேரற்றே*
அ, ஐ, ஔ எனும் மூன்றலங்கடையே "

என சகரம் மொழிக்கு முதலில் வராது எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. ஆனுல் திருக்குறளினுள் சமன் செய்து (118) சலத்தால் (660) சலம்பற்றி (956) சங்கு, சகடம் முதலான சொற்கள் வந்துள்ளன. ஆகவே, தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் வழக்கிற்கு வந்ததும் கடைச்சங்க காலத்தில் நிலவியதுமான சொற்களைக்கொண்டு விளங்கும் திருக்குறளும் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டதே.

2. தொல்காப்பியர் காலத்தில் மொழிக்கு நடுவே ல்ய, ள்ய, ஞ்ய, ந்ய, ம்ய, வ்ய, ம்வ என வருஞ் சொற்கள் வழங்கினவென்பது தொல் – எழுத்து - 24, 27, 28 ஆகிய சூத்திரங்களால் அறிகிருேம். பிற்காலத்தில் இவ்வாறு வழங்கிய

சொற்கள் வழக்கிழந்தன. திருக்குறள் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருக்குமானால் இவ்வகைச் சொற்கள் குறளுள் இருக்கவேண்டும். ஆனால் இவ்வகைச் சொல் ஒன்றேனும் திருக்குறளினுள் காணப்படாமையால், இவ்வகைச் சொற்கள் வழக்கு ஒழிந்த பிற் காலத்தில் தோன்றியது திருக்குறள்.

3. தொல்காப்பியர் காலத்தோ அல்லது அதற்கு முன்னரோ கடவுள் வணக்கமும் பாயிரமும் கூறுதல் வழக்கம் இல்லை என்பது, கடவுள் வணக்கம், பாயிரம் இவை கூறவேண்டியதன் அவசியம் தொல்காப்பியத்தினுள் எங்குமே கூறப்படாமையால் அறியலாம். கடவுள் வணக்கமும் பாயிரமும் கூறப்பட்ட பிற்கால வழக்கிற்குப் பின் எழுந்த இலக்கண நூல்களிலேதான் பாயிரத்தின் அவசியமும் இறை வணக்கத்தின் இன்றியமையாமையும் இயம்பப்படுகிறது. பாயிரத்தின் அவசியம் கூறப்படாத தொல்காப்பியத்திற்குப் பிற்காலப் புலவர் ஒருவர் பாயிரம் இயற்றிச் சேர்த்தார் என்பது திரு. ந. சி. கந்தையா பிள்ளை அவர்களின் கருத்தாகும்.

"பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது என்றும் கொள்கை தலைப்பட்ட காலத்தில் எவரோ ஒருவர் கேள்வி வழக்கிற் கிடைத்த வரலாறுகளைத் திரட்டிப் பாயிரம் செய்தார் ஆதல் வேண்டும்."

(ந. சி. கந்தையா பிள்ளை – தமிழர் சரித்திரம் பக் - 143.) பாயிரம் கூறுதலாகிய பிற்கால மரபு திருக்குறளினுள் காணப்படுங் காரணத்தால் இது தொல்காப்பியர் காலத்திற்குப் பிந்தியது.

4. திருக்குறள் தொல்காப்பியத்திற்கு முன்னர் இயற்றப்பட்டிருக்குமானால், திருக்குறள் கருத்தான கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை

சூதாடாமை, வரைவின் மகளிர் நீக்கம் ஆகிய கருத்துக்களையும், கற்பு என்பது இருபாலார்க்கும் உரியது என்னும் மேலாந் தன்மையையும் ஏற்று இலக்கணம் கூறி இருப்பார். இவ்வகையான திருக்குறளாம் இலக்கியக் கருத்துக்கள், தொல்காப்பியமாம் இலக்கணத்துள் காணப்படாமையால் திருக்குறள் தொல்காப்பியத்திற்குப் பிந்திய நூல்.

5. சிறந்த உரையாசிரியராம் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும், ‘‘சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர் அறிதல் வேண்டி, வியாதர் வேதங்களை நான்கு கூறுகப் பகுக்கு முன்னரே தொல்காப்பியமியற்றப்பட்டது.’’ எனக் கூறுமாற்றால் இன்று கிடைத்தவற்றுள் தொல்காப்பியம் ஒன்றுமே மிகப்பழைய நூலாகும். திருக்குறள் அதன் பின்னர் இயற்றப்பட்டதே.

6. திருக்குறள் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட நூல் என்பதை, முச்சங்க வரலாற்றை முதன் முதல் வெளியிட்ட நக்கீரர் முதல் தற்கால அறிஞர் ஈருக யாவரும் ஒருமுகமாக ஏற்றுள்ளதோடு, வரலாற்று சிரியரும் வெளியிட்டுள்ள கருத்தாகும்.

7. தொல்காப்பியம் பற்றிய அறிஞர் கருத்துக்கள்.

1. ‘இறவாமல் எஞ்சி நிற்கும் தமிழ் நூற்கெல்லாம் தொல்காப்பியர் நூல் காலத்தால் முற்பட்ட தென்பது தமிழின்றி வடமொழி வல்லாரும் மறுக்கிலா உண்மையாகும்.’

ச. சோமசுந்தர பாரதியார், எம்.ஏ.,பி.எல். — ‘திருவள்ளுவர் காலமும், வையாபுரிப் பிள்ளையவர்களின் கொள்கையும்’

டாக்டர். மா. இராசமாணிக்கனார்,
திருவள்ளுவர் காலம் - பக் 39.

2. தமிழிலே இன்றுள்ள நூல்களிலே தொல்காப்பியந்தான் பழமையான நூல். இதற்கு முற்பட்ட நூல் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. இது மட்டும் எவராலும் மறுக்க முடியாத உண்மை. தமிழ் நூல் ஆராய்ச்சியாளர் அனைவராலும் ஒரு மனதாக ஒப்புக் கொள்ளும் முடிவு.

சாமி. சிதம்பரனர்—தொல்காப்பியத் தமிழர்
பக் – 22.

3. தொல்காப்பியர் வள்ளுவருக்கு முந்தியவர் என்பதில் ஐயமுறும் தமிழறிஞர் எவருமில்லை.

(சோம சுந்தர பாரதியார்—திருவள்ளுவர் காலமும் வையாபுரிப் பிள்ளையவர்களின் கொள்கையும்)

மேலே நாம் பார்த்தவைகளிலிருந்து திருவள்ளுவருக்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பது உறுதி. ஆகவே, இடைச்சங்க காலத்தில் திருக்குறள் இயற்றப்படவில்லை. அதற்குப் பிற்பட்டது என்பது தெளிவு.

வள்ளுவர்க்குப் பின்

இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் திருக்குறளைப் பற்றிய குறிப்புக் கொண்டவை பல. அவற்றுள் காலவரிசையில் முன் நிற்பவை சிலப்பதி காரமும் மணிமேகலையுமே. இவ்விரு நூல்களுள் ளும் திருக்குறள் தெளிவாக முழு வடிவில் எடுத் தாளப் பட்டுள்ளது. இவை தவிர பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் அவைக் களத்தின்கண் வீற்றிருந்து தமிழாய்ந்த பெரும் புலவராம் நக்கீரர் இயற்றிய இறையனர் களவியல் உரையிலும் குறள் முழுவடிவில் காணப்படுகின்றது.

சங்கப் பாடல்களுள் ஆங்காங்கே சிற்சில இடங் களுள் கருத்தொற்றுமை காணப்படினும் முழுக் குறளாகக் கூறப்படும் இடம் யாண்டுமே இல்லை. இக் கருத்துக்கள் திருக்குறளிலிருந்து மற்ற நூல் களுக்குச் சென்றன என்போரும், மற்ற நூல்களின் கருத்துக்களைத் திரட்டி திருவள்ளுவர் அறநூல் இயற்றினர் என்போருமாகிய அறிஞர் இருவகை யாவர். புற நானூற்றுள் 34-ம் பாடலில்,

" நிலம்புடை பெயர்வதாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பாடிற்றே ஆயிழை கணவ "

என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியதன் கண் 'அறம் பாடிற்றே' என்பது திருக்குறளையே குறிக்கும் என்பர். திருக்குறளுக்கு முன் வேறு அறநூலே இருந்திருத்தல் முடியாது என வலியுறுத்திக் கூற முடியா நிலையில் இரண்டிற்கும் ஒத்த கருத்தினை

மாத்திரம் வைத்து, அறம் என்பது திருக்குறளையே குறிக்கும் என்ற கருத்தினை ஏற்றுக்கொள்ள அஞ்சும் அறிஞரும் உண்டு.

ஆகவே மாற்றுக் கருத்துக்கு இடமின்றித் திருக்குறளை முழுமையாக அதன் தன்மை மாருது எடுத்தாண்ட மணிமேகலை, சிலப்பதிகாரம் இவற்றின் காலம் காணுங்கால் குறள் அவற்றிற்கு எவ்வளவு காலத்திற்கு முற்பட்டதெனக் கண்டு தெளியலாம்.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகளும், மணிமேகலையின் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனரும் ஒரே காலத்தவர் என்பது இரண்டு நூலின் அகச் சான்றுகளாலே நாம் தெளியலாம். இவர்கள் இருவரும் சேரன் செங்குட்டுவன் வாழ்ந்த காலத்தில் இருந்தவர்கள்.

சங்க காலம் முழுவதையும் கணக்கிடுவதற்கு இன்று நமக்கு இருக்கும் ஒரே ஆதாரம், செங்குட்டுவனின் நண்பனுன இலங்கை மன்னன் கயவாகுவைப்பற்றிக் கூறும் "மகாவமிசம்" ஒன்றே. மகாவமிசத்தின்படி கயவாகுவின் காலம் கி. பி. 173 முதல் கி. பி. 195 முடிய ஆகும். இவனுடைய இந்த ஆட்சிக் காலத்திற்கிடையே இவன், சேர வேந்தனுன செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்துக் கோவில் கட்டி வழிபட்ட விழாவுக்குச் சேரனின் அழைப்பினை ஏற்று வந்திருந்தான் எனச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

இவன் பத்தினி விழாவுக்கு வந்து சிறப்பித்ததுமன்றித் தன் நாட்டிற்கும் பத்தினி வழிபாட்டினைக் கொண்டு சென்றவனுவான். இவனுல் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்ட பத்தினி வழிபாடு இன்று வரை நிலைத்துள்ளது. இன்றும்

இலங்கை வாழ் மக்கள் 'பத்தினித் தெய்யோ' எனக் கண்ணகியைப் போற்றி வழிபடுகின்றனர். இன்று இலண்டன் பொருட்காட்சிசாலையிலுள்ள கண்ணகியின் உருவச்சிலை இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்டதேயாகும். கண்ணகியின் உருவச் சிலைகளை இலங்கையில் வாழ்ந்த சிற்பிகள் பண்டை நாளில் செய்தனர் என்பதை டாக்டர் ஆனந்தக் குமாரசாமி விளக்கியுள்ளார். பத்தினி விழாவில் இலங்கை மக்கள் எடுத்துச் சென்ற சிலம்புகள் கொழும்புப் பொருட்காட்சி சாலையில் இருப்பதாகத் திரு. அருணசலந்துரை கூறுகின்றார்.

கயவாகு மன்னன், தன் தந்தையின் காலத்தில் கரிகாற் சோழ மன்னனால் சிறை பிடிக்கப்பட்டு, காவிரிக்குக் கரை கட்டப் பயன்படுத்தப்பட்ட 12,000 சிங்களவரை, அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துச் சென்றான் என சிங்கள நூல்கள் பல கூறுகின்றன. இவர்கள் விடுதலையான நாள் இலங்கையில் பெருவிழாவாகக் கொண்டாடப் பட்டது.

இக் காரணங்களால் இலங்கைக் கயவாகு மன்னன் சேரன் செங்குட்டுவனுடன் பத்தினி விழாவைக் கொண்டாடியது உறுதிப் படுகிறது.

அடுத்து செங்குட்டுவன் பத்தினிக்குக் கல் எடுப்பதற்கு வடநாடு சென்றபோது கங்கைக் கரையைக் கடக்க உதவியவர் நூற்றுவர் கன்னர் எனக் குறிப்பிடப்படுகிறது. நூற்றுவர் கன்னர் என்பது சதகர்ணி என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பே யாகும். அவ்வாறானால் சதகர்ணி என்ற ஆந்திரப் பேரரசன் செங்குட்டுவனுக்கு நண்பன் என அமைகிறது. யக்ஞ ஸ்ரீ சதகர்ணி என்பவன் கி. பி. 166 முதல் 196 வரை ஆந்திரத்தை அரசாண்டான் என வரலாறு கூறுகிறது.

ஆகவே, இலங்கை மன்னனுகிய கயவாகுவின் காலமாகிய கி. பி. 173 முதல் கி. பி. 195 முடியவும், ஆந்திரப் பேரரசன் யக்ஞ ஸ்ரீ சதகர்ணியின் கால மான கி. பி. 166 முதல் கி. பி. 196 முடியவும் உள்ள இடைக் காலத்தில் செங்குட்டுவன், நூற்றுவர் கன்னர் உதவிய வடநாட்டுப் பயணத்தையும், இலங்கைக் கயவாகு சிறப்பித்த கண்ணகியின் விழாவையும் முடித்தான் என்பதை நாம் உறுதி யாக நம்பக் கூடும். நம்பவே செங்குட்டுவன் 55 ஆண்டுகள் அரசாண்டான் என பதிற்றுப்பத்தில் 5ஆம் பத்து கூறுவதிலிருந்து இவன் காலம் கி. பி. 175 முதல் 230 என்று நாம் கொள்ளுவதில் தவறு ஒன்றும் இல்லை. இதையே பேராசிரியர் கா. சுப்பிர மணிய பிள்ளையவர்களும் தனது இலக்கிய வர லாற்றில் கூறியுள்ளார்.

செங்குட்டுவனின் காலம் கி. பி. 175 முதல் 230 எனக் கணிக்கப்படவே, அவன் காலத் தினரான இளங்கோவடிகளும் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனுரும், செங்குட்டு வனைப் பாடிய பரணரும், அதே பரணரால் பாடப் பட்ட வையாவிக்கோப் பெரும்பேகனைப் பாடிய கபிலரும், கபிலரால் கொண்டாடப்பட்ட பாரியைப் பாடிய ஔவையும், ஆகிய இவர்கள் யாவரும் ஏறத்தாழ ஒரே காலத்தில், சற்று முன்பின் வாழ்ந்த வர்களாக நாம் வேண்டியவர்களாகிறேம்.

ஆகவே இதுவரை நாம் கணக்கிட்டுள்ள தன்படி திருவள்ளுவர் கி. பி. 175–230 வரையுள்ள காலத்திற்கு முற்பட்டவர் என்பது தெளிவாகிறது.

எவ்வளவு காலத்திற்கு முற்பட்டவர்:—

சிலம்பு, மணிமேகலை இவற்றுள் அரசியலின் உறுப்புக்களாக ஐம்பெருங்குழு எண்பேராயம்

முதலியன குறிக்கப்படுகின்றன. இந்நூல்களுக்கு வள்ளுவர் சம காலத்தில் வாழ்ந்திருப்பாராஞல், இறை மாட்சியிலும், செங்கோன்மையிலும் அரசர்க் குரிய ஆறங்கங்களைக் கூறிய வள்ளுவர் இவைகளைக் குறியாமல் விட்டிருக்கமாட்டார். குறியாமையி லிருந்து சம காலத்திற்கோ அல்லது ஒரு சில ஆண்டுகளுக்கோ முற்பட்ட நூல் அல்ல என்பது விளங்கி நிற்கின்றது.

அடுத்து ஒருவர் எவ்வளவுதான் சிறப்புடைய வராகத் திகழ்ந்திடினும் சமகாலப் புலவர்களாலும், சிறிது காலமே பிற்பட்ட புலவர்களாலும் பெரும் பாலும் புகழப்படுதல் அரிது. ஆகவே இரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதிக்கும் மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதிக்குமிடையே இயற்றப் பட்ட சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றிற்கு ஒரு நூற்ருண்டுக்கு முற்பட்டதாக திருக்குறளைக் கொண்டால் திருக்குறள் கி.பி. முதல் நூற்ருண்டின் பிற்பகுதிக்கும் கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் முற்பகுதிக்குமிடையே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர் 100 ஆண்டுகளுக்கு மேலும் வாழ்ந்து தன் வாழ்வின் இறுதிக் காலத்தில், வாழ்க்கையின் அத்தனை கோணங்களிலிருந்தும் திரட்டிய அரிய சொத்தான திருக்குறளை இயற்றிஞர் என நாம் கொள்ள வேண்டியவர்கள் ஆகிருேம். அவ்வாறு கொள்ளவே வள்ளுவர் கி. மு. முதல் நூற்ருண்டின் பிற்பகுதிக்கும் கி. பி. முதல் நூற்ருண்டின் முற்பகுதிக்குமிடையே தோன்றியவர் என நாம் முடிவு செய்வோம். இந்த முடிவு உறுதிப்பட மேலும் ஆய்வோம்.

வள்ளுவர் வாழ்ந்த காலம்

சங்க காலம் என்று பொதுவாகக் கூறப்படுவது முச்சங்களுள், பெரும்பாலான நூல் நமக்குக் கிடைத்துள்ளதும், கடைசியில் இயன்றதுமான கடைச் சங்க காலத்தையே குறித்து நிற்கிறது. இச்சங்கம் கிறித்துவிற்குப் பின் முதல் மூன்று நூற்ருண்டுகளில் இருந்தது என்பர். இக் காலத்தில் தோன்றிய நூல்களாகக் குறிக்கப்படுவன பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு ஆகியன. இவற்றுள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சங்க காலத்திற்குப் பிந்தியது எனக் கூறுவாரும், அதனில் காணப் படுபவற்றுள் சிலவே பிந்தியது எனக் கூறுவோருமாகிய அறிஞர் இரு வகையினர். இருப்பினும் திருக்குறள் சங்க காலத்துத் தோன்றிய நூலே என நாம் கொள்ள வேண்டியவர்களாகிறேம்.

ஏனெனில் கீழ்க் காணும் காரணங்கள் அதை உறுதிப் படுத்துகின்றன. அவை யாவன :—

1. திருக்குறள் சங்க நூல்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகவே பண்டு தொட்டு எண்ணப்பட்டு வருகிறது.

2. சங்க காலத்திற்குப் பின்னரே வீடு பற்றிய விரிவான கூற்று நூல்களில் காணப்படுகின்றன. சங்க நூல்கள் அறம், பொருள், இன்பத்தைப் பற்றி மட்டுமே விளக்கி யுரைக்கின்றன. அவ்வழியிலேயே குறளும் இயற்றப்பட்டுச் சங்க நூல்களுடன் ஒத்துத் திகழ்கிறது.

3. சொல்லமைப்பு காலத்தை விளக்குவதாக உள்ளது. ஒரு காலத்தில் பெருவழக்காய் இருக்கும் சொற்களுள் சில, பிறிதோர் காலத்தில் வழக்கிறந்து போதலும், புதிய சில சொற்கள் ஆட்சி பெறுதலும் இலக்கிய உலகின் இயல்பு. இவற்ருல் ஓர் இலக்கியம் எக்காலத்தைச் சேர்ந்தது என்பது அதன் சொல்லாட்சியால் விளங்கி நிற்கும். அந்த நிலைக்கேற்ப, சங்ககால இலக்கியங்களின் சொல்லமைப்பே திருக்குறளிலும் விளங்கித் தோன்றலால் இது சங்க காலத்தைச் சேர்ந்தது ஆதல் வேண்டும்.

4. அடியளவால் இது சங்க கால நூல்களை ஒத்துத் திகழ்கின்றது. திரு. கனகசபைப் பிள்ளையவர்கள் இயற்றிய '1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலில் கி. பி. 50க்கும் 150க்கும் இடையே செய்யப்பட்ட நூல்களும் அவற்றில் அடங்கிய அடிகளும் என்ற தலைப்பின் கீழ்க் காணப்படுவன.

குறள்	2660	அடிகள்
மணிமேகலை	4857	,,
சிலப்பதிகாரம்	4957	,,
கலித்தொகை	4304	,,

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்டிருத்தலை ஒப்பு நோக்கின் அமைப்பாலும் அடியளவாலும் சங்க கால நூல்களை ஒத்துத் திகழ்கின்றது.

5. கடைச்சங்க நூல்களில் பெரும்பாலான ஆசிரியப் பாவிலும், அதனையடுத்த காலத்தன வெண்பாவிலும், பிற் காலத்தில் விருத்தப்பாவிலும் செய்யுட்கள் நடைபெற்றன. கடைச்சங்க காலத்தில் வெண்பாவில் சிறந்தோங்கிய திருக்குறளே அதனையடுத்த காலத்தில் வெண்பா சிறந்தோங்க

வழி காட்டியது. வெண்பா பெருவழக்கில்லாக் காலத்து வெண்பாவால் இயற்றப் பட்டமையால் இது குறள் வெண்பாவால் பெயர் பெற்று, குறள் என ஆயிற்று. 'பாட்டுக்கொரு புலவன்' எனப் புகழப்பட்ட பாரதியார் இயற்றிய காரிகைக்குட் படாத மறுமலர்ச்சிக் கவிகள், அவருக்குப் பிந்திய தற்கால மறு மலர்ச்சிக் கவிகளுக்கு வழி காட்டி யுள்ளதை இங்கே நாம் நினைவு கூறலாம். திருக் குறளை யொட்டியே திருவள்ளுவ மாலை முழுவதும் வெண்பாவினுல் இயற்றப்பட்டதும் நோக்கத் தக்கது.

6. "பண்டைக் காலத்திலிருந்த வெறுஞ் சொல்லாரவார விரிவெல்லாம் சுருங்கி 60 சூத்திர உருவிலே இறையனுரகப் பொருள் இயற்றப்பட் டமையும், மக்களுயிர்க் குறுதி பயப்பனவாகும் எல்லாப் பொருளும், மெய்பெறத் தெரிந்து, மிகச் சுருங்கிய 1330 குறுகிய வெண் பாட்டுக்களிலே, திருக்குறள் இயற்றப் பட்டமையும் கடைப் பிடித் துணருங்கால் இச் சூத்திர காலத்திற்கும், இதன் கண் எழுந்த, களவியல் திருக்குறள் என்னும் இரண்டு நூல்கட்கும் நிரம்ப ஒற்றுமையுண் டென்பது மலேவின்றிப் பெறப்படுதல் காண்க" என மறைமலேயடிகள் கூறும் (திருக்குறள் ஆராய்ச்சி பக்-23) கருத்தினை நோக்க இரண்டும் சங்க காலத்தியன்றமை விளங்கித் தோன்றும்.

சங்க காலத்தின் ஆரம்பத்தில் எழுந்த களவி யலுக்கு, சங்க இறுதியில் வாழ்ந்த நக்கீரரால் உரை கூறப்பட்டதாகக் கொள்ளலாம். நக்கீரர் உரையுள் திருக்குறளை மேற்கோளாகக் காட்டியுள்ளமையும் நோக்கத்தக்கது. அவ்வாறே சங்க காலத்தின் ஆரம்பத்தில் எழுந்த திருக்குறளும் சங்க இறுதியிலேயே அரங்கேற்றம் செய்யப்பட்டு

அப்போது வீற்றிருந்த புலவர்களால் புகழ்மாலை சூட்டப்பட்டு அது திருவள்ளுவ மாலையாகத் தொகுக்கப்பட்டதாகக் கொள்ளலாம். இறையனார் களவியல் எழுதிய ஆசிரியர் எவ்வாறு அக் காலத்தில் இல்லையோ அவ்வாறே திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும் இல்லை. ஏனெனில் திருக்குறளைச் சங்கத்திற்கு அரங்கேற்றம் செய்யும் பொருட்டுக் கொணர்ந்தவர் ஔவையார் என்றே அறிஞர் பலராலும் கொள்ளப்பட்டு வருகிறது.

7. திருவள்ளுவர் அரங்கேற்றத்திற்குத் திருக் குறளைக் கொண்டு சென்றதாகவும், புலவர்களின் அவமதிப்புக் குள்ளாகிய வள்ளுவர் சீற்றத்தோடு திரும்பியதாகவும், சங்கம் இவருடைய சீற்றத்தால் அழிவுற்றதெனவும் வழங்கும் கர்ணபரம்பரைச் செய்தியிலிருந்து, அதை முழுவதையும் நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கும், அவர் நூலுக்கும் சிறப்புக் கிடைக்கவில்லை என்பதும், அவர் காலத்திற்குப் பின்னரே அது அரங்கேற்றம் செய்யப்பட்டதெனவும் கொண்டு சங்கத்தின் முற் பகுதியான கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தா ரெனக் கொள்ளலாம்.

8. திரு. பழநியப்ப பிள்ளை அவர்கள் (திருப்பதி, திருவெங்கடேஸ்வரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத் தலைவர்) தான் எழுதியுள்ள திருக்குறள் பொருட்பாலின் முகவுரையில் "வள்ளு வனாரைச் சைன முனிவராகிய ஏலாசாரியாரென் பாரும், சைனாசாரிய பட்டாவளிப்படி அவரைக் கிறித்து பிறந்து வாழ்ந்த முதல் நூற்றாண்டின ரெனவே நிறுவுகின்றனர்." எனக் குறிபிட்டுள் ளார். தேவர் என்பது அன்று பௌத்தர்க்கும், சைனர்க்கும் பொதுப் பெயராயினும் அதுவே

வள்ளுவர்க்குச் சிறப்புப் பெயர் ஆகியுள்ளது. திருவள்ளுவருக்குச் சைனக் கருத்துகள் சில உடன் பாடெனவும் அவர் பிறப்பில் சைனராயிருந்திருக் கலாம் எனவும் நாம் கொள்ளுவதில் தவறு இல்லை.

9. ஏறக்குறைய 400 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட ஞானமிர்தம் என்னும் நூலில் 'அறப் பயன்றீரின்' என்னும் அகவலில்

"யாளி கூவற்றூண்டும் ஆதப் புலைச்சி
காதற் காசினியாகி மேதினி
இன்னிசை யெழுவர்ப் பயந்தோ ளீண்டே"

எனக் கூறப்பட்டுள்ளது. இதனுல் வள்ளுவர் எழுவருடன் பிறந்தவர் என்பது பண்டை நாளில் பழங்கதை வடிவில் திகழ்ந்ததெனப் புலப்படுகிறது.

மேலும் கபிலரகவல் என்னும் நூலில் உடன் பிறந்த எழுவரையும் பற்றி விளக்கமாக, எழுவரில் ஒருவராகிய கபிலரே கூறுவதாக அமைந்துள்ளது. அது,

"என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்
ஆண்பான் மூவர் பெண்பால் நால்வர் ;
யாம் வளர்திறஞ் சிறிதியம்புவல்கேண்மின்
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணாரகத்தில் உப்பை வளர்ந்தனள் ;
காவிரிப்பூம்பட்டினத்திற் கள்விலைஞர் சேரியிற்
சான்றூர் அகந்தனில் உறுவை வளர்ந்தனள் ;
நரம்புக் கருவியோர் நண்ணிடுஞ் சேரியிற்
பாணரகத்தில் ஔவை வளர்ந்தனள் ;
குறவர் கோமான் கொய்தினை புனஞ்சூழ்
வன்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள் ;
தொண்டை மண்டிலத்தில் வண்டமிழ்மயிலையில்
நீளாண்மை கொளும் வேளாண் மரபுயர்
பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர் ;
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி

அதியமானில்லிடை அதியமான் வளர்ந்தனன்;
பாரூர்நீர் நாட்டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்.''

இப்பாடல் கருத்தினை அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், இவ்வெழுவரும் ஒரு காலத்தில் சற்று ஏறக்குறைய வாழ்ந்துள்ளார்கள் என்னும் செய்தியை மட்டும் நாம் ஏற்றுக் கொள்ளலாம். வண்ணார், சான்றார், பாணர், குறவர், பறையர், அதியர், அந்தணர் யாவும் தொழில் செய்வாரைக் குறித்து நின்றன. அதிகமான ஏற்றத்தாழ்வு எழாத காலம். தொழில் வழிவழிச் செய்யப்பட்டமையால் குலமாக மாறியது. இவர்கள் எழுவரும் ஏழுவகைக் குலத்தில் தோன்றியவர்கள். ஒவ்வொரு குலத்தினின்றும் ஒவ்வொருவர் சிறந்து விளங்கினர். பின்னால் வந்தவர்கள் ஏற்றத்தாழ்வு எழுந்த காலத்து இவ்வெழுவர்க்கும் சிறப்புக் கொடுக்க வேண்டுமெனக் கருதியோ அன்றி, பிராமணர்க்கு மாத்திரமே அறிவுயர்வுண்டு என நிலை நிறுத்தற் பொருட்டு இவர்களைப் பிராமணருக்குப் பிள்ளையாக்குவதன் மூலம் பிராமணருக்கு உயர்வு ஏற்படுத்தற் பொருட்டோ இக்கட்டுக் கதைகள் நடந்தன என நாம் கொள்ளலாம்.

இவர்கள் உண்மையில் உடன் பிறந்தவராக இருப்பினும் அல்லது கட்டுக் கதையாகவே இருப்பினும் இச்செய்தி நீண்ட காலமாக வழங்கி வந்ததிலிருந்து இதிலே கூறப்பட்ட எழுவரும் ஏறத்தாழ ஒரு காலத்தில் சற்றுமுன்பின் வாழ்ந்தவர் என்பது மட்டும் உறுதி.

இங்கு கூறப்பட்ட எழுவருள் உப்பை உறுவை வள்ளி ஆகிய மூவரும் நீங்கலாக மீதியுள்ள நால்வரையும் பற்றிய வரலாற்றைச் சங்க காலம்

நமக்குத் தெரிவிக்கிறது. இந்நால்வருள்ளும் மூவரைப்பற்றிய திட்டமான வரலாறும், நான்காவதாகிய திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுமே நமக்குக் கிடைத்துள்ளன. ஆகவே மூவர் காலத்தையும் நாம் நோக்க திருவள்ளுவர் காலம் நமக்குத் தெளிவாகலாம். அம் மூவர் 1. ஔவை, 2. அதியமான், 3. கபிலர்.

இச் செய்யுளில் பெண்களுள் ஔவை பிற்பட்டவர் எனவும், ஆண்களுள் வள்ளுவர் முற்பட்டவரெனவும் குறிக்கப் பட்டுள்ளதிலிருந்தும்; திருக்குறளை அரங்கேற்றம் செய்யும் பொருட்டு ஔவையையே சங்கத்திற்கு எடுத்துச் சென்றார் என வழங்கப்படுவதிலிருந்தும், வள்ளுவருக்குப் பின் வாழ்ந்தவர் ஔவை எனக் கொள்ளலாம். இனி இலக்கியம் கூறும் வரலாற்றை நோக்குவோம்.

கபிலரும் ஔவையும் பாரியைப் பாடியுள்ளமையால், இருவரும் ஒரு காலத்தில் வாழ்ந்தாலும் பாரி இறந்தபின், பாரியின் மக்களுக்கு மணம் முடித்துவைக்க இயலாது கபிலர் இறக்க, அதன் பின் அம்மங்கையருக்கு ஔவையே மணம் முடித்து வைத்தார் என்ற காரணத்தால் கபிலர்க்குப் பின்னும் வாழ்ந்தவர் ஔவை.

அதியமானுடன், ஔவையை ஒப்பிடுங்கால், அதியன் பெருஞ்சேரல் இரும்பொறையுடன் பொருத பொழுது அவனைப் புகழ்ந்துபாடிய ஔவை அவன் இறந்த பொழுது இறங்கிப்பாடி, பின்னர் அவன் மகன் பொகுட்டெழினியின் காலத்திலும் நீண்ட நாள் வாழ்ந்துள்ளார். ஆகவே கபிலர், அதியமான் ஆகியவர்களுக்குப் பின்னும் ஔவை நீண்டநாள் வாழ்ந்துள்ளார் என்பது தெளிவு.

ஔவை பாடிய பொகுட்டெழினியின் தந்தையான அதியமானைப் போரில் வென்றவன் சேரமான்

பெருஞ்சேரல் இரும்பொறை. அவன் தந்தையான செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியுள்ளமையால், கபிலர் தனது முதுமைக் காலத்து வடக்கிருந்து உயிர் நீத்தாரெனவும், அப்போது ஔவை இளமைப் பருவத்தினரா யிருந்திருத்தல் வேண்டுமெனவும் எண்ண இடமுள்ளது.

கபிலருக்கும் முற்பட்டவராக வள்ளுவர் இச் செய்யுளுள் குறிக்கப்பட்டமை சிந்திக்கத் தக்கது.

ஏறத்தாழ ஔவையாருக்குச் சம காலத்தவர் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனுர் என்பது பின் வருவனவற்ருல் பெறப்படும். சாத்தனுர் 1 ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன். 2 வெற்றிவேற் செழியன். 3 தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். 4 பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆகிய நான்கு அரசர்களையும் பாடியுள்ளார். நால்வர் காலத்தும் வாழ்ந்துள்ளார்.

1. ஔவையாரால் பாடப்பட்ட பொகுட்டெழினியுடன் போரிட்டவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை. இவன் சாத்தனுரால் பாடப்பட்ட, தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுல் சிறைப்படுத்தப்பட்டிருந்தான்.

2. ஔவையாராலும், சாத்தனுராலும் பாடப்பட்டவன் பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி. இவனுடைய அவைக்களத்தின் கண்ணே திருக்குறள் அரங்கேற்றம் செய்யப்பட்ட தென்பர். இங்கேதான், நக்கீரர், உருத்திரசன்மர் போன்ற சிறந்த புலவர்கள் வீற்றிருந்து தமிழ் வளர்த்தனர்.

பாண்டியன் உக்கிரப் பெருவழுதியைக் கபிலர் பாடவில்லை. ஆகவே இவன் காலத்தில் அவர்

இல்லை என்பது தெளிவு. இவனுக்கு முன் அர சாண்ட தலையாலங் காலத்துச் செருவென்ற பாண் டியன் நெடுஞ்செழியனுடன் போரிட்ட, பொகுட் டெழினியின் தந்தை அதியமான் அஞ்சியுடன் போரிட்ட, பெருஞ்சேரலிரும் பொறையின் தந்தை யான செல்வக் கடுங்கோ வாழியாதனை இவர் பாடி யுள்ளமையால், இவர் உக்கிரப் பெருவழுதியின் காலத்திற்கு மிக முற்பட்டவர் என்பது தெளிவு. உக்கிரப் பெருவழுதியின் இளமைக் காலத்தில், ஔவை முதுமை யுடையவராய்த் திகழ்ந்தார். அவ்வாறே உக்கிரப் பெருவழுதியின் இளமைக் காலத்து சாத்தனாரும் முதியவர் என்பதாம். அது போது நக்கீரர் இளம் பருவத்தினர். உருத்திர சன்மர் மிக இளம் பருவத்தினர். அவர் குமரன் திரு அவதாரம் எனக் களவியல் உரை கூறுகின்றது.

உக்கிரப் பெருவழுதியின் அவையின்கண் திருக்குறள் அரங்கேற்றம் நடைபெற்றகாலை அதற்கு வாழ்த்துப்பாடிய பாக்களே திருவள்ளுவ மாலை என்போரும், பல சமயங்களில் புலவர் பலர் பாடிய வாழ்த்துச் செய்யுட்களே பின்னாளில் தொகுக்கப்பட்டதென்போரும், ஆகிய அறிஞர் இரு வகையினர். அவர்களுள் பிற்பட்டோர் கூற்றே சிறந்தது. கபிலர் பாடியதாக திருவள்ளுவ மாலையில் உள்ள வாழ்த்துப்பா, உக்கிரப் பெரு வழுதியின் சபையின்கண் பாடப்பட்டதாயிருத்தல் முடியாது. முன்னர் அவர் இயற்றியதே தொகுக்கப் பட்டதென்பதைப் புலப்படுத்தும். கபிலர் திருவள்ளு வருக்குப் பின் வாழ்ந்தவர் என்பதும், திருவள்ளுவ ருக்குப் பின்னரே திருக்குறள் அரங்கேற்றம் செய் யப்பட்ட தென்பதும் இதனால் உறுதிப்படும்.

கபில பரணர் திருக்குறள் அரங்கேற்றம் நடந்த காலை இல்லை என்பதும், அவர்கள் முன்பு பாடிய

செய்யுட்கள் திருவள்ளுவ மாலையில் சேர்க்கப் பட்டன என்பதும், அவர்களின் செய்யுட்கள் சிறப் பிக்கப்பட்டன என்பதும், மாலையின்கண் முதலிடம் அசரிரீ, நாமகள், இறையனுர் ஆகிய தெய்வங் களுக்கும் அதன்பின் அரசனுகிய பாண்டியன் உக் கிரப் பெருவழுதிக்கும் கொடுத்துவிட்டு, புலவர்கள் வரிசையில் கபிலர் பின் பரணருக்கு முதன்மை கொடுக்கப் பட்டதிலிருந்து நாம் அறியலாம்.

ஆகவே ஔவையின் இளமைக் காலத்தில் முதியவராய்த் திகழ்ந்தவர் கபிலர் எனவும், கபில ருக்கும் முற்பட்டவர் திருவள்ளுவர் எனவும், ஔவையும், சாத்தனுரும் சம காலத்தவர் என் பதும் உறுதிப்படவே நாம் முன்பு பார்த்த சாத்தனு ருக்கு ஒரு நூற்ருண்டுக்கு முற்பட்டவர் திருவள் ளுவர் என்பது மேலும் உறுதிப்படுகிறது.

மேலே கண்டவைகளிலிருந்து நாம் கொள்ள வேண்டிய முடிவுகள் :-

திருவள்ளுவர் கி. மு. முதல் நூற்ருண்டின் பிற் பகுதிக்கும் கி. பி. முதல் நூற்ருண்டின் முற் பகுதிக்குமிடையே தோன்றி, தனது வாழ்வின் இறுதிப் பகுதியான கி. பி. முதல் நூற்ருண்டின் பிற்பகுதிக்கும், கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் முற்பகுதிக்குமிடையே திருக்குறளை இயற்றினுர். பின்னர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் அவையில் திருக்குறள் அரங்கேற்றம் நடை பெற்றது. அப்போது திருக்குறளை வாழ்த்தி அதற்குமுன் பாடப்பட்டவைகளும், அக்காலத்தில் பாடப்பட்டவைகளும் திருவள்ளுவ மாலையாகத் தொகுக்கப்பட்டன. திருவள்ளுவ மாலை முழுவதும் திருக்குறளைப் பின்பற்றி வெண்பாவால் இயற்றப் பட்டுப் பிற்கால வெண்பா வளர்ச்சிக்கு அடிகோலியது என்பனவே.

திருக்குறள் தோன்றிய கால நிலை

தமிகத்தில் கி. பி. முதல் நூற்றுண்டில் நிலை பெற்றிருந்த சமயங்ள். 1. பிராமணரின் ஆதிக்கம் ஓங்கி இருந்த இந்து அல்லது (வைதிக மதம்), 2. பௌத்தம், 3. சமணம்.

தமிழரில் பௌத்தர், சமணர் நீங்கலாக உள்ள அனைவரையும் வைதீக மதம் தன்னுள் இரண்டறக் கலக்குமாறு செய்து, தான் அவைகளுடன் கலந்து விட்டது. ஆகவே பௌத்த சமணமில்லா மக்களுள் பிராமணரின் ஆதிக்கம் ஓங்கி இருந்தது. இவர்கள் தங்கள் வைதீக மதத்தை மக்கள் இடையில் நிலவ வைப்பதிலும், அது செல்வாக்கு அடையும் வழிகளையுண்டாக்குவலும் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இவர்கள் தங்கள் கருத்துக்கு மாறுன வர்களை எவ்விதத்திலும் அழிப்பதில் பின்னடையார்.

"சமணசமயம் பல விதத்தில் தாக்கப்பட்டது. கொடுமைப்படுத்தல், கழுவேற்றுதல், கொலை செய்தல், கலகம் விளைவித்தல், நிலபுலங்களைக் கவர்தல் முதலிய செயல்கள் நிகழ்ந்ததைக் காண்கிறோம். இவ்வாறு இந்துக்கள் சமண மதத்தை அழித்த செய்திகள் பல உள. இவற்றைச் சைவ வைணவ நூல்களில் ஆங்காங்கே காணலாம்"

மயிலை.சீனிவேங்கடசாமி(சணமும் தமிழும்.பக்-67)

"திராவிடர்களின் மனப்பண்பு உயர்வு ஒழுக்கத்தையே நாடி நின்றது என்பது திருக்குறளால் தெளிவாக விளங்குகிறது. தமிழ்ப் பெரு மக்களின் நல்லொழுக்கப் பண்பினுல் தான், புத்த மதம் இந்த நாட்டில் கால் கொண்டதெனக் கருதலாம். நெருப்பினுலும், போரினுலும் இரக்க மற்ற கொடுமையினுலும் பார்ப்பனர் புத்தமதம் இந்தியாவில் பரவாதபடி அழித்தனர். திருக்குறளை அழிப்பதற்குத் தகுந்த எந்தக் காரணத்தையும் பார்ப்பனர் கண்டிலர்."

அறிஞர் சார்லஸ். இ. கவர்-ஆசிரியர் இறையனுர்.
(திருக்குறள் ஆராய்ச்சி - பக். 57.)

திருக்குறள் பிராமணர்களுக்கு மாருன கருத்துக்கொண்ட நூல். அவர்கள் ஆதிக்கத்தை எதிர்ப்பது. ஆகவே, திருக்குறள் தமிழ் நாட்டில் பரவாதபடி அவர்கள் தங்களால் வேண்டிய முயற்சிகளை நிச்சயம் எடுத்திருத்தல் கூடும். அதன் காரணமாகவே, திருவள்ளுவரைப் பற்றிய எக் குறிப்புமே நமக்குத் திட்டமாகக் கிடைக்காமல் போயிற்று. குறளை அழிப்பதில் அவர்கள் முயற்சி தோல்வி அடையவே, குறளை இயற்றியவரை இழிவு படுத்தவும், தங்களை மேன்மைப் படுத்தவும் தொடங்கி வள்ளுவரை, பகவன் என்ற பிராமணனுக்கு மகனுக்கினர். மேலும் திருக்குறள் அவர்களையும் மீறிப் பொது மக்களிடையில் செல்வாக்குப் பெறவே அதை மறுக்க ஆற்ருது, தங்கள் வேதத்திலுள்ள கருத்தே இதிலும் இருக்கிறதென நம்பும்படி செய்தனர். இவர்கள் வேதம் எழுதாத வேதம். மற்றவர்களுக்குத் தெரியாத வேதம். ஆகவே அதைப் பற்றி என்ன சொன்னுலும் மற்றவர்கள் நம்பி ஆக வேண்டிய நிலே. எனவே, இந்நிலே வளர்க்கப் பட்டதன் காரணமாக மக்களும் மற்றப் புலவர்

களும் நம்பினர். இதன் பின்னரே திருக்குறள் வெளிப்படையாக விடப்பட்டது. அதுவரை அது ஏற்றுக் கொள்ளப் படவில்லை. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் திருக்குறள் அரங்கேற்றம் செய்யப் படாமைக்கும் காரணம் இதுவே. திருக்குறள் அரங்கேற்றம் செய்யப்பட்டதும், புலவர்களால் போற்றப்பட்டதும், மாற்றி யுரைக்கப்பட்டு அதாவது உண்மைநிலை மாற்றியமைக்கப் பட்ட பின்னரே. இந்த நிலையைத்தான் நாம் திருவள்ளுவ மாலையில் காண்கிறோம்.

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் அவர் நூல் அரங்கேற்றம் செய்யப்படவில்லை. மற்றவர்கள் அவருக்குச் சரியான இடம் கொடுக்கவில்லை. அது மட்டுமின்றி இவர் கருத்துக்களும் பலமாக எதிர்க்கப் பட்டன. ஏனெனில் அது எவ்வித மாற்றத்துக்கும் உட்படாமல் தூய்மையாக விளங்கியது. அது போது பிராமணர் ஆதிக்கம் பெருகிவரும் சமயம். இவர் கருத்துக்களோ அதை எதிர்ப்பவை

அக் காலத்தில் ஆரியக் கொள்கைக்கு பொது மக்கள் மட்டுமல்ல அரசர்களும், அறிஞர்களும் அடிமைப்பட்டுக் கொண்டிருந்தனர் என்பது, அரசர்கள் ஆரியர் கொள்கைக் கிணங்க யாகங்கள் இயற்றி, அதைச் சிறப்புப் பட்டமாகத் தங்கள் பெயரோடு சேர்த்துக் கொண்டதிலிருந்து விளங்கி நிற்கின்றது. அவ்வாறு தங்கள் பெயரோடு சேர்த்துக் கொண்டவர்களில் இலக்கியங்கள் மூலம் நமக்குத் தெரியக் கூடியவர்கள், 1 சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி. 2 பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போன்றவர்கள். யாகங்கள் இயற்றி, ஆனால் பெயருடன் சிறப்புப் பட்டமாகப் போட்டுக் கொள்ளாத அரசர்களையும் காணுகிறோம். மொத்தத்தில் பிராமணர் உயர்

வாகக் கருதப்பட்டு அவர்கள் கொள்கை மக்க ளிடையே வேரூன்றி இருந்தது.

புலவர்கள் அரசர்களுக்குக் கூறிய அறிவுரை சிலவற்றைப் பார்ப்போம்.

புறம். 6. காரிகிழார் என்றும் புலவர் அரசனுக்குக் கூறிய அறிவுரை :-

"இறைஞ்சுக பெருமநின் சென்னி! சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே."

புறம். 367. ஔவையார் அரசர்களுக்குக் கூறிய அறிவுரை :-

"ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
....
ஒன்று புரிந்து அடங்கிய இரு பிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்.

புறம். 34. ஆலத்தூர்கிழார் பாடியது :-

"ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும்
மாண் இழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும்"
பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும்......

புறம். 9. நெட்டிமையார் பாடல் :-

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்"

புறம். 15. நெட்டிமையார் :-

"நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்புன் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்"

புறம். 224. கருங்குழல் ஆதனார் பாடியது :-

“ முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி உருவின் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம்”

புறம். 122. கபிலர் பாடியது :-

“ கடல்கொளப் படாஅது உடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்துஅடிக் காரிநின் நாடே
அழல்புறம் தரூஉம் அந்தணர் அதுவே.”

மேலே காட்டப்பட்டவை சங்க இலக்கியங்களுள் புறநானூற்றில் மாத்திரம் உதாரணத்திற்காக ஆங்காங்கே எடுக்கப்பட்டவை. முழுவதையும் தொகுத்தால் மிகப் பெருகிய அளவில் காணப்படும் கருத்து இதுவாகும்.

இவ்வாறு சங்க காலத்தில் பிராமண மதம் அரசர்களின் ஆதரவுடனும், புலவர்களின் புகழுரைகளுடனும் வேரூன்றிய காலம். அரசன் பிராமணர்களுக்கு மாத்திரம் வணக்கம் செலுத்துதல் வேண்டும், கொடுக்க வேண்டும், யாகங்கள் இயற்றுதல் வேண்டும்; எனப் புலவர்களே போதித்த காலம். சங்ககால வரலாற்றிலேயே தமிழ்ப் பெருவேந்தர் மூவரும் ஒன்றுபட்டுத் தோன்றியதாக ஒரே வொரு இடம் குறிக்கப்படுகிறது. அந்தச் சிறப்புக்குரிய இடம் ஒரு யாக அரங்கமே யாகும். அது ஒரு பெரு விழாவாகத் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. பிராமணர் மற்றவர் யாவராலும் சிறப்பிக்கப்பட்டனர். புறம். 367.

புலாலுண்ணல், மதுவருந்தல், உயிர்க்கொலை, பல பெண்ணை மணத்தல் இவை எல்லோராலும்

ஏற்றுக்கொள்ளப்பட்ட காலம். இதை விளக்கும் இலக்கியச் சான்றுகள் ஏராளம் உண்டு.

இப்படிப்பட்ட காலத்தில் நடை முறைக்கு நேர் முரணுன, அதிலும் ஆதிக்கம் பெற்றேரங்கும் பிராமணர்களுக்கு மாறுன கருத்தைத் தெரிவித்தால் பலன் என்ன கிடைக்குமோ அதுவே வள்ளு வருக்கும் கிடைத்தது.

இப்படிப்பட்ட சீர்திருத்தக் கருத்துக்கள் வள்ளுவரிடமிருந்து புறப்படக் காரணமா யிருந்தவை எவை? அவை அவரது மெய்பொருள் காணும் பேரவாவும், ஆழ்ந்த நுண்ணறிவுமே யாகும். எவர் கூறும் எக்கருத்தையும், தன் நுண்ணறிவாம் மனக்கோலில் இட்டு சீர்தூக்கும் செம்மலாக விளங்கினுர் வள்ளுவர். மற்றவர் கூறு வதை அப்படியே ஏற்று ''ஆமாம்'' போடுபவர் அல்ல. அதே நேரத்தில் அதை பொருட் படுத்தாது தள்ளி விடுபவருமல்ல. அதிலே மெய்ப் பொருளைக் காண்பவர்.

சங்க கால நூல்களோடு திருக்குறளை நாம் ஒப்பிட்டு நோக்குங்கால், சமையத் துறையிலும், ஒழுக்க நிலையிலும் இது மாறுபட்டுத் தோன்றுவது ஏன்? புலவர்கள் பெரும்பாலும் பிராமண வழியை ஏற்றுக்கொண்டு அதையே சிறப்பித்துப் பாடி யுள்ளனர். இவர் அதை முழுவதுமாக எதிர்த் துள்ளார். அப்படியானுல் அக்காலத்து ஆங்காங்கே நிலவியிருந்த பௌத்த சமண மதங்களைப் பின் பற்றினுரா? ஆழ்ந்து நோக்குங்கால் சமணத்தின் சாயல் இவர் கருத்துக்களுள் இடையிடையே மின்னி மறைகின்றன. ஆனுல் சமண அடிப் படைக்கு மாறுன கருத்துக்களையும் காட்டிள்ளார். மொத்தத்தில் இங்கு நிலவிய சமயங்களுள் பௌத்த சமணத்தின் சாயல் ஓரளவு தோன்றுவதை யாரும்

மறுப்பதற்கில்லை. இதன் காரணம் அக்காலை இங்கிருந்தவைகளுள் பௌத்தமும், சமணமும் ஓரளவு கொள்கையால் சிறப்புற்று விளங்கியமையேயாகும்.

இக்காரணங் கொண்டுதான் சங்க இலக்கியங்களிலோ, அல்லது சங்கம் மருவிய காலங்களிலோ முதன் முதலில் திருவள்ளுவரின் கருத்தை ஏற்றுத் தன் நூலிலே முழுக் குறளாக எடுத்தாண்டவர்கள், ஒரு சமணரும் ஒரு பௌத்தருமேயாவர். இவர்கள் யாரெனில், இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனுருமேயாவர்.

இவர்களுக்குப் பின்னரே பிற்காலத்தினர் திருக்குறளைக் கையாளத் தொடங்கினர். இதற்கிடையே வேறு வழியுமின்றி, குறளின் செல்வாக்கையும் அடக்க முடியா நிலையில், பிராமணர் தங்களின் கருத்துக்கு மாருகப் பொது மக்களிடையே திருக்குறள் செல்வாக்குப் பெறும் நிலையையுணர்ந்து, திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர், யாக அரங்கத்தில் மூவேந்தரில் ஒருவனுக விளங்கிய பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் சபையிலே, குறள், வடமொழி வேதத்துக்கு ஒப்பானது, பிரம்மாவே எழுதியது, மனு, இராம காவியம் மகாபாரதம் இவைகளுக்குச் சமமானது, அதாவது மேலானது அல்ல, ஆகவே பொது மக்கள் பிராமணர் கொள்கையைவிட இதுவே சிறப்பானது என எண்ண வேண்டியதில்லை, என்ற கருத்தில் புலவர் பலரும் அதற்குப் பாமாலை பாடி மாற்றுருவம் கொடுத்து மக்கள் மத்தியில் வெளியிட்டனர். இவர்கள் கூற்றுக்கு எதிர்ப்புக் கொடுப்பதற்குத் திருவள்ளுவர்தான் உயிருடன் இல்லையே அப்போது.

இவ்வாறு ஆசிரியரைப் பற்றிய வரலாறு அத்தனையையும் மாற்றி, நல்ல வேளையாகத் திருக்குறளை

மட்டுமாவது தப்பும்படி விட்டனரே. இதையும் மாற்றுவதில் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை போலும்.

திருக்குறளையும் முதன்முதல் மேற்கோளாகக் கையாண்டவர், சமணரும் பௌத்தருமே என்பதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

வள்ளுவர் திருக்குறளை ஓர் சமய நூலாக எழுதி யிருந்தால், அல்லது ஒரு காவிய உருவில் எழுதி யிருந்தால், அவரது சமயத்தை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடியும். ஆனால் திருக்குறள் ஓர் சமய நூல் அன்று. அது ஓர் அறநூல். சமய நூலாக இருந்திருக்குமாயின் அது இவ்வளவு காலத்தைக் கடந்திருக்க முடியாது. அழிக்கப் பட்டவைகளோடு சேர்த்து அழிக்கப் பட்டிருக்கும்.

அறநூலிலே நாம் சமயத்தை அறிய முடியுமா? ஆம், திட்டமாக அறிய முடியும். யார் எந்தச் சமயத்தின் அல்லது கொள்கையின் ஆதரவாளரா யிருக்கின்றாரோ, அவர்கூறும் அறக் கருத்துக்களுள், அவர் கொள்கை ஊடாடி இணைந்து செல்லுவதை நாம் நுட்பமாக நோக்கின் அறிய முடியும். இனிநாம் திருக்குறளையும் அப்போது தமிழ் நாட்டில் இருந்த சமயங்களையும் ஒப்பிட்டு ஆராய்வோம்.

அதற்கு முன் வள்ளுவத்தின் உண்மைக் கொள்கை, மறுபிறவி, ஊழ் என்பனவற்றில் எவ்வாறு இருக்கிறது என்பதை ஆய்வோம்.

திருவள்ளுவர் காட்டும் மறு பிறவி

மறு பிறவி என்பது உடல் அழிந்து உயிர் பின் புதிய உடலுடன் தோன்றுதலைக் குறிக்கும் என்பர். திருவள்ளுவர் இவ்வகையான மறு பிறவியை ஏற்றுக் குறள் யாத்துள்ளாரா? அன்றி அவருக்கு இத்தகைய மறுபிறவி உடன்பாடில்லையா? என்பதை ஆராய்வோம்.

இதுவரை குறளுக்கு உரை கண்டார் அனைவரும் பெரும்பாலும் வள்ளுவர் மறுபிறவிக் கொள்கையுடையவர் எனக் கொண்டே உரை கண்டுள்ளனர். அவ்வுரைகளையே கற்றுவரும் தமிழ் மக்கள் பெரும்பாலும் உரையாசிரியர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். உரையாசிரியரின் கருத்துக்கள் சரியாகவும் இருக்கலாம், அல்லது தவருகவும் இருக்கலாம். உரையாசிரியர்கள் கருத்து ஒருபுறமிருக்க இப்போது மெய்ப்பொருள் காணும் வழியில் நாம் செல்லுவோம்.

பிறவி உண்டு என்ற கொள்கையுடையவர்கள் காட்டக் கூடியவை :-

வள்ளுவர், எழுபிறப்பு, எழுமை, என பிறவி ஏழு வகையுண்டு எனக் கூறுகின்ருர். பரிமேலழகரும் இந்த ஏழு பிறவிக்கு வகை கூறுங்கால்

ஊர்வ பதினொன்று மொன்பது மானுட
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ்—சீரிய
பந்தமாந் தேவர் பதினாலயன் படைத்த
வந்தமில்சீர் தாவரநா லைந்து.

எனனும் செய்யுளை ஏது காட்டியுள்ளார். இச் செய்யுள் ஊர்வனவற்றில் துவங்கி தாவரத்தில் முடிந்தாலும், ஓரறிவுயிராம் தாவரம்முதல் ஆறறிவுயிராம் மனிதன் ஈருக ஆறு பிறவியாகவும், தேவரை ஏழாம் பிறவியாகவும் கொண்டு கூறப்பட்டுள்ளது. இப்பிறவி ஏழனுள் உயிர்கள் சுழன்று சுழன்று வந்து கொண்டிருக்கின்றன. மனிதர்களுக்கு மாத்திரமல்ல தேவர்களுக்கும் மறு பிறவியுண்டு. புல்லாயிருக்கும் ஒருயிர் மறுபிறவியில் தேவராகலாம். தேவராக இருக்கும் உயிர் மிருகமாகலாம். இப்படியே மிருகம் மனிதனுவதும், மனிதன் மிருகமாவதுமாகச் சுழன்றே வந்து கொண்டிருக்கின்றன. இச் சுழற்சியினின்றும் உயிர் விடுதலை பெறுதலே முக்தி, சமாதி, பேரின்பம், மோட்சம் அல்லது சுவர்க்கம்.

பிறவிக்கும் காரணம் மயக்க உணர்வு.

பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணுப் பிறப்பு.

மயக்க உணர்வு அவாவை உண்டாக்குகிறது. அவா பிறவி ஏற்படுவதற்குக் காரணமாகிறது.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து

அவா நீங்க, வேண்டாமை தோன்றும்.

வேண்டுங்கால் பிறவாமைவேண்டும் மற்றது
வேண்டாமை வேண்ட வரும்

வேண்டாமை தோன்ற பற்று நீங்கும். பற்று நீங்கவே பிறப்பு நீங்கும்.

*பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்.*

பிறப்பு நீங்கவே செம்பொருள் தோற்றமளிக்கும்.

*பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு*

செம்பொருள் கண்டவர்கள் இறைவன் பாதத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். இறைவன் பாதத்தைச் சேர்ந்தவர்கள் பிறவியாகிய பெருங்கடலைக் கடக்கிறார்கள்.

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.*

இவ்வாறு பல படிகளையும் கடந்து செல்லுவதற்கும் இறைவன் பாதத்தை யடைவதற்கும், கல்வி, அடக்கம் முதலிய சிறந்த குணங்கள் அவசியம்.

*கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.*

ஆகவே கற்க வேண்டியவற்றைக் கற்ற சான்றோர்களுக்கும், ஐம்புலன்களையும் அடக்கிய மேலோர்க்கும் பிறவித் துன்பம் நீங்குகிறது. அவர்கள் பேரின்ப நிலையை அடைகின்றனர்.

ஆய்வு :-மேற்கூறப்பட்ட மறு பிறவிக் கொள்கைக் கிணங்க வள்ளுவரைக் கொண்டால்,

பிறவித் துன்பம் நீங்கவேண்டிய, கல்விகற்ற சான்றோர்களுக்கும், ஐம்புலன்களையும் அடக்கிய மேலோர்க்கும் ஏழுவகைப் பிறவியும் விடாது தொடர்ந்து வருவதாகக் கூறுகிறார்.

***ஒருமைக்கண் தான்கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து
ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து***

மேல்நிலை அடைவதற்குப் பயன் படுவதல்லவா கல்வி. அக்கல்வி இவ்வாறு கீழ்நிலைக்கு வழி நடத்தலாமா? அதைச் செய்யுமா?

ஐந்தடக்கலானது, ஐந்தவித்தான் ஆற்றல், பொறிவாயில் ஐந்தவித்தான் ஆகிய இறைத் தன்மையோடு அல்லவா ஒத்து நடைபெறுவது. இத்துணை சிறந்த தன்மையுடைய ஐம்புலனையும் அடக்கியவர்களுக்கும் அடுத்த பிறவியுண்டா? அவர்களுக்கு ஏன் பிறவி நீக்கம் இல்லை? அடுத்த பிறவியும்கூட அவர்களுக்கு எவ்வாறு அமைகிறது; ஏழுவகையில் ஒன்று. அதாவது ஐம்புலனோடு பிறந்து அதை அடக்கியவர்கள், அடுத்த பிறவியில் ஐந்து புலன்கள்கூட இல்லாத ஒரு புலனையுடைய ஓரறிவுயிராகப் பிறப்பார்களா? அடக்கியவர்களுக்கு இழிவா? அடக்குவதற்குக்கூடப் புலன் இல்லையே? ஓரறிவு, இழிந்த பிறவியாகவும் கூறப்படுகிறது. உயர்ந்த பிறவியிலிருந்து இழிந்த பிறவியாகக் காரணம் என்ன?

அடுத்து, பிறிதோர் இடத்து வள்ளுவர் சிறந்தவைகளைச் செய்யாது விட்டவர்களுக்கு, அதாவது செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விட்டவர்களுக்கு ஏழுவகைப் பிறப்பும் இல்லை எனக் கூறுகின்றார்.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

அப்படியானால் இவர்கள் இப்பிறவியிலேயே செய்ய வேண்டியவைகளைச் செய்யாத காரணத்தால், ஏழு வகையில் எதிலுமே பிறக்காது பிறவி நீக்கம் பெற்று விடுகிறார்களா? அப்படித்தானே சொல்லுகின்றார் வள்ளுவர்.

மேலும் நன்மக்களைப் பெற்றெடுத்த மேலோர்க்கும், நன்றியறிதலுள்ள சான்றோர்க்கும் ஏழுவகைப் பிறவியும் விடாமல் தொடர்ந்து வருகிறது.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

நல்ல பிள்ளைகளைப் பெற்றால் ஏழு பிறவியிலும் தீமை வராது. ஆகவே தீமையில்லாமல் வரக்கூடிய ஏழுவகைப் பிறவியும் உண்டு. பிறவியே தீமைதானே. பிறவியைவிடத் தீமையை கொடுக்கக் கூடியது வேறு என்ன இருக்கிறது?

அடுத்து விழுமந்துடைத்தவர் நட்பை நினைக்கக்கூடிய நல்லோர்க்கு ஏழுவகைப் பிறப்பு ஏன்? அப்படியே பிறவி வந்தாலும், நன்மை செய்தவர்களை, வருகிற பிறவிதோறும் நினைக்க முடியுமா? அப்படி அடுத்த பிறவியில் மறதி இல்லையானால் சென்ற பிறவியில் நமக்கு நன்மை செய்தவர்கள் யார்? யார்? என நம்மில் யாருக்காவது நினைவு இருக்கிறதா? இல்லையானால் இல்லாக் கருத்தை வள்ளுவர் கூறலாமா?

அடுத்து, நல்லறத்தை நாள்தோறும் விடாது செய்துவந்தால், அவ்வாறு செய்யப்படும் அறம், அவன் வாழ்நாளைக் குறைக்கும் தடைக் கல்லாக நிற்கின்றது.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழி அடைக்குங்கல்.

இறைவன் பாதத்தைச் சேர்ந்தால் அவர்களுக்கு நீண்ட வாழ்நாள் உண்டு.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்.

மலர்மிசை ஏகிஞன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

இறைவன் வாழ்நாளை நீட்டிக்கிருர். அறம் வாழ் நாளைக் குறைக்கிறது. என்ன காரணமோ?

மேலே காணும் முறைப்படிதான் திருவள்ளுவருக்குப் பொருள் கூறப்படுகிறது. திருவள்ளுவர் இம்முறையில் தவருக இயற்றியிருக்கிருரா? அல்லது உரையாசிரியர்கள் இம்முறையில் தவருகப் பொருள் கூறுகின்ருர்களா?

திருவள்ளுவர் மீது குறையைச் சுமத்த எந்த அறிஞரும் முன்வரமாட்டார்கள் என நம்புகிறேன். நாம் காணும் பொருளில் களங்கம் இல்லை. ஆனல் நாம் அணிந்திருக்கும் கண்ணுடியில்தான் ஏதோ மாற்றம். கண்ணுடியைச் சரி செய்தால் பொருளைத் தெளிவாகக் காண முடியும். அவ்வேலையைத் துவக்குவோம்.

மறுபிறவியைப் பற்றி வள்ளுவர் கூற்று:--

மறுபிறவி உண்டு என்ற கொள்கை வள்ளுவருக்கு இருக்குமாஞல் அதைப்பற்றி அவர், கூற வேண்டிய இடம் 'ஊழ்'. அதில் அவர் அதைப் பற்றி எவ்விதக் குறிப்புமே கொடுக்காததுடன், அவர் கொள்கை வேறு என்பது 'வள்ளுவர் காட்டும் ஊழ்' என்னும் தலைப்பில் நிறுவப்படும். ஒரு பிறவியில் செய்யும் நன்மையோ தீமையோ மறு பிறவியில் ஊழில், ''ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்'' என்ற கொள்கைக் கேற்ப கூறியிருத்தல் அவசியம். வள்ளுவர் அவ்வாறு கூற வில்லை.

அடுத்து, 'நிலையாமை' என்ற தலைப்பின் கீழ் வள்ளுவர் உலகத்தின் சிறப்பு ஒவ்வொன்றும் நிலையாது எனக்கூறி, உடல் நிலையாமையையும், உடல் திருப்பக் கிடைப்பதில்லை என்பதையும் வலியுறுத்துகிறார். உடல் நிலையில்லாதது; ஆகவே இருக்கும்பொழுதே நன்மையைச் செய்; என்று நிலையாமையின் மூலம் அறத்தை வலியுறுத்துகிறார். திரும்பப் பிறக்கும் பிறவி இருந்தால், இப் பிறவியில் அவசரம் ஒன்றும் இல்லை. இதில் இல்லாவிட்டால் இன்னொன்றில் பார்த்துக் கொள்ளலாம். அதிலும் இல்லாவிட்டால் அடுத்தது, என்ற எண்ணமே மேலோங்கி உடல் நிலைத்து, மாறிமாறி வரும் தன்மையை வெளிப்படுத்தி, நிலையாமை என்ற தலைப்பினின்றும் மாறுபடும்.

திருவள்ளுவர் கருத்தில் சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

1. நீ நிலைத்து உலகிலே வாழுவேன், என நினைக்கிறாயோ? அந்தோ உன் வாழ்நாளாம் ஆயுளை ஒவ்வொரு நாளும் வாளாக நின்று அறுத்துக் கொண்டே குறைத்து வருகிறதே?

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார் பெறின்.

ஆகவே நிலையாமை யுடையது இந்த வாழ்நாள். இனி இப்படி வாழ்நாள் வரக்கூடியதும் அன்று. ஆகவே நிலையாத வாழ்நாளில் நிலைத்த செயல்களைச் செய்வாயாக.

2. அடுத்து உயர் பிறவியும், தாழ்ந்த பிறவியும் இந்த ஒரு பிறப்பிலேயே ஏற்படுகிறது எனக் கூறிச் செத்துப் பிறத்தலை மறுக்கிறார்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

இதற்குப் பொருள் கூறும் பரிமேலழகருக்கும் செத்துப் பிறத்தல் கருத்தைக் கொண்டுவர முடிய வில்லை. உயர்ந்த தன்மையும் இழிந்த தன்மையும் இப் பிறவிலேயே ஒழுக்கம் காரணமாக ஏற்படு கிறது. ஆகவே செத்துப் பிறக்கும் மறுபிறவி ‘ பிறப்பாய்விடும் ’ என்பதற்குக் கொள்ளமுடிய வில்லை.

3. நாம் பெரும்பாலும் நமது விருப்பப்படி தூங்கலாம். ஆனல், நம் விருப்பப்படி எழும்ப முடியாது. எப்படி எனில் நம்மை எழுப்புவதற்குப் புறக் கருவிகளை நாம் ஏற்பாடு செய்திருத்தல் அல்லது சரியாகத் தூங்கா நிலை இவ்விரண்டின்றி இரவு பத்து மணிக்குப் படுத்த நாம் 11-15க்கு எழும்புதல் முடியாது. இதுபோன்றே வாழ்விலும் பெரும்பாலும் நமது விருப்பப்படி சாகலாம். ஆனல், நமது விருப்பப்படி பிறக்க முடியாது. ஆகவே, அருமையாகக் கிடைத்திருக்கும் இப் பிறவியை பயன் படுத்திக் கொள் என்ற கருத்தில் வள்ளுவர் கீழ்க்காணுமாறு சொல்லுகின்றர்.

உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு.

இங்கு மறுபிறவிக் கொள்கையைக் கொண்டால் நிலையாமை என்ற தலைப்பின் நின்றும் மாறுபட்டு உடலானது ஏதாவது ஒரு உருவில் நிலைக்கும் என்று பொருள்பட்டுச் சிதைந்து போதலை அறிக.

4. வள்ளுவர் உயிரைப் பறவைக்கும் உடம்பை முட்டைக்கும். ஒப்பிட்டு மறுபிறவி இல்லை எனக் கூறுகிறர்.

பறவை முட்டையில் இருந்து வெளிவந்தபின் ஓடு அழிவடைகிறது. உயிர் உடலில் இருந்து வெளிவந்தபின் உடல் அழிவடைகிறது. பறவை திரும்ப வேறு எந்த முட்டையினுள்ளும் நுழைய முடியாது, அதேபோல் உயிர் திரும்ப வேறு எந்த உடலினுள்ளும் நுழைய முடியாது.

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு 335

ஆகவே உனக்கு வேறு பிறவி இல்லை. இப் பிறவிலேயே நன்மை செய்து வாழ்வாயாக என்ற கருத்து இதன் மூலம் விளக்கப்படுகிறது.

5. உனக்குக் கிடைத்திருப்பது இந்த ஒரே ஒரு பிறவியே. ஆகவே, இப்பிறவிக்காலத்தினுள்ளேயே நல்வினையைச் செய்து புண்ணியத்தை ஈட்டிக் கொள். இப்பிறவி போனால் வரும் பிறவி இருக் கிறது பார்த்துக் கொள்ளலாம் என எண்ணி விடாதே. அப்படி இனி ஒரு பிறவி இல்லை. இருக்கிறது என யார் சொன்னாலும் நம்பி விடாதே. ஆகையால் நாவை அடக்கி விக்கல்மேல் எழும்பி நீ இறப்பதற்குமுன் நல்வினையை செய்து கொள்வாயாக.

நாச்சென்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும்.

மேலே நாம் கண்டவைகளில் இருந்து செத்துப் பிறக்கும் மறுபிறவிக் கொள்கை திருவள்ளுவருக்கு உடன்பாடன்று என்பது தெளிவு.

இனி வள்ளுவர் எழுமை, எழுபிறப்பு, பிறப்பு இவைகளை என்ன பொருளில் ஆண்டுள்ளார் எனக் காண்போம்.

வள்ளுவர் தனது நூலில் 'பிறப்பு' என ஏறத்தாழப் பதினைந்து இடங்களிலும்; 'எழுமை' என ஐந்து இடங்களிலும்; எழு பிறப்பு என இரண்டு இடங்களிலும் கூறியுள்ளார். இவை தவிர, இப்பொருள் தோன்றக்கூடிய இடங்களும் சில உள.

பிறப்பு; எழுமை; எழு பிறப்பு; ஆகிய மூன்று சொற்களுக்கும் ஏறத்தாழ ஒரே பொருள் கொண்டமையாலேயே இவ்விடர்ப்பாடும், வள்ளுவர் கருத்தினையே பிறழ உணரும் நிலையும் ஏற்பட்டது எனலாம்.

பிறப்பு என்னும் சொல்லுக்கு, இவ்வாறெல்லாம் மாற்றங்கள் வரக்கூடுமென முன்னறிந்ததால்தானோ வள்ளுவர் தன் நூலிலேயே பொருளையும் கூறிச் சென்றுள்ளார். அவரிடம் பொருள் கேட்டால் நமக்கு உறுதியாக இடர்ப்பாடு தோன்றாது.

அவர் கூறும் பொருள் :—

பிறப்பு என்பதன் பொருள் பேதைமை எனத் தெளிவாகவே கூறியுள்ளார். பேதைமை என்றால் என்ன பொருள் என நாம் மயங்கிவிடக் கூடாதே என

பேதைமை என்பதொன்று யாதெனில் ஏதங்கொண்
டூதியம் போக விடல் 831

பேதைமை ஏதங்கொண்டு ஊதியம் விடல். அதாவது கேட்டைக் கைக்கொண்டு ஆக்கத்தை விட்டு விடல். நன்மையை விட்டுத் தீமையைப் பின்பற்றல். இதையே வற்புறுத்தும் நிலையில்,

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணுப் பிறப்பு 351

என்னும் இக்குறளிலும் அதே கருத்தினைத் தெரிவித்துள்ளார். ஆகவே, பிறப்பு என்பது மயக்க

உணர்வைப் புலப்படுத்தி நிற்கிறது. எழு பிறப்பு என்பது இயற்கை யான இந்த மயக்க உணர் விலிருந்து எழுந்து, அதாவது உயர்ந்துவரும் தன் மையைக் குறித்து நிற்கிறது.

பிறப்பு நீக்க வேண்டும்.

எழு பிறப்பு நோக்க வேண்டும்.

ஒருவன் மயக்க உணர்விலிருந்து விடுபட்டு மேனிலை அடையுங் காலத்தில், பழி பிறங்காப் பண் புடை மக்களைப் பெற்றிருப்பானுனல் தீமை அவனை அணுகாது. அவ்வாறின்றி நற்பண்பில்லா மக்களை யுடையவனுயிருக்குங்கால், இவன் உயர்வடைந் தாலுங்கூட, பிள்ளைகள் காரணமாக இவனுக்குத் தீயவை தீண்டக்கூடும்.

எழுபிறப்பும் தீயவை தீண்டாப்பழி பிறங்காப்
பண்புடைய மக்கட் பெறின் 62

அவ்வாறே தன் துன்பத்தை நீக்கியவரின் நட்பினைச் சிறந்தவர்கள் எக்காலத்திலும், அதிலும் சிறப்பாகத்தான் உயர்வாக வாழுங் காலத்திலும் மறக்காது எண்ணிப் பாராட்டுவர்.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு 107

எழுமை என்பது என்ன பொருளில் வந்ததென் பதையும் நோக்குவோம். எழுமை என்பது குறளில் வந்திருக்கும் 5 இடங்களுள், ‘ஒருமை’ என்பதுடன் இயைந்து மூன்று இடங்களிலும், தனித்து இரண்டு இடங்களிலும் வந்துள்ளது. ஒருமை என்பது ஒரு நிலை என்னும் பொருளையும் ‘எழுமை’ என்பது ஏழு என்னும் எண்ணுப் பொருளை யுணர்த்தாது பல நிலை என்னும் பொருளையும் உணர்த்தி நிற் கிறது என்பதே சிறப்பு.

-ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும்
ஏமாப்புடைத்து;
-ஒருமையுள் ஐந்தடக்கல் எழுமையும்
ஏமாப்புடைத்து
-ஒருமைச் செயலாற்றும்பேதை எழுமையும்
புக்கழுந்தும் அளறு;

-ஒரு நிலையில் கற்ற கல்வி பல நிலையிலும் பாது காப்பு. பொருள் அவ்வாறல்ல. அழியக் கூடியது. கல்வி அழியாதது. இளமையில் கற்றது முதுமையிலும், பயன்படும். அவ்வாறே ஒரு நிலையில் அடக்கம் பழகியவனுக்கு அவன் வாழ்வில் வருகின்ற பல நிலையிலும் அவனுக்கு அது பாது காப்பாகி, மேன்மையையும் கொடுத்து நிற்கும். ஒரு நிலையில் பேதை செய்யும் செயல் அவன் வாழ்வின் பல நிலையிலும் அது அவனுக்குத் துன்பத்தைக் கொடுத்து நிற்கும்.

அவ்வாறே தங்கண் விழுமந்துடைத்தவர் நட்பினைச் சான்ருேர், தாங்கள் பல நிலையால் உயர் வடையுங் காலத்திலும், மறக்காது போற்றுவர் என்பதை எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் என்பது உணர்த்தி நிற்கின்றது.

இங்கு குறிக்கப்படும் பலநிலை என்பது உயர்வுக் குறியதேயன்றித் தாழ்வுக் குறியதன்று. ஆகவே, உயர்வுக்குரிய பல நிலைகளை உணர்த்துங்கால் 'எழுமை' என்னும் சொல்லைக் கையாண்டுள்ளார்.

புகழ்ந்தவை போற்றிச் செய்யாது இகழ்ந் தார்க்கு எழுமையும் இல் என்பதும் இதையே குறித்து மறதியை உடையாருக்கு உயர்வுக்குறிய பலநிலை களும் இல்லை என்பதைக் காட்டிற்று.

ஆகவே, நாம் மேலே கண்டவைகளிலிருந்து பிறப்பு, எழு பிறப்பு, எழுமை என்பன செத்துப் பிறக்கும் மறு பிறவியை உணர்த்தி நிற்கவில்லை என்பதே தெளிவு.

அவ்வாறன்றி பிறப்பு, எழு பிறப்பு, எழுமை, என்பன, உரை ஆசிரியர்களின் கருத்திற்கிணங்க செத்துப் பிறக்கும் பிறவியையே உணர்த்தி நிற்கு மானல் வரக்கூடிய முரண்பட்ட கருத்துக்கள் :-

1. கல்வி கற்றவர்கட்கும், ஐம்புலன்களையும் அடக்கியவர்களுக்கும், எழுவகைப் பிறவியும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்து புகழ்ந்தவை போற்றிச் செய்யார்க்கு ஏழு பிறவியும் இல்லை.

2. பேதைக்கு, ஏழு பிறவியும் உண்டு. அதே பிறவி தங்கண் விழுமந்துடைத்தவர் நட்பினை உள்ளக்கூடிய சிறந்தவர்களுக்கும், பழி பிறங்காப் பண்புடை மக்களைப் பெற்ற சான்றோர்களுக்கும் உண்டு.

3. இறைவன் பாதத்தை வணங்குகின்றவர் களுக்கு நீண்ட ஆயுள் உண்டு. ஆனல், இடை விடாமல் நன்மையைச் செய்தால் அந்த நன்மையே ஒருவன் வாழ்நாளுக்குத் தடைக் கல்லாகும். இதன் கண் வாழ்நாள் வழியடைக்குங்கல் என்பதற்குப் பல பிறவியாகிய வாழ்நாளைக்குறைக்கும் ஏது எனக் கொண்டால், நீடு வாழ்வர் என்பது அதிக மான பிறவி எடுத்துப் பிறவித்துன்பத்தில் மூழ்கு வர், அதாவது இறைவன் பாதம் பிறவித் துன்பம் நீக்குகிற தென்பது மாறி பிறவித்துன்பம் நீடிப் பதற்குக் காரணமாகிறதெனப் பொருள்படும்.

4. ஓரிடத்தில் கல்வி கற்றவர்கட்குப் பிறப்புண்டு எனக் கூறிய வள்ளுவர் பிறிதோரிடத்து, கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரானெறி என, ஒன்றிற் கொன்று மாறுபடக் கூறியுள்ளார். இவ்வாறு ஒன்றிற் கொன்று நேர் முரணுகக் கூறல் வள்ளுவர்மீது விழுந்த பழியாகும்.

5. அவ்வாறே பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு எனக் கூறிய வள்ளுவர், இறைவன் பாதம் சேர்ந்தோர், பிறவியாம் பெருங்கடலை நீந்துவர் எனக் கூறிப்; பின்னர் மாணடி சேர்ந்தார் நீடுவாழ்வார், நெறி நின்ருர் நீடுவாழ்வார் எனப் பிறவித் துன்பம் நீளுமென, மாறுபடக் கூறுகிருர்.

கீழ்க்கணும் குறட்பாக்கள் ஒன்றிற்கொன்று முரணுய் இருப்பதையும் அறிஞர் ஆய்க.

1 வாழ்நாள் மேல் உயிருண்ணுங் கூற்றும் செல்லாது. 326

நன்ருற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்குங்கல். 38

கொல்லாமை யாற்றின் - வாழ்நாள் நீடிக்கும்
நன்ருற்றின் - வாழ்நாள் குறையும்.

2 ஓரைந்துங் காப்பான் வைப்பிற்கு வித்து - 24

ஐந்தடக்கலாற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து 126

ஐந்து காத்தல் - பிறவி நீக்கம்.

ஐந்து அடக்கல் - பிறவி ஆக்கம்.

3 பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் - 349
ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து - 126

பற்றற்றவர்க்கு - பிறவி நீக்கம்.

பற்றின்றி ஐந்து அடக்கியவர்க்கு - பிறவி ஆக்கம்.

4 புகழ்ந்தவை இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் - 538
தங்கண் விழுமந்துடைத்தவர் நட்பினை எழுமை எழு பிறப்பும் உள்ளவர் -107

இழிந்தோர்க்கு ஏழு பிறவியும் - இல்லை.

உயர்ந்தோர்க்கு ஏழு பிறவியும் - உண்டு.

இவ்வாறு பிறத்தல் என்பதற்குச் செத்துப் பிறத்தலைப் பொருளாகக் கொண்டால் வள்ளுவர் மீதும் அவர் கருத்துக்களின்மீதும் குறையையும் பழியையும் சுமத்தியவர்கள் ஆகி நிற்கின்றோம். குறையும் பழியும் நம்மிடமுள்ளதே யன்றி வள்ளுவர் இடமோ அல்லது அவர் கருத்துக் களிடமோ இல்லை என்பது தெளிவு.

நாம் முன்பு கண்ட பொருளாம்,

பிறப்பு - பேதைமையின் காலம்
எழு பிறப்பு - உயிர்வடையுங் காலம்
ஒருமை - ஒரு நிலை
எழுமை - பல நிலை

எனப் பொருள் கொண்டால் இவ்வகை இடர்ப்பாடு நீங்குதலை உணர்க.

‘செத்துப் பிறத்தலைப்பற்றித் தமிழ் முனிவராம் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களும் தாம் இயற்றிய செத்துப் பிறத்தல் என்னும் நூலில்.

பிறந்தான் வளர்ந்தான் இறந்தான் மீண்டும்
பிறந்தான் வளர்ந்தான் இறந்தான் என்னல்
பருமைப் பேச்சே நுண்ணிய தன்று ;
நாளும் நொடியும் நாளும் நொடியும்
பிறத்தலும் வளர்தலும் இறத்தலும் உண்டே.
58-62.

எத்தனைக் கொலைஞர் எத்தனைக் கள்வர்
எத்தனைக் குடியர் எத்தனைத் தூர்த்தர்
எத்தனைப் பொய்யர் எத்தனைக் கபடர்
சித்தம் திரும்பிச் செத்துப் பிறந்தனர்
சித்தம் திரும்பல் செத்துப் பிறத்தலே
மறப்பும் நினைப்பும் இறப்பும் பிறப்பாம்''
193-198

எனக் கூறியுள்ளார். ஆகவே செத்துப் பிறத்தல் என்பது உடல் சாவைக் குறியாது உள்ளம் மாறிப் பிறத்தலையே குறித்தல் சிறப்பு என்பர். மனிதன் இயற்கையில் குறைபாடுள்ளவன், பேதைமை யுடையவன், பாவத்தையுடையவன். (பாவம் - குற்றம்) அவன் உள்ளம் மாறிப் பிறக்க வேண்டும். எழு பிறப்பினையடைய வேண்டும். அதாவது, பேதைமையிலிருந்து எழ வேண்டும். அப்போது அவன் மேனிலை அடைவான். இவ்வாறு உள்ளம் மாறிப் பிறப்பதைத்தான் சிறந்த மதங்கள் வற் புறுத்துகின்றன.

இயேசு நாதர் கூறுவதும் இந்த உள்ளம் மாறிப் பிறத்தலையே. இவரிடம் ஒருநாள் நிக்கெதெமு எனப்பட்ட மதத் தலைவர் ஒருவர் வந்து உரை யாடிக் கொண்டிருந்தார். அப்போது இயேசுநாதர் 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவ னுடைய அரசைச் சேரமுடியாது' எனக் கூறினார். வந்தவரால் 'மறுபடியும் பிறக்க வேண்டும்' என் பதன் கருத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

'எவ்வாறு ஒருவன் மறுபடியும் பிறக்க முடியும்? தன் தாயின் கருவில் இரண்டாம் முறை நுழைந்து பிறக்க முடியுமோ?' எனக் கேட்டகாலை, ஏசுநாதர் 'இங்கே குறிப்பிடப்படுவது சரீரத்தின் பிறப்பையல்ல, ஆவியின் பிறப்பையேயாகும். ஒருவன் உள்ளம் மாறிப் பிறக்கவேண்டும்' என்பதை விளக்கினர்.

எத்தனையோ கொடியவர்கள் உள்ளம் மாறிப் புது மனிதர்களாக மாறவில்லையா? அவ்வாறு மாறிப் பிறத்தவர்களின் முந்தைய வாழ்க்கைக்கும் பிந்திய வாழ்க்கைக்கும் எவ்விதத் தொடர்புமற்ற நிலையை நாம் காணவில்லையா? இதுவே மறு பிறவி. இக் கருத்தினையே வள்ளுவர் ஏற்றுக் குறள் யாத்துள்ளார்.

ஆகவே, மறுபிறவிக் கொள்கை வள்ளுவருக்கு உடன்பாடே. ஆனல் வேறு உடலால் வரும் மறு பிறவியல்ல. வேறு உள்ளத்தால், சிறந்த உள்ளத்தால் வரும் மறுபிறவிக் கொள்கையே வள்ளுவருக்கு உடன்பாடு என்பதை நாம் காணமுடிகிறது.

மறுபிறவி அதாவது உடலால் செத்துப் பிறத்தல், வள்ளுவத்தில் உண்டு என நிறுவவிரும்பும் அறிஞர்களுக்கு வேண்டுகோள்.

1. முரண்பட்ட குறட்பாக்களாக நாம் பார்த்த குறட்பாக்களின் முரண்பாட்டை நீக்கிக்காட்டல்.

2. வள்ளுவர் மறுபிறவியை ஆதரிக்க வில்லை என நாம் மேலே காட்டியுள்ள குறிப்புக்களைத் தக்க அகச் சான்றுகளுடன் மறுத்தல்.

3. மறு பிறவியையே அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டிய 'ஊழில்' மறுபிறவியைப் பற்றியே ஒரு வார்த்தைக்கூட எடுக்காது, ஆசிரியர் விட்டு விட்டமைக்கு விரிவான விளக்கம்.

கீழ்க்காணும் கேள்விகளுக்குத் தனித்தனியே அகச் சான்றுடன் கூடிய விடை.

1. இறைவனுக்கும் பிறவிச் சுழலுக்கும் உள்ள தொடர்பு எவ்வாறு?

2. இறைவனால் பிறவித் தொடர்பு கூட்ட அல்லது குறைக்கப் படுகிறதா? அதாவது ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுமா? அல்லது இறைவனால் ஊழ்வினை மாற்றப்படுமா?

3. நன்மை தீமையின் பலன் மறு பிறவியில் வருவதானால் மோட்சம், நரகம் ஏன்? இவை பிறவித் தொடர்போடு எவ்வாறு செயல்படுகின்றன?

4. பிறவிச் சுழலில் ஒவ்வொரு பிறவிக்கும், முற்பிறவி வினை நடத்துவதாக இருந்தால், ஓர் உயிர் முதன் முதலில் தோன்றிய முதல் பிறவியை எவ்வினை நடத்தியது? அதற்கு முற்பிறப்பு இல்லையே?

5. நன்மை செய்வதும் பிறவிக்குக் காரணமானால், 'மேல் உலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என வள்ளுவர் கூறக் காரணம் யாது?

6. எழுமை, எழு பிறப்பு, பிறப்பு, இவை குறித்து நிற்கும் பொருளில் மாற்றம் உண்டா? எழுமை என்பது ஏழு பிறவியைக் குறிக்குமானால், "எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்" என இரண்டையும் சேர்த்து ஒரே இடத்தில் வள்ளுவர் கையாளக் காரணம் என்ன?

7. எழுமை, எழுபிறப்பு, பிறவித்தொடர்பைக் குறிக்குமானால் தங்களின் கடந்த பிறவியில், விழுமந் துடைத்தவர்களின் நினைப்பு தங்களுக்கு இருக்கிறதா?

8 பிறவிக்குக் காரணமான பொருளல்லவற்றைப் பொருளாக உணரும் மருள், ஓரறிவு ஈரறிவு உயிர்கட்கு உண்டா? அவைகளுக்கு இல்லையானல் அவைகளுக்குப் பிறவி இல்லையா?

9. ஓரறிவுயிர்களுக்கும், மறுபிறவி தோன்றக் காரணமானவை எவை ? ஓரறிவுயிர் தங்கள் வாழ் நாளில் என்னென்ன நன்மை தீமை செய் கின்றன ?

10. பிறவிச் சுழலில் ஓரறிவுயிராம் நெல், ஆரறிவு யிராம் மனிதனுகப் பிறக்கலாம். ஆறறிவுடைய மனிதன், ஓரறிவுடைய நெல்லாகப் பிறக்கலாம். ஆகவே நெல்லும் மனிதனும் ஆத்ம அளவுல் சம மாகக் கருதப்படுகின்றனர். அப்படியானுல் நெல் லைக் கொல்லுவதும், மனிதனைக் கொல்லுவதும் சம மா? நெல் போன்ற ஓரறிவுயிரைக் கொல்லாது தாங்கள் வாழுகின்றீர்களா? உலகம் முழுவதும் வாழ முடியுமா?

11. கல்லாதவர்களை விலங்கொடு ஒப்பிட்ட வள்ளு வர், கற்றவனை ஐந்து அடக்கியவனை விலங்குக் கீழாக மரமாக, நெல்லாகப் பிறப்பாய் எனக் கூறுவா ரா? அப்படிக் கூறியிருப்பாராஞல், கல்வியும் அடக் கமும் அப்போது எப்படி ஏமாப்பாய் இருக்கிறது ?

மேலே காட்டப்பட்டவைகளுக்குச் சமயநூல் களிலிருந்தல்ல திருக்குறளிலிருந்து தக்க விளக்கம் காட்டப்படுமானுல் அதை அறிஞருலகம் ஏற்றுக் கொள்ளக் கடமைப் பட்டதாகும்.

வள்ளுவர் கொள்ளும் ஊழ்

'ஊழ்' என்பதற்கு "முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினைகளின் பயன்" எனப் பொருள் கொள்ளப் படுகிறது. இந்தப் பொருளில் தான் வள்ளுவர் இவ்வதிகாரத்தை எழுதியுள்ளாரா? என நோக்குவோம்.

இப்பொருளில் வள்ளுவர் எழுதியிருப்பாரானல் முற்பிறப்பு, ஏழுவகைப் பிறப்பு இவைகளின் விளக்கமாகவே 'ஊழ்' இருக்க வேண்டும். முற்பிறவிக் கொள்கையில் வள்ளுவருக்கு நம்பிக்கை இல்லை எனப்பார்த்தோம். உண்மையில் வள்ளுவருக்கு முற்பிறப்பில் நம்பிக்கை இருந்திருக்குமானல் அதைத் தெளிவாய் அறிய உதவும் தலைப்பு இதுவே. ஆகவே அதிகமாய் நுணுகி ஆய வேண்டிய இடம் இதுவாகும்.

மற்றவைகளைப் போலவே இத்தலைப்பின் கீழும் பத்துக் குறட்பாக்களை வைத்துள்ளார். இவற்றினுள் ஊழ் என ஐந்து இடங்களில் குறித்துள்ளார். அவை முறையே:-

1. ஆகூழால் அசைவின்மை தோன்றும்.
2. போகூழால் மடி தோன்றும்.
3. இழவூழ் பேதைப் படுக்கும்.
4. ஆகலூழ் அறிவகற்றும்.
5. ஊழிற் பெருவலியாவுள.

இவற்றுள் அசைவின்மையாம் முயற்சி, மடியாம் சோம்பல், பேதைமைத் தன்மையாம் நன்மை விட்டுத் தீமை பற்றல், அறிவகலமாம் நுண்ணறிவு, தோன்றுவதற்கு ஊழே காரணம் எனக் கூறப் பட்டது.

இந்நால் வகையையும் இரண்டு தலைப்பி னுள் அடக்கினால்,

1. அசைவுன்மை -
   மடி - முயற்சி

2. பேதை -
   அறிவு - அறிவு

இவை இரண்டும் தோன்றுவதற்கும்; தோன்றா மைக்கும் ஊழே காரணம்.

இவை இரண்டன் காரணமாகத் தோன்றும் திருவுடையராதல், தெள்ளியராதல் ஆகிய இரண் டும் முற்றிலும் நேர் முரணானவை. இதற்காவது, அதற்காவதில்லை. அதற்காவது, இதற்காவதில்லை.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

இவ்விரண்டனுள் திருவாகிய செல்வத்தைப் படைத்தற்கு நன்மை யானதெல்லாம் தீமை. தீமை யானதெல்லாம் நன்மை.

அதாவது சிறந்தோர் போற்றும் சிறந்த செயல் களையுடையவனிடம் செல்வம் இருக்காது. ஏனெ னில் அவனிடம் செல்வம் வந்தாலும் நன்மையான வைகளைச் செய்வதில் செல்வத்தைச் செலவு செய்து விடும் காரணத்தால் செல்வம் பெருகு

வதில்லை. இரண்டாவதாக, நல்ல முறைகளையே கையாளுகிறவர்கள் எந்தத் துறையிலும் அளவுக்கு அதிகமான செல்வம் ஈட்ட முடியாதவர்களாகிறார்கள்.

இதற்கு மாறாகச் சேர்ந்த செல்வத்தில் ஒரு சிறிதும் ஈயாத வன்நெஞ்சக்காரர்களுக்கும் குறுக்கு வழிகளைக் கையாளத் தயங்காத் தீத்தன்மையுடையவர்களுக்குமே செல்வம் பெருகும். ஆகவே செல்வம் செயற்கு நல்லவை யெல்லாம் தீய, தீயவை எல்லாம் நன்மையாகிறது.

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

இங்கு சற்று ஆழ்ந்து நோக்கினால் முற்பிறவியுடையார் கருத்து முற்றிலும் மறுக்கப் படுதலை நாம் காண முடியும். ஏனெனில் சென்ற பிறவியில் நன்மை செய்தவனே இப்பிறவியில் செல்வந்தனாகவோ, அரசனாகவோ பிறக்க முடியும். ஏனெனில் அவன் செய்த நன்மையை அனுபவிப்பதற்காக இச்செல்வமும், இப்பிறவியும் பயன்படுகிறது என்னும் கருத்து முழுவதுமாக மறுக்கப்பட்டு, அதற்கு நேர் எதிரான தீயவனுக்கே செல்வம் சேரும் என்னும் கருத்து தோற்றுவிக்கப் படுகிறது. “செல்வன் இறையரசில் நுழைவதை விட, ஒட்டகம் ஊசியின் காதில் எளிதில் நுழையும்” அதாவது செல்வன் இறையரசுக்கு அப்பாற்பட்டவன் என்பதே இயேசுவின் கூற்று. அதுவே வள்ளுவரின் கருத்தாகவும் விளங்குகிறது.

அடுத்து, கல்வியைக் குறிக்குங்கால் உலக ஞானம், உலக அறிவு வேறு. இறை ஞானம் இறையறிவு வேறு. இவை இரண்டும் அறிவால் ஒன்றுபடினும் பயனால் ஒன்றிற் கொன்று நேர் முரணானவை. இருவரும் அறிவாளிகள். கல்விமான்கள்

தான். ஆனாலும் இருவரும் முற்றிலும் மாறுபட்டவர்கள். உலக ஞானத்திலே சிறந்த ஒருவன், இறை ஞானத்தின் முன் பைத்தியக்காரன். அப்படியே இறை ஞானத்தில் சிறத்த ஒருவன், உலக ஞானத்தின் முன் பைத்தியக்காரன்.

ஞானிகளை வெட்கப் படுத்தும்படி இறைவன் அற்பமானவர்களை எடுத்து உபயோகிக்கிறார். இது மனித அறிவுக்கு விளங்காத ஒன்று. ஆகவே ஒருவன் எவ்வளவு ஏராளமாகக் கற்றாலும், அவன் உள்ளத்தின் அடித்தளத்திலிருக்கிற அந்த உண்மை அறிவையே அது பெருக்கும்.

> 'நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும்.'

இதனால் தான் சிறந்த மதங்கள் உள்ளம் சீர்ப்படுவதை, அதாவது சிறப்படைவதை விரும்புகின்றன. சீர்ப்பட்ட உள்ள முடையவன் கற்றவை அத்தனையும் சிறப்படையும்.

இதை நாம் அறிவியலில் காண முடிய வில்லையா? உலக அறிவு எங்கே கொண்டு விட்டிருக்கிறது? ஒருவரை ஒருவர் அழிக்கும் பயங்கரக் கொலைக் கருவிகளைப் படைத்துக் குவித்துக் கொண்டு இன்று ஒருவருக் கொருவர் அஞ்சி செத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் உள்ளத்திற்கு இன்பத்தைக் கொடுக்க வேண்டிய அறிவு, இவர்கள் உள்ளத் தன்மையால் துன்பத்தையும், அச்சத்தைபும் இவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இறை அறிவில் சென்றவர்களின் அறிவினால், அவர்கள் சிறந்த இன்பத்தை, அழியா இன்பத்தை அனுபவித்ததுடன், உலகிலுள்ள மற்றவர்களும் இன்பம் அனுபவிக்கவே எண்ணிச் செயல் பட்டனர். படுகின்றனர்.

இந்தச் சிறந்த இறையறிவை உடையவர்களை உள்ளங்கொண்டே வள்ளுவரும்,

" தாமின்புறுவது உலகின் புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

எனக்கூறினார்.

உள்ளத்தில் மெய்யாம் உண்மை தோன்றினால், வாயில் மெய்யாம் வாய்மை தோன்றும். அது செயலில் மெய்யாம் மெய்மையை ஏற்படுத்தி, இவ்வாறுக மனோ வாக்குக் காயம் மெய்யாய்த் திகழும். இதற்கு ஆணிவேர் உள்ளமே. ஆகவே உள்ளம் - மெய் : உண்மையைச் சிறப்பித்துக் கூறினார். இவ்வாறு கூறும் திருவள்ளுவருக்கும் முற்பிறவிக்கும் ஏதாவது தொடர்பு இருக்க முடியுமா ?

மேலும் அவர் கூறுவது என்ன ? நீ எவ்வளவு முயற்சி எடுத்தாலும் உனக்குரியதே உன்னிடம் வந்து சேரும். அது இறைவனின் முறைமையைப் பொருத்தது. உனக்குப் பாலல்ல பரியினும் ஆகா. உனக்குரியது உய்த்துச் சொரியினும் போகாது.

" தேவனுடைய சித்தமின்றி ஒரு முடியைக் கூட வெண்மை யாக்கவும், கறுப்பாக்கவும் உன்னால் முடியாது."

" பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம."

அன்றன்றுள்ள ஆகாரம் மட்டுமே தருமாறு இறைவனிடம் வேண்டுதல் செய்" எனப் போதிக்கும்

மதமும் உண்டு. உனக்குரியதல்லாதது உன்னிடம் வராது. உனக்குரியதாக வந்தாலும் கூட இறைனின் விருப்பத்திற்கு மாருக உன்ஞல் அனுபவிப்பதும் முடியாது எனக் கூறுகிருர் வள்ளுவர்.

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.'

செல்வன் ஒருவன் நீண்ட காலத்திற்கு வேண்டியவைகளேச் சேர்த்து வைத்துத் தானே மகிழ்ந்து கொண்டான். அவனேப் பார்த்து இறைவன் "மதிகேடனே இன்று இரவு உன் உயிர் உன்னே விட்டு நீங்குமாஞல் அப்போது உன் நிலே என்ன?" எனக் கேட்பதாக ஒரு உவமை விவிலியத்திலே சொல்லப் படுகிறது.

அப்படியே, ஒருவன் அதிகம் தொகுத்து வைத்திருந்தாலும், அவன் வாழ்நாள் நீடித்தாலும் கூட, அவன் அதை அனுபவிக்க முடியாதபடி ஏதோ ஒரு நோயிஞல் பீடிக்கப் பட்டிருக்கலாம், அல்லது அவன் தன் காலத்தில், தான் தேடியதை அனுபவியாத அளவுக்குக் கஞ்சத்தன்மை வாய்ந்த கருமியாக இருக்கலாம். ஆகவே ஒருவன் எவ்வளவு தேடிஞலும் கூட அவன் அதை அனுபவிப்பது இறைவனின் சித்தமே.

மேலும் உறற்பால ஊட்டாது கழியுமெனின் துப்புரவில்லார் துறப்பார் மன் எனக் கூறுமிடத்து அவர் விளக்குவது :-

வேறு வழி காணுமல் பொருளாதாரத்தில் ஏழ்மை நிலேயில் வாழ்தல் வேறு. இறைவனுக்குள் போதுமென வாழ்தல் வேறு. வெளிப் பார்வைக்கு இரண்டும் ஒன்று போல் காட்சி அளிப்பினும், பின்னது மிகவும் உயர்ந்தது. ஏனெனில் சோதிக்கப் பட்டுப் பின்னர் அச்சோதனேயில் வெற்றி பெற்றுத் திகழ்வது. முன்னது அவ்வாறு சோதனேக்கு உட்

படாதது. முன்னது துன்பத்திற்கிடமானது. பின்னது இன்பத்திற் கிடமானது.

ஆகவே சோதனைக் குட்படுத்தப்பட்டு, அதில் வெற்றி பெறுதலே சிறப்பானது. பொன்னுனது தீயினுலே சோதிக்கப்பட்டு, ஒளி வீசுவது போல, மனிதனும் துன்பங்களால் சோதிக்கப்பட்டு, பின்பு பொன் போல் ஒளி விடுவான்.

இச் சோதனையைச் சகித்துக் கொள்ள முடியாதவர்களுக்கு மேன்மை, உயர்வு இல்லை. இறைவனிடத்தில் நன்மையை மாத்திரமே பெற்றுக் கொள்வேன் என்பது முடியாத தாகிறது. ஒருவன் உயர்வடையும் பொருட்டு துன்பமான சோதனையையும் ஏற்றுக் கொள்வது அவசியம். அவரிடம் நன்மையைப் பெற்ற நாம், உயர்வுக் காரணமாகிய தீமையையும் பெற்றுக் கொள்ளும்போது துன்புறல் கூடாது.

'நன்ருங்கால் நல்லவாக் காண்பவர் அன்ருங்கால்
அல்லற் படுவதெவன்'

மேலோர், கீழோர் பகுக்கப் படுவதற்கும், துன்பத்தைக் கொடுக்கக் கூடிய சோதனையே காரணமாக அமைகிறது. கடவுள் கொடுத்தார், அவர் எடுத்தார், அவருக்கே மகிமை உண்டாவதாக, என்னும் மேலான உள்ளப் பாங்கு அமைவதே சிறப்பு.

அவ்வாறின்றி இறைவனின் முறைமைக்கு மாருக எதிர்த்து நிற்பவன் யார்? யாரால் எதிர்த்து நிற்க முடியும்?

'ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்'

ஆகவே ஊழாம் இறைவனின் முறைமைக்கு மாருக, மனிதன் செல்ல முடியாது. குயவனுல்

செய்யப்பட்ட மண்பாண்டம் குயவனை நோக்கி "என்னை ஏன் இவ்வாறு செய்தாய்? வேறு உருவத்தில் அழகாக ஏன் செய்யவில்லை?" எனக் கேட்கக் கூடுமோ? அவ்வாறே மனிதனும் இறைவனை எதிர்த்து நிற்க முடியுமா? முடியாது. ஊழிற் பெருவலியாவுள?

இறைவனின் முறைமையாம் ஊழை மாற்ற முடியுமா? முடியும். அதற்கும் வழி அவனே "கேளுங்கள் அப்பொழுது பெற்றுக் கொள்வீர்கள். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்." என்று கூறுபவனும் அவனே.

ஆகவே கேட்பதற்கு முன் நடக்க இருப்பது வேறு. கேட்டபின் நடப்பது வேறு. இம்மாற்றத்திற்குக் கேட்டலாகிய முயற்சியே காரணம். ஆகவே கேட்டலாம் இம்முயற்சி ஊழாம் இறைவனின் முறைமையை மாற்றி அமைக்கிறது.

ஆகவே அவனுக்கு மாற்று அவனே. ஆனால் அவனின்றி, அவனை எதிர்த்து எவ்வகையிலும் செயல்பட முடியாது. அவன் மூலமே அவன் முறைமையையும், அவன் அடியவர்களால் முயற்சி எடுத்து மாற்ற முடியும் என்ற கருத்தினையே 'ஊழிற் பெருவலியாவுள' 'ஊழையும் உப்பக்கம் காண்பர்.' என்பன விளக்கி நிற்கின்றன.

'ஊழ்' என்பதற்குத் தலைவிதி என்னும் பொருள் கொள்ளப் படுமானால், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதும், ஊழையும் உப்பக்கம் காண்பர் என்பதும் முரண்பட்டவையாகி நிற்கும்.

இறைவன் உலகை ஒரு முறைமையில் நடத்திச் செல்லுகிறான். இறைவனடியார் அந்த முறைமையையும் மாற்றிச் செயல்படும் ஆற்றலைப் பெறுகின்றனர். நஞ்சுண்டவர் சாவதும், கல்லோடு

பிணிக்கப்பட்டவர் கடலில் மூழ்குவதும் இயற்கையாம் முறைமை. இந்த முறைமைக்கு மாருகத் திருநாவுக்கரசு சுவாமிகள் விளங்கினுர் என்ருல், அந்த முறைமையையும் மாற்றும் இறைவனின் அருளால் அல்லவா? மலே அசையாதிருத்தல் முறைமை. இறைவனிடம் வேண்டுகிறவர்களால் மலே நகர்ந்து கடலில் விழு என்ருல் விழும் நிலே ஏற்படுவது முறைமையை மாற்றும் இறைவனின் அருளே.

தலேவிதிக் கொள்கை யுடையோரை மறுத்தே, வள்ளுவரும் 'ஒருவன் பிச்சை எடுப்பதற்குக் காரணம், இறைவன் எழுதிய தலேவிதியே என்று இருக்குமாஞல், அதை எழுதிய இறைவன் பிச்சை எடுத்தே கெடுவாஞக,' எனச் சாபம் இடுகின்ருர். இங்கு வள்ளுவர் இறைவனேச் சபித்ததைப்போன்று தோற்றமளிப்பினும், ஆழ்ந்து நோக்குங்கால் அது இறைவனேக் குறியாது, 'அது அவன் தலேவிதி' என, பிச்சை எடுப்பவனே இகழ்வதும், அவனுக்கு உதவி செய்யாதிருப்பதும் ஆகிய தலேவிதிக் கொள்கையுடையோரையே நோக்கிக் கூறப்பட்டிருத்தலே நாம் காண முடியும்.

ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்தும், கீழ்க்காணும் காரணங்களாலும், திருவள்ளுவர் 'ஊழ்' என்னும் சொல்லே 'பழவினே' என்னும் பொருளில் குறிப்பிடவில்லே என்பது விளங்குகிறது.

1. பழவினே என்ற சொல்லோ, அல்லது அந்தப் பொருள் பெறக்கூடிய பிறிதோர் சொல்லோ இவ்வதிகாரம் முழுமையிலும் ஓரிடத்தில் கூட, பயன் படுத்தப் படவில்லே.

2. பிறப்பு, எழுபிறப்பு, எழுமை என்ற மாற்றுக் கருத்துக் குட்பட்ட சொற்கள் கூடக் கையாளப் படவில்லே.

3. ஊழ்வினை தவறாமல் தன் பயனைக் காட்டி நிற்கும், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பது ஊழ்வினைக் கொள்கை யுடையாரின் கருத்து. ஆனால் வள்ளுவர் முயற்சியுடையாரிடம், ஊழ் பின்னடைந்து விடுகிறதென, மேற்கூறியவர் கருத்தை மறுத்துரைக்கிறார்.

4. பழவினைக் கொள்கை யுடையார் கூறுவது போன்று, முற்பிறப்பில் நன்மை செய்தவர், இப் பிறப்பில் செல்வத்தில் பிறந்து, நன்மையடைவார் என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளாததுமன்றி, செல்வம் செயற்கு தீமை, நன்மையாம் எனக் கூறி யுள்ளார். தீமையை முற்பிறவியில் செய்த தீமை எனக் கொண்டால், கருத்து முழுமையும், மாற்ற மடைந்து நகைப்புக் கிடமாதல் நோக்கத் தக்கது.

5. வகுத்தான் என இறைவன் மீது கூறப்படு கின்றதேயன்றி, நல்ல செய்தான், அல்லது தீய செய்தான் எனப் பிறவியின் மீது கூறப்படவில்லை.

ஆகவே பிறவியின் மீது கூறாமல் இறைவன் மீது 'வகுத்தான்' எனக் கூறப்பட்டிருக்கும் காரணத்தால், இறைவன் உலகை இயக்கும் வகுத்தலாகிய முறைமையே கூறப்படுகிறது.

உலகம் ஒரு முறையில் அதாவது ஒழுங்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதை முறைப்படி இயக்குபவர் இறைவன். எல்லாம் அவனது முறைமைக்கு, இணங்கவே செயல்பட்டு வருகின்றன. குழந்தை பிறக்கிறது. வளர்கிறது. உரிய காலத்தில் இன உணர்வு தோன்றுகிறது. தலைவன் ஆகிறான். தந்தையாகிறான். காலம் கழிகிறது. தாத்தாவாகிறான். மறைகிறான். புதிய சந்ததி பொலிவுடன் விளங்குகிறது. அங்கும் அத்தனை மாற்றங்களும் நிகழ்கின்றன.

பகல், இரவு, கோடைக்காலம், குளிர்காலம், இவை யாவும் ஓர் ஒழுங்கில், ஒரு முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அண்டத்தின் அகல, நீள, உயரமென்ன? எந்த அறிவியலாவது விடை கூற முடிகிறதா? ஆனலும் அத்தனையும் ஒரு முறைமைக்கு உட்பட்டே செயல் படுகின்றன என்று எண்ணும் பொழுது, இவைகளை இயக்கும் இறைவனை என்னமல் இருக்க முடியவில்லை.

அவனின்றி ஓரணுவும் அசைவதில்லை என்பதற்கிணங்க, எந்தச் சிறிய காரியமும் அவனுடைய விருப்பத்திற்கு மாருகச் செயல்பட முடியாது. இதையே சிறந்த மதங்கள் யாவும் வற்புறுத்துகின்றன. விஞ்ஞானிகளும், இந்த ஒழுங்கான இயக்க முறையைக் கண்டே வியக்கின்றனர். உலகம் இறைவனின் முறைமைக் கிணங்கவே முன்னேறிக் கொண்டிருக்கிறது. மனிதன் முன்னேறுவதும், இறைவன் விருப்பத்திற்குட்பட்ட அந்த முறைமைக் குட்பட்டதேயாகும்.

'ஊழ்' என்னும் சொல்லுக்கு 'முறைமை' என்ற பொருள் கொண்டே சங்க காலச் சான்ருேர் செய்யுள் செய்தனர்.

"உருகெழுதாயம் ஊழின் எய்தி" என்ற பட்டினப் பாலையடிகளில் 'ஊழ்' என்பது முறைமை என்ற பொருளிலேயே பயன் படுத்தப் பட்டுள்ளது. இக் கருத்தினையே அதற்கு உரைகண்ட உற்சிமேற் புலவர் கொள் நச்சினுர்க் கினியரும், "அச்சம் பொருந்தின தன் அரசவுரிமையை முறைமையால் பெற்று" என உரை கண்டுள்ளார். இதன்கண் "ஊழின் எய்தி: முறைமையால் பெற்று" எனப் பொருள் கூறப்பட்டதும் நோக்கத்தக்கது.

ஆகவே திருவள்ளுவரின் ஊழ்முறைமை என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டதேயன்றி, பழவினையைக் குறிப்பதல்ல வென்பது தெளிவு.

திருவள்ளுவர் சமணரா ?

இனி வள்ளுவர் கருத்தை அவர் காலத்தில் இங்கு விளங்கிய ஒவ்வொரு சமயத்துடனும் ஒப்பிட்டு ஆராய்வோம். திருவள்ளுவர் காலத்தில் இங்கு விளங்கிய முக்கிய மதங்கள் மூன்று.

1. சமணம்.
2. பௌத்தம்.
3. பிராமணரின் வைதீகக் கொள்கை மேலோங்கிய இந்து மதம்.

சமணமும், பௌத்தமும் பெரும்பாலும் அடிப்படைக் கொள்கையால் ஒன்று பட்டவையேயாயினும், கொல்லாமைக் கொள்கையைத் தீவிரமாகக் கைக் கொண்ட காரணத்தால், சமணம் பௌத்தத்திலிருந்து வேறு பட்டு விளங்கியது. எனவே சமணத்துடனும் பௌத்தத்துடனும் தனித்தனியே, வள்ளுவத்தை ஒப்பிடுவதற்குப் பதில், சமணத்துடன் ஒப்பிட்டு நோக்க பௌத்தமும் அதனுள் அடங்கியதாகிறது.

ஆகவே இங்கு சமணத்துடனும், அடுத்த தலைப்பின் கீழ் இந்து சமயத்துடனும் ஒப்பிட்டு நோக்குவோம்.

திருவள்ளுவர் ஏன் சமணராக இருக்கக் கூடாது ?

திருவள்ளுவர் சமணர் என்பதற்கு அதிகமான ஆதரவு அறிஞர் இடையே இருந்து வந்திருக்கிறது. அதற்கு அனுகூலமான முக்கிய காரணங்கள்

1. மலர்மிசை ஏகினான் என இறைவனைப் பற்றிக் குறிப்பிடல் 'பூமேல் நடந்தான்' என சமண சமயத்தில் மாத்திரமே அருக தேவன் அழைக்கப் படுகிறார். பூமேல் நடந்தான் என்பதையே திருவள்ளுவர் மலர்மிசை ஏகினான் எனக் கூறுகின்றார்.

2. அறவாழி அந்தணன்:- தருமச்சக்கரத்தை யுடையவன் என அருக தேவன் அழைக்கப் படுகிறார். அதைக் குறிப்பதற்காகவே இப் பெயரை வள்ளுவர் கையாண்டுள்ளார்.

3. கொல்லாமையைப் பொன்னே போல் போற்றுபவர் சைனர்களேயன்றி வேறு சமயத்தினரல்ல. பௌத்தர்களையும் விட இவர்கள் ஒரு படி மேலே சென்று கொல்லாமையையும், புலால் மறுத்தலையும் கையாளுபவர்கள் பௌத்தர்கள் மற்றவர் கொன்றதைப் புசிப்பார்கள் சமணர் அதுவும் செய்யார்.

4. ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்ற கொள்கை சமண பௌத்த மதங்களிலே அதிகம் கூறப்படுகிறது. வள்ளுவர் அதை வற்புறுத்தியுள்ளார்.

5. மறு பிறவி பல பிறவிக் கொள்கை சமண பௌத்த மதங்களிலே உண்டு. அதையே பல இடங்களிலும் வள்ளவர் ஏற்றிக் கூறியுள்ளார்.

6. வேள்வி செய்யும் வைதீக மதத்தை மறுப்பவர்கள் சமணர். அக்கருத்தையே வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று'

7. நிலையாமைக் கொள்கையும், கள், சூது, காமம், கொலை முதலியன நீக்கமும் சமண சமயத்

தில் வற்புறுத்தப் படுபவன அவைகளையே வள்ளு வரும் வலியுறுத்தி யுள்ளார்.

ஆகவே வள்ளுவர் சமண சமயத்தைச் சார்ந் தவரே.

ஆய்வு :-

1. மலர் மிசை ஏகினுன் :- வள்ளுவர் முதல் குறளிலேயே தனது இறைக் கொள்கையைத் தெளிவாக விளக்கியுள்ளார். அதாவது இறைவன் யாவற்றிற்கும் மேலானவன். உல கம் அவரால் படைக்கப் பட்டது என்பதே. உல கம் இறைவனுல் படைக்கப் பட்டதென்னும் கருத் தையும் இறைவனே எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற கருத்தையும் சமண சமயத்தினர் ஏற்றுக் கொள்ளுவதில்லை. உயிர்கள் சிறந்த நிலையில் வாழ்ந்து தனது முக்தியைத் தானே அடைந்து கொள்கின்றன. அதற்கு இறைவன் துணை தேவை யில்லை என்பதே அவர்கள் கொள்கை. அவ்வாறு முக்திநிலை அல்லது நிர்வாண நிலை அடைந்தவர் களில் தலைமையானவர் அருகனேயொழிய அவர் இறைவன் அல்ல. அருகன் மற்றவர் முக்தி நிலை அடைய உதவி செய்பவரும் அல்ல, என்ற கருத் தினை உடையவர்கள். அருகனைக் குறிக்கும் பொழுதே 'பூமேல் நடந்தவன்' எனக் குறிப்பிடப் படுகிறது.

மலர் மிசை ஏகினுன் என்பதை முக்தியடைந்த மனித நிலையில் கொள்ளு கின்றனர். சமணர் வள்ளு வர் எல்லாவற்றிற்கும் மேலான இறைவன் நிலையில் கொள்ளுகின்ருர். அடுத்து பூவாகிய பொருள்மேல் நடந்தவன் இறைவன் என வள்ளுவர் கொண்டி ருப்பதை விட, இதயக் கமலத்துள் ஏகினுன் எனக் குறித்திருப்பதற்கே அதிக வாய்ப் புண்டென்பது அறிஞருலகம் ஏற்றுக் கொண்ட தொன்ருகும்.

மலர் மிசை ஏகியவனும் இறைவனின் பாதம் சேர்ந்தார் நீடு வாழ்வார் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

சமணர் நீடு வாழ்தலை வெறுப்பவர். உண்ணு நோன்பு, சல்லேகனை முதலியவற்றால் வாழ்க்கையைச் சுருக்கிக் கொள்ள விரும்புபவர்கள். ஆகவே அவர்களின் கருத்துக்கு மாறானது நீடு வாழ்வு.

அறவாழி யந்தணன் :- தருமச் சக்கரத்தைக் கையிலேயுடையவன் என்ற பொருளுக்கும், தருமக் கடலாக விளங்குபவன் என்ற பொருளுக்கும் மிக்க வேறுபாடு உண்டு. அருகன் இறைவன் அல்ல. ஆகவே மற்றவர்களுக்கு உதவாத அருகனிடம் இருக்கும் சக்கரத்தாலும் மற்றவர்களுக்குப் பயன் இல்லை. ஆனால் வள்ளுவர் கூறும் அறவாழி அந்தணன் பிறவாழியைக் கடக்க உதவும் தெப்பமானவன் ஆகவே வள்ளுவர் கூறும்

மலர் மிசை ஏகினான்.
அறவாழி அந்தணன்.

சமணக் கருத்தினைக் கொண்டதல்ல அதைவிட மேலான பொருளையுடையது. மலர் பொருளைக் குறியாது இதயத்தையும், அறவாழி வெறும் சக்கரத்தை குறியாது அறக்கடலென விளங்கும் இறைவனையும குறித்து நின்றன.

3. கொல்லாமையைச் சமணர் போற்றுவது உண்மையே மற்ற சமயங்கள் யாவும் போற்றாதிருக்குமானால் அப்போது சமணத்திற்குச் சிறப்பு ஏற்படுவது உறுதி. ஆனால் கொல்லாமையை ஏற்றுச் சிறப்பிக்கும் சமயம் உண்டு. சமணத்தைப் போலவே உயிர்க் கொலையின்றி நடைபெறுவதே கிறித்தவமுமாகும்.

யூத சமயத்தினின்றும் கிறித்தவம் தனித்து மலர்ந்ததற்கு அடைப்படைக் காரணமாக விளங்கியதும் உயிர்ப் பலியை நிறுத்தியமையே.

4, 5 ஊழ்வினை, மறு பிறவி ஆகிய இரண்டு கருத்துக்களையும் திருவள்ளுவர் ஏற்றுக் கொண்டதாக உரையாசிரியர்கள் தங்கள் கருத்தினை குறட்களுக்கு ஏற்றிக் கூறியமையேயன்றி திருக்குறள் அக்கருத்துக்களுடன் எவ்விதத் தொடர்புமில்லை என்பதை நாம் ஊழ், மறுபிறவி என்னும் தலைப்புகளுள் ஆய்ந்துள்ளோம்.

6. வேள்வி செய்யும் வைதீக மதத்தை எதிர்ப்பவர்கள் சமணர். வள்ளுவரும் எதிர்த்துள்ளார். ஆகவே சமணர் என்ற கருத்தும், கொல்லாமைக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதே. கிறித்தவமும் வேள்வியை எதிர்க்கும் சமயமே. ஆகவே இது சிறந்த சமயங்களுக்குப் பொதுவான கருத்தேயன்றி சமணத்திற்க்கு மாத்திரம் உரியதன்று.

7. நிலையாமைக் கொள்கையும், கள், சூது, காமம், பொய், கொலை முதலியன நீக்கமும் சமணத்தைப்போலவே கிறித்தவத்திலும் வலியுறுத்தப்படுகின்றன. இவையும் சிறந்த சமயங்களுக்குப் பொதுவானவையே. ஆகவே இக் கருத்துக்களை மாத்திரம் வைத்துக் கொண்டு வள்ளுவரைச் சமணர் எனக் கூற முடியாது.

திருவள்ளுவர் சமணத்திற்கு மாறுபட்டவர் எவவாறு எனில்?

1. வள்ளுவர் இறைவன் ஒருவன் உண்டு என்ற கொள்கை உடையவர்.

சமணர் இறைக் கொள்கை ஏற்றுக் கொள்ளாதவர்.

2. உலகம் இறைவனால் படைக்கப் பட்டது (வள்ளுவர்)

உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய பூதங்களின் பெருக்கமேயின்றி யாராலும் படைக்கப் பட்டதல்ல. யாராலும் அழிக்க முடியாது.
(சமணம்)

3. மனிதன் இறைவனின் பாதத்தை யடைவதினுலே, அதாவது அவன் வழி நிற்றருலே மேன்மையான பாவ மீட்புப் பெற்று நித்திய வாழ்வை அடைகிருன். (வள்ளுவர்)

மனிதன் தானே மேல் நிலையை அடைகிருன். இறைவனின் உதவி மனிதனுக்குத் தேவையில்லை
(சமணம்)

4. இல்லறம், துறவத்றதுள், இல்லறமே சிறப்புடையது. இயல்பானது மற்றவர்களுக்கும் ஆதாரமானது. (வள்ளுவர்)

துறவறமே சிறப்புடையது. துறவிகளுக்கே முக்திநிலையுண்டு இல்லறத்தார்க்கு அரிது.
(சமணம்)

5. ஆனும் பெண்ணும் சமமானவர்கள். பெண் கற்பின் திறத்தாலும் சிறந்த வாழ்வாலும் ஏற்றம் பெறுகிருள். (வள்)

பெண் ஆணுக்குச் சமமல்ல. பெண் துறவு பூண்டால் அடுத்த பிறவியில் ஆணுகப் பிறக்கலாம். அதிலும் துறவியாகி வாழ்ந்தால்தான் முக்திநிலையடைய முடியும். நேராக அடைய முடியாது. வஞ்சனை செய்தவர்கள் அடுத்த பிறவியில் பெண்ணுகப் பிறப்பார்கள். (சம)

6. ஊழ் மறு பிறவி என்பன இல்லை (வள்)

ஊழ் மறு பிறவி கொள்கை சமணத்திற்கு அடிப்படையானது. (சம)

7. ஆண், பெண் இருவரும் குடும்ப வாழ்வில் கற்புடன் நடத்தல் வேண்டும். ஒருவன் ஒருத்தி

யாய் வாழ்தல் வேண்டும். (வள்)

ஒரு ஆண் எத்தனை பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளலாம். குடும்ப வாழ்வில் ஈடுபடும் ஆணுக்குக் கற்பு என்பதில்லை. (சம)

8. வெளிப் படையான சின்னம் எதுவும் அவசியமில்லை. (வள்)

வெளிப் படையான சின்னங்களான பீலி, தண்டு, மொட்டை, பாய், அவசியம். (சம)

9. மோட்சம், நரகம் உண்டு. (வள்)

மோட்சம் என்பதும், நரகம் என்பதும் இல்லை பிறவி சூழ்தலும், பிறவி நீங்கமே உண்டு. (சம)

10. தேன் உன்பது தவறு இல்லை. பாலோடு சேர்த்து உண்டால் மிக நன்று குறள் 1121 (வள்)

தேன் யாருமே உண்ணக் கூடாது. அது பிறவி நீக்கத்திற்கு இடையூறு. (சம)

11. தீமை வரவேண்டியவனுக்கே செல்வம் பெருகும். அதிகமாகும். (வள்)

செல்வந்தனுதல் முற்பிறவியில் நன்மை செய்ததனுல் ஏற்பட்ட பலன். (சம)

12. இசை, நாடகம், இசைக் கருவிகள், சிறப்பு, வரவேற்கத் தக்கவை. (வள்)

இவை அறவே கூடாது. (சம)

13. இல்லறமே சிறந்தது மாத்திரமல்ல, இயல்பானது, புனித மானது எனக் கூறியவர் அதற்கே பெரும் பகுதியையும் ஒதுக்கி யுள்ளார்.

துவக்கமும் முடிவும் இல்லறமும் இன்பமுமே. இதைக் கூறும் வள்ளுவர் எவ்வாறு சமணராய் இருந்திருக்க முடியும். துறவறம் மேற்கொண்டவர்களுக்குப் பொருளியலும் தேவையற்றது. அதுவும் இல்லறத்தார்க்குரியதே. ஆகவே தன் மொத்த

குறளில் 10 ல் 1 பங்கையே வள்ளுவர் துறவுக்குத் தந்துள்ளார்.

14. திருவள்ளுவர் இரத்தலைக் கடுமையாக கண்டிக்கிறார்.

சமணத் துறவிகள் இரந்தே காலம் கழிப்பவர்கள்.

ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்து திருவள்ளுவர் சமண பௌத்த சமயத்தைச் சேர்ந்தவரல்ல என்பது உறுதிப் படுகிறது. சமயங்களின் அடிப்படைக் கொள்கையான, இறைவன், உலகம், உயிர் இவை பற்றிய நேர் முரணான கொள்கையைத் தான் திருவள்ளுவருக்கும் சமணத்திற்குமிடையே நாம் காண முடிகிறது.

திருவள்ளுவர் வற்புறுத்தும், புலால் மறுத்தல், கொல்லாமை முதலியன, தமிழகத்திலுள்ள மற்ற சமயங்களுடன் இருந்த தொடர்பை விட, சமண சயயத்துடன் அதிகத் தொடர்பைப் புலப்படுத்துல்ன்றன. இவர் பிறப்பில் சமணராயிருந் திருத்தல் வேண்டும். இவர் வாழ்வின் பிற்பகுதியில், தன் சமயக் கருத்தை மாற்றிக் கொள்ளும் படியான சூழ்நிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும். அதுபோது அவர் அதுவரை, தான் தீவிரமாய்க் கைக்கொண்டு வந்த, சமணக் கருத்துக்களை மாற்றிப் புதுக்கருத்துக்களை வெளியிடும் சிறந்த நிலையை அடைந்தார் என்பதையே அவருடைய சமய அடிப்படை, திட்டமாய்க் காட்டினால் நிற்கின்றது. ஆகவே இவர் பிறப்பில் சமணர். இறப்பில் சமணர் அல்ல என்பது தெளிவு.

மெய்ப் பொருளை நாடுகிறவர்களின் நிலை இதுவே. மெய்ப் பொருள் எனத் தன் உள்ளம் ஏற்றுக் கொண்டவைகளை மேற் கொள்ளுவதில் சிறிதும் பின்னடையார். இதுவே வள்ளுவர் நிலை.

திருவள்ளுவர் இந்து சமயத்தவரா ?

இந்து சமயம் என்பது ஒரு குறிப்பிட்ட தனிச் சமயம் என்பதின்றி, பல சமயங்களின் கூட்டு வடிவமாகும். ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வருமுன்னர் தமிழர்களிடையே இருந்து வந்த சமயக் கோட்பாடுகளுடன், ஆரியர்களின் வைதீகக் கொள்கையும் கலந்து நின்றதே சங்க காலத்தில் நிலவியிருந்த இந்து சமயம். இவற்றுள்ளும் சங்க காலத்தில் வைதீகக் கொள்கை மன்னர்களிடையேயும், புலவர்களிடையேயும் செல்வாக்குப் பெற்றுக்கொண்டிருந்த காலம். ஆகவே இந்துக்கள் என நாம் அழைக்கும் சங்ககால மக்களிடையேயும் வைதீகக் கொள்கையே மேலோங்கி விளங்கியது. சங்க காலத்திலும், அதன் பின் ஏறத்தாழ கி. பி. 10ஆம் நூற்றுண்டு வரையும், வைதீகர் ஆதிக்கம் கொண்டுள்ள இந்து சமயமும், பௌத்த சமண சமயமும் ஒன்றேடொன்று போராடிக்கொண்டிருந்தன.

இந்து சமயத்துள்ளும், வைதீகர் தங்கள் தெய்வங்களான, சுப்பிரமணியன், விஷ்ணு இவர்களைத் தமிழ்த் தெய்வங்களான, முருகன், திருமால் இவர்களுடன் கலந்து ஆரிய திராவிடக் கூட்டுச் சமயத்தை ஏற்படுத்தி வளர்த்தனர். கூட்டுச் சமயம் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை

வைதீக சமயத்தார்க்கு ஏற்பட்டமையே இதற்குக் காரணம்.

ஆகவே பின்னர் சைவம் எனவும் வைணவம் எனவும் பிரிவுக்குள்ளாகிய இந்து சமயம் சங்க காலத்தில் ஒன்று சேர்ந்து, சமணத்தையும் பௌத்தத்தையும் எதிர்த்து நின்றன. சமணமும், பௌத்தமும் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டாலுங்கூட, இந்து சமயத்தைச் சேர்ந்தே எதிர்த்தன.

இப் போரில் முதலில் தோல்வியடைந்த சமயம் பௌத்தமே. பௌத்தம் வீழ்ச்சியுறவே பின்னர் சமணர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே போர் நீடித்து வந்தது. வீழ்ச்சியடைந்த பௌத்த சமயக் கருத்துக்கள் சிலவற்றையும், பௌத்த மக்களுடன் சேர்த்து, இந்து சமயம் தன்னுட் சேர்த்துக்கொண்டது. இந்து சமணப் போர் தொடர்ந்து நடைபெற்றது. இக்காலத்திய இந்து சமயத்துள் பௌத்தக் கருத்துக்களும் கலந்து, முன்னிருந்த நிலைமையினும் வேகத்தோடு சமணத்தை எதிர்த்துத் தாக்கியது. சமணத்தை அழிக்க எத்தகைய வழியைக் கையாளுவதிலும் பின்னடைய வேண்டியதில்லை என மக்களுக்கு வழி காட்டப்பட்டது. சில நூற்றுண்டுகளுக்குள் கொல்லாமை நோன்பிகளான சமணத் துறவிகள் அழிக்கப்பட்டனர். மகேந்திரவர்மன், கூன்பாண்டியன் போன்ற சமண மன்னர்களும் மத மாற்றம் பெறப்பட்டனர். சமணம் வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னரே உட்பூசலாயிருந்த இந்து சமயம், சைவம், வைணவம் என இரு பெரும் பிரிவாகியது. இவ்விரண்டனுள்ளும் பௌத்த சமணக் கருத்துக்கள் பெருவாரியாகக் கலந்தபடியால், பௌத்த சமண மக்கள் இந்துக்களுடன் இரண்டறக் கலந்தனர். அப்போது நாடெங்கும் இந்து

மதமே ஓங்கி நின்றது. அதன் உட்பூசலாகிய சைவம், வைணவம் பெருகி வரலாயிற்று. இவ்விரு பிரிவினுள்ளும் ஆதிக்கம் செலுத்தியவர்கள் வைதீகப் பிராமணர்களே. இந்த நிலை கி.பி. 13-ம் நூற்றுண்டளவில் நிலவியதெனலாம்.

ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்து இந்துக்கள் என நாம் அழைக்கும் பிரிவினுள் ஒவ்வொரு காலத்திலும் மேலோங்கி நிற்பவர் வைதீகப் பிராமணர்களும் அவர்களின் கருத்துக்களுமே. தங்களை எதிர்த்து வரும் கருத்துக்களை எதிர்த்து அழிக்க முற்படுவதும், அதை அழிக்க இயலாத விடத்து அதைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, பின்னர் தன் கருத்திற்கு அதைக் கீழ்ப்படுத்தித் தங்கள் கருத்தினையே மேனிலைப்படுத்துவதும் அவர்தம் வரலாருகும். இது ஆரியர் தமிழகத்தினுள் நுழைந்த காலம் முதல் தற்காலம் வரை செயல்பட்டு வரும் நடைமுறையுமாகும். தங்கள் கருத்தினை ஏற்காத, சான்றேர் கருத்துக்களுக்குத் தாங்கள் விரும்பும், தங்கள் கொள்கைக்கேற்ற விளக்கத்தைக் கொடுத்து அதன் மூலக் கருத்தினின்றும் மடைமாற்றம் செய்துவிடுவதிலும் வைதீகப் பிராமணர் வல்லவர். ஆகவே வரலாற்றுக்குட்பட்ட எக்காலத்திலும் வைதீகக் கொள்கையை நீக்கி நாம் இந்து சமயத்தைத் தனித்து நோக்க முடியாதவர்களாகிறேம். அப்படி வைதீகக் கருத்துக்களை நீக்கிஞல் அங்கு சமய அடிப்படைக் கருத்துக்களைக் காணமுடியாதவர்களாகவும் இடரலடைய வேண்டியவர்களாகிறேம். ஆகவே, தமிழர் சமயம் என்ற ஒரு தனிச் சமயத்தை ஆரியக் கொள்கையிலிருந்து நீக்கி நாம் காண்பது என்றும் முடியாது.

எனவே சங்க காலத்தில் நிலவிய இந்து மதம் தமிழர் வழிபாட்டுள் சிலவும், வைதீகர்களின் மதக்

கோட்பாடுகளும் சேர்ந்தவையே. அதனுள் பௌத்த சமணக் கருத்துக்களின் கலப்பு ஒரு சிறிதும் இல்லை. இத்தகைய இந்து சமயத்தை வள்ளுவர் சேர்ந்தவராக ஏன் இருத்தல் கூடாது? என ஆராய்வோம்.

வள்ளுவர் இந்து சமயத்தைச் சேர்ந்தவரே என்பதற்கு ஆதரவான கருந்துக்களை முதற்கண் நோக்குவோம்.

இந்துக்களுள்ளும் சைவ மதச் சார்பான கருத்துக்களை முதலிலும், வைணவக் கருத்துக்களைப் பின்னரும் காண்போம்.

1. ஆதிபகவன்: ஆதி என்னும் புலைச்சியையும், பகவன் என்னும் அந்தணரையும் குறித்தாலும் ஆண் பெண் சேர்ந்த இறைவனைக் குறிக்கும் காரணத்தால் இது அம்மையப்பரைக் குறித்தமையாகக் கொண்டு அம்மையப்பராக விளங்கும் சிவனையே குறித்து நிற்கின்றது.

2. எண் குணத்தான் என்பதனுள் சைவாகமத்தில், இறைவன் குணங்களாகக் கூறப்படும் எண் வகைக் குணங்களான, தன்னவயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவற்றைச் சைவாகமத்திலிருந்து திருவள்ளுவர் எடுத்தாண்டு குறட்பாயாத்துள்ளார்.

3. வள்ளுவரைக் கோவில் கட்டிப் போற்றி வழிபட்டு வருபவர் சைவர்களே. வள்ளுவரைக் குறிக்கும்பொழுதும் இதுவரை சைவச் சின்னங்கள் பூண்டவராகவே குறிக்கப்பட்டு வந்திருக்கிருர். ஆகவே சைவத்திற்கும், வள்ளுவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தமை கண்கூடு.

4. நாயனூர் என வள்ளுவர் அழைக்கப்படும் காரணத்தால் நாயனூர் என்பது சைவ வழக்குப் பற்றிக் கூறப்பட்டது.

ஆகவே, திருவள்ளுவர் சைவராக இருந்திருத்தல் வேண்டும்.

வைணவச் சார்பான கருத்துக்கள்:-

5. அறவாழி அந்தணன் என்பது சக்கரப் படையைக் கையிலே கொண்டு விளங்கும் திருமாலேயே குறித்து நிற்கிறது.

6. வாலறிவன் எனக் கூறுவதும், திருமாலின் சிறந்த அடியவரான அனுமாரைக் குறித்து இறைப் பணியாற்றுவதன் சிறப்பை விளக்கி நிற்கின்றது.

7. அடியளந்தான் தாயது என உலகம் குறிக்கப்படுங்கால் திருமால் வாமனவதாரம் எடுத்த வரலாறு உட்கொள்ளப்பட்டு, எழுத்தாளப்பட்டுள்ளது.

8. தாமரைக் கண்ணன் என்பது கண்ணனேயே குறித்து நிற்கும் சொல்லாகும். ஆகவே கிருஷ்ணவதாரத்தையும் எடுத்தாண்டுள்ளார் வள்ளுவர்.

9. செய்யவள், திரு, தாமரையினுள் எனத் திருமகள் பலவிடங்களுள் வள்ளுவரால் எடுத்தாளப் பட்டுப் போற்றப் பட்டுள்ளாள்.

ஆகவே திருவள்ளுவர் வைணவராக விளங்கி இருத்தல் வேண்டும்.

சைவ வைணவத்திற்குப் பொதுவான
இந்துமதக் கருத்துகள்

10. (560) அறு தொழிலோர் நூல் மறப்பர் என அந்தணரைக் குறித்து, அதன் மூலம் அந்தணர் மறையையே சிறப்பித்துள்ளார்.

11. (543) 'அத்தணர் நூற்கும் ஆதிமன்னர் கோல்' என்னுமிடத்தும் அந்தணர் சிறப்பிக்கப் பட்டுள்ளனர்.

12. தவ்வை, முகடி, இந்திரன், நிலநல்லாள், காமன், கூற்று முதலியன இந்துக்களால் போற்றி உரைக்கப்படுபவை. இவைகளை வள்ளுவர் கையாண்டுள்ளார். அதாவது இக் கருத்துக்களை வள்ளுவர் ஆதரித்துள்ளார்.

13. ஊழ்வினை, மறுபிறவி ஆகிய இந்துக்கருத் துக்களை ஆதரித்துச் செய்யுள் செய்துள்ளார்.

14. அவி சொரிந்து ஆயிரம் வேட்டல் என் பதன் மூலம் வேள்வியின் சிறப்பைக் கூறியுள்ளார்.

15. ஆதி என்ற புலைப் பெண்ணுக்கும், பகவன் என்ற அந்தணர்க்கும் பிறந்தவர் என்பது தொண்டுதொட்டே வழங்கப்பட்டு வரும் செய்தி ஆகும். இவர்கள் இந்துக்கள் எனவே கொண்டாடப் படுகின்றனர்.

16. வள்ளுவர் இந்து மறைகளை அருளிச் செய்தவரான நான்முகனுக்கு உவமையாகக் கூறப் பட்டுள்ளார்.

ஆகவே மேலே நாம் கண்ட பதினாறு காரணங் களால் திருவள்ளுவர் இந்து சமயத்தைச் சார்ந் தவரே.

ஆய்வு

சைவம் :

1. ஆதி பகவன் என்பது திருவள்ளுவரின் பெற்றோரைக் குறிக்குமெனவும், அம்மையப்பராகிய சிவபெருமானைக் குறிக்குமெனவும் இரு வகையாகக் கூறுவர்.

திருவள்ளுவரின் பெற்றோரைக் குறிக்கும் என்பதை அறிஞர் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. உலகத் தோற்றத்திற்குக் காரணமானவர் தனது பெற்றோர் என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்பது அறிவாளிகளுக்கு ஒவ்வாக் கருத்து. ஆதிபகவன் என்பது இறைவனையே குறித்து நின்றது.

ஆணையும், பெண்ணையும் சேர்த்துக் குறிக்கின்றதென்ற அடிப்படையிலேயே அது அம்மையப்பரைக் குறித்ததாகச் சைவர்கள் கொண்டனர். ஆண், பெண் அல்ல இறைவன் ஒருவனையே குறிக்கின்றதென்றவிடத்து அம்மை, அப்பர் என்பதற்கிடமின்றி, அதன் மூலம் சிவபெருமானை மட்டும் குறிக்கும் என்பதும் பிழைபட்டுவிடுகிறது.

2. எண் குணத்தான் என்று வள்ளுவர் கூறியது சைவாகமத்ல்தி குறிக்கப்பட்டிருக்கும் எட்டுக் குணங்களை யுடைய சிவனையே குறிக்குமென்ற கருத்தும் இவ்விடத்திற்குப் பொருத்தமானதன்று. ஏனெனில் எண் என்பது, எட்டு என்னும் எண்ணைக் குறித்திருக்குமானல் தொகை கூறிய வள்ளுவர் அதன் வகையையும் குறித்திருப்பார். அவ்வாறு வகை கூருக் காரணத்தால், அது எண்ணுப் பொருளை உணர்த்தாது என்க. இதற்கு மேலும் பொருள் திருவள்ளுவரிடமே கேட்டுப் பெறலாம்.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

என்றும் குறட்பாவினுள்ளும், எண் குணம், என்பது போல எண்பொருள் என வந்துள்ளது. இங்கு எண் என்பது எண்ணுப் பொருளையுணர்த்துமெனச் சொல்லின் பொருள் சிதைந்து நகைப்புக்கிடமான பொருளைத் தந்துவிடல் ஒருதலை. இவ்விடத்தில் எண் என்பது எளிமை என்பதையுணர்த்தி நிற்பது போலவே எண் குணம் என்பது எளிமையான

குணம், எனக் குறிக்கப்பட்டுக் காட்சிக்கெளியன் கருத்திற் கெளியன் என இறைவனை யடைவதன் எளிமையைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அரசன் காட்சிக்கெளியவனாய்த் திகழ வேண்டும்.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

என வற்புறுத்திய வள்ளுவர் இறைவனும் காட்சிக்கெளியவன் என்ற தன்மையை வெளிப் படுத்துகின்றாரேயன்றி, எட்டுக் குணத்தையுடைய வன் என்னும் கருத்தினைக் கொண்டு கூறவில்லை. எட்டுக் குணம் என்றால் ஏன் அது ஏழாகவோ அன்றி ஒன்பதாகவோ இருக்கக் கூடாது? என்னும் கேள்வியும் எழும்.

3. வள்ளுவரைக் கோவில் கட்டி வணங்குபவர்கள் சைவர்களே. ஆகவே வள்ளுவத்திற்கும் சைவத் திற்கும் தொடர்புண்டெனக் கூறப்படும் கருத்தினை நாம் ஆயுங்கால், பொதுவாக நம் நாட்டில் முன் னோர் வணக்கம் அதிகமாக இருத்தல் கண்கூடு. முன்னோர் வணக்கத்தில் முன் நிற்கும் சமயம் இந்து சமயம். அதனுள்ளும் திருவள்ளுவர் ஓர் சிறப்பான இந்துக் கொள்கை யுடையவரே எனப் பரிமேல ழகர் போன்றோரால் வற்புறுத்தித் திணிக்கப்பட் டுள்ளமை யாவருக்கும் கண்கூடு. இந்துக்களுள் ளும், சிறப்பான கருத்துக்களை வரவேற்கும் பண்பும், தமிழ் மீது தணியா ஆவலும் ஆரியத்தை ஓரளவு எதிர்க்கும் திண்மையும் பெற்றவர்கள் சைவர்களே. ஆனாலும் அவர்கள் ஆரியத்தின் ஆதிக்கத்தி லிருந்து முழுமையாக விடுபட முடியாமைக்கும் காரணங்கள் பல உண்டு.

இந்நிலையில் வள்ளுவர் கருத்து தமிழர்க்குப் புதியது. தூய தமிழ்க் களஞ்சியம். எல்லா வழி களையும் தன்னோடு சேர்த்துக் கொள்ளும் இயல்பு

வாய்ந்த இந்து மதம் இவரது கருத்தினை வெறுத்தது என்று கூற முடியாது. இன்றும் இந்து மதத்தின் கண் சமணக் கருத்துக்களும், சமணக் கோயில் களும், பௌத்த கருத்துக்களும், பௌத்தக் கோவில்களும் இருப்பதும், வழிபடப்படுவதும் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதியுள்ள 'சமணமும் தமிழும்'; 'பௌத்தமும் தமிழும்' என் னும் நூல்கள் தெற்றெனப்புலப்படுத்தி நிற்கின்றன.

சமண பௌத்தக் கோவில்களே, அதாவது இந்து மதத்திற்கு நேர் எதிராக இருந்த இவைகளே இந்துக்களால் வணங்கப் படும் பொழுது எப்பால வரும் நன்றெனவே ஏற்றுக்கொள்ளும் சிறப்புப் பெற்ற வள்ளுவர் வாய்வழிவந்த கருத்துக்கள் போற்றப் படுவதும், வள்ளுவர் வணங்கப்படுவதும், புதுமையன்று. அது வள்ளுவர்க்குச் சிறப்பைக் கொடுக்கின்றதேயன்றி, வணங்குகிறவர்களின் கருத்திற்கு இணங்கியவர் வள்ளுவர் என்பதைக் குறிக்காது.

இன்றும் மாற்று சமயப் பெரியோர்களையும் வணங்கும் சிறப்பு வாய்ந்தவர் சைவர் என்பது திருநெல்வேலிக்கு வடக்கே ஒரு மைல் தொலைவி லுள்ள இராமையன்பட்டி என்ற கிராமத்தில், கிறித்தவக் கல்லறை யொன்று வணங்கப் பட்டு வருவது சான்று பகரும்.

ஏன் வைணவர்களோ, மற்றவர்களோ வணங்க வில்லை என்றால் நாம் மேலே பார்த்தபடி இந்துக் களுள்ளும் சைவத் தமிழர்கள் முன்னேற் றக் கருத்திற்கு இடம் கொடுத்து வரவேற்பவர்கள் தமிழ் மேன்மையுறப் பாடுபடுபவர்கள், ஆரியக் கருத்திற்கும் மாறுபட முயற்சிப்பவர்கள், ஆகவே எப்பாலவரும் இசைய நிற்கும் வள்ளுவரையும் போற்றுகின்றனர் எனலாம்.

4. நாயனுர் என்பது இறைவனையும், இறைவன் அடியவர்களையும், சிறப்புக்குரிய பெரியோர்களையும் குறிப்பிடும் ஓர் தமிழ்ச் சொல். இது சைவர்களுக்கு மாத்திரமே பொருந்தும் எனக் கூற முடியாது. வள்ளுவருக்கு மிகப் பிற்பட்ட காலத்திலேதான் சைவர் இச் சொல்லைக் கையாளத் தொடங்கினர். ஆகவே இச்சொல்லால் வள்ளுவர் சைவத்தோடு தொடர்புடையவர் எனக் கூறுவது ஏற்புடைத்தன்று.

இனி வைணவக் கருத்துக்களை நோக்குவோம்

5. அறவாழி அந்தணன் என்பதன் கண் அறவாழி என்பது சக்கரப்படையைக் குறித்து, சக்கரப் படையை யுடைய திருமாலைக் குறிக்கும் என்னும் கருத்தினை நாம் ஆய்ந்தால் திருமால் கையிலிருக்கும் ஆழிக்கும் வள்ளுவர் கூறும் ஆழிக்கும் வேற்றுமையுண்டு.

திருமால் கையிலிருக்கும் ஆழி, துஷ்டநிக்ர சிஷ்ட பரிபாலனத்திற்கிணங்க தீயோரை அழித்தற்குப் பயன்படும் மற ஆழியாகக் கொள்ளப்படுவதே யொழிய அறவாழியன்று. ஆனல் வள்ளுவர் கூறும் ஆழியோ தூய அறவாழி. அடுத்து ஆழி என்பதற்குச் சக்கரம் என்னும் பொருள குறளில் தோன்ருமையும் நாம் நோக்க வேண்டும்.

அறவாழி : அறக்கடல். : (தருமச்சக்கரம்)
பிறவாழி : பாவக்கடல். : (மறச்சக்கரம்)

ஆழி என்பதற்கு சக்கரம் என்று பொருள் கொள்ளுங்கால் பிறவாழி என்பதன் கண் அமைந்து நிற்கும் ஆழிக்குப் பொருள் மாற்றம் செய்ய வேண்டிய நிலையை நோக்குமிடத்து அறவாழி என்பது அறக் கடலையே குறித்து நின்றதென்பது ஒருதலை.

ஆகவே அறவாழி அந்தணன் என்பது சக்க ரத்தையுடைய அருகதேவனையோ, அன்றி சக்கரப் படையைக் கையிலே கொண்ட திருமாலையோ குறிக்காது, அறக்கடலாக நின்று எல்லா உயிரை யும் பாவக்கடலிலிருந்து கரையேற்றும் இறைவ னையே குறிக்கும் என்பது தெற்றெனப் புலப்பட்டு நின்றது.

6. வாலறிவன் என்பது அனுமாரைக் குறித் தது என்பதை ஆயுங்கால், வாலையுடைய அறிவன் எனப் பிரிந்து நிற்கின்றது. அனுமாரைச் சிறந்த அடியவராக வைணவர்களும் கொள்ளுகின்றனரே யன்றி இறைவனாகக் கொள்ளவில்லை. அனுமார் தானே இறையாகி நின்றதாகவும் வரலாறில்லை. இறைவனின் சிறந்த அடியவராகத்தான் சிறப்பிக் கப்பட்டுள்ளார். இறைவனை வணங்கும் நான்கு முறைகளான 1. தந்தை முறை 2. நண்பன் முறை 3. ஆண்டான் முறை 4. தலைவன் முறை (கணவன்.) இந்த நான்கிற்கும் சைவத்தில் முறையே திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாய னார், திருநாவுக்கரசு சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகியோர் உதாரணமாகின்றனர்.

வைணவத்தில் இதைப்போன்ற ஆண்டான் முறையில் வணங்கிய அடியவர் அனுமாரேயன்றி அவர் இறைவனாக எங்குமே சிறப்பிக்கப்படவில்லை.

வாலறிவன் என்பதற்குத் தூய அறிவினை உடைய இறைவன் என்பதே சிறந்த உரையாக யாவரும் ஏற்றுக்கொள்ளுவர்.

7. அடியளந்தான் தாயதெல்லாம் :-

மடியிலா மன்னன் எய்தும் (அ)டியளந்தான்
தாயதெல்லாம் ஒருங்கு.

இதில் அடியளந்தான் தாயதெல்லாம் எனக்குறிப் பிட்டுள்ள பகுதியை எடுத்துக் கொண்டால் அடி

யால் அளந்தவன் திருமால், உலகத்தை ஒரு அடியாகவும், மற்றவைகளைப் பிறிதோர் அடியாகவும் மூன்றும் அடி அளப்பதற்கிடமின்மையின், அதை நரபலி அரசன் தலையில்வைத்து அழுத்தியதாகவும், வாமனவதாரத்தில் கூறப்பட்டுள்ளது. அவர் திருவிக்கிரமாவதாரம் எடுத்தகாலை கேட்டது மூன்று அடியேயொழிய, மூன்று எட்டுப்பாகம் அல்ல. அளந்ததும் கால் அடியின் நீளத்தைக் குறிக்கிறதே யொழிய தாவியபகுதியையல்ல. ஆகவே திருவிக்கிரமாவதாரத்தில் திருமால் தாவி அளக்கவில்லை என்பதும், நின்ற நிலையிலேயே அளந்தார் என்பதும் பெறப்படுகிறது.

ஆனால் இங்கு அடியளந்தான், அதாவது அடியினால் அளந்தவன், தாயதெல்லாம் எனக் குறிப்பிடப்பட்டிருத்தலால், இது திருமாலைக் குறியாது வேறு பொருளைக் குறித்து நின்றது. அது குறிக்கும் பொருள் மடியளந்தான் : ஆன்றுயது என்பதே. மடி ஏற்பட்டு இழந்தது, ஆன்றுயது - இல்லாமற் போனது. ஆகவே மடியில்லாத மன்னன் தான் முன்பு மடியினால் இழந்த பொருட்களை யெல்லாம் ஒருங்கே திரும்ப அடைவான் என்பது கருத்து.

இதன் முந்தைய குறட்பாவினுள்ளும் ஒருவன் மடியை மாற்றினால் குடிக்கண் வந்த குற்றம் மாறும் எனக்கூறியமையால், அடுத்த குறட்பாவாகிய இதனுள், குடியின்குற்றம் நீங்குவதோடு, இழந்தபொருளையெல்லாம் மீண்டும் பெறுவான் என்பதை வற்புறுத்திக் கூறினர் என்பதே சிறந்த பொருளாதலை நாம் அறியலாம்.

ஆகவே இங்கு திருமாலைக்குறிக்குமென்பதும் இல்லையென்பது தெளிவாகிறது.

8. தாமரைக் கண்ணான் :- உலகு என்பதில் தாமரையைப் போன்ற கண்ணையுடையவன், என உவமை கூறப்பட்டிருக்கிறதேயன்றி குறிப்பிட்ட

பெயர் எதுவும் கூறப்படவில்லை. தாமரை தமிழ் நாட்டின் சிறப்பு மலர். தாமரையை அநேக பொருளுக்கு உவமை கூறல், புலவர் வழக்கு. தமிழ நாட்டில் தோன்றிய தமிழ்ப்புலவர்களுள் தாமரையை உவமைக்குக் கையாளாதவர்களைக் காண முடியாது.

அந்த முறையில் தாமரையைப் போன்ற கண்ணையுடையவனின் உலகு, எனக்கூறப்பட்டது. இந்த இடத்தில் சிற்றின்பத்தைவிடச் சிறந்ததோ எனத்தாமரைக்கண்ணுன் உலகம் கேட்கப்படுகிறது. ஆகவே தாமரைக்கண்ணுன் என்பது திருமாலையே குறித்து நிற்குமென்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

காமத்தில்மூழ்கி இருப்பவனுக்கு அதுவே சிறப்பாயிருத்தல் ஒருதலை. அப்போது பேதைமையோடு நடந்து கொள்ளுகிருன். இம்மைப் பிறப்பில் பிறியலம் என்பது அந்த நிலையையே விளக்குகிறது.

9. செய்யவள், திரு, தாமரையினுள் என்பவைகளைத் தமிழ் வழக்குப் பற்றிக்கையாண்டுள்ளாரேயன்றி, மதக்கருத்தை ஏற்றுச் செய்யுள் செய்தார் எனக்கொள்ள முடியாது. செல்வத்தைத் திரு எனவும் வறுமையை, தவ்வை, மூதேவி எனவும், கல்வியைக் கலைமகள் எனவும், நிலத்தை, நிலமகள் எனவும், இன உணர்ச்சியைக் காமன் எனவும், உயிர்பிரிக்கும் தன்மையைக் கூற்று எனவும் கூறல் தமிழ் மரபேயொழிய, ஒரு மதத்தை மாத்திரம் சேர்ந்த மரபு அல்ல. இவைகளை எவ்லா மதப்புலவர்களும் கையாண்டுள்ளனர். ஆகவே இவையும் மதத்தை யறியப்பயன்படுவதில்லை. இன்மை என ஒரு பாவி, அழுக்காறென ஒரு பாவி, நிலமென்னும் நல்லாள் என்பனயாவுமே நூல்மரபாகும்.

பொதுவான இந்து மதக்கருத்துக்கள் :-

10. அறுதொழிலோர் நூல்மறப்பர் என்பது நெசவுத்தொழிலைக் குறிக்கும் என்பர் ஒரு சாரார். அவர் கூறும் கருத்து நெய்துமுடித்தபின்னர் தறியி லிருந்து ஆடையை அறுத்து எடுக்கும் காரணத் தால், அத்தொழில் அறுதொழில் எனவும் இந்நெச வுத்தொழிலுக்கு ஆதாரமாய் இருப்பது நூல், ஆகை யால் அதையே குறித்தார் என்றும் கூறுவர்.

பிறிதோர்சாரார், அறு தொழிலோர் - வரை யறை செய்யப்பட்ட தொழிலையுடையோர். அதா வது இன்றியமையாதது என வரையறுக்கப்பட்ட தொழில் எனவும் நூல் என்பது அத்தொழில் நுட்ப அறிவையும் உணர்த்தி, இன்றியமையாததென வரையறுக்கப்பட்ட தொழிலையுடையோர், அதன் தொழில் நுட்ப அறிவை அரசன் காவாக்கால் மறப்பர் எனவும் கூறியுள்ளார் என்பர். ஆகவே பிராமணரையும், அவர் வேதத்தையுமே கூறினர் வள்ளுவர், எனக்கொள்ள முடியாது. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் எனக்கூறியவர், இங்கே பிராமணர் என்ற கருத்தில் எவ்வாறு கூறியிருக்க முடியும் ?

11. அந்தணர் நூற்குமாதி : இதில் அந்தணர், என்பது ஆரியரைக்குறியாது, சான்றோரைக் குறித் தமை திருவள்ளுவர் வாக்காலேயே விளங்கித் தோன்றுகிறது.

அந்தணர் என்பர்அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தன்மை பூண்டொழுக லான்.

என்பதில் அந்தணர் என்பது ஒரு குலத்தைக் குறியாது அறவோராகிய சான்றோரையே குறித்து நிற்றல் கண்கூடு.

12. தவ்வை, முகடி முதலியன நூல் மரபு என்பது முன்பே விளக்கப்பட்டுவிட்டது.

13. ஊழ்வினை, மறுபிறவி ஆகிய கருத்துக்களை வள்ளுவர் ஆதரித்தது போல, இதுவரை கூறி வந்தவை உரையாசிரியரால் கொள்ளப்பட்டவையேயன்றி வள்ளுவரால் அன்று என்பது முன்னமேயே விளக்கப்பட்டுவிட்டன. ஊழ்வினை, மறுபிறவி போன்றவை வள்ளுவர்க்கு உடன்பாடன்று.

14. அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின், என்பது வேள்வியின் உயர்வைக் கூருது வேள்வியின் கொலைத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. கொல்லாமையின் மேன்மையையும், கொலைத் தொழில், தேவர்களுக்கான யாகமாகிய சிறந்த தொழிலுக்கே, என்ருலும் இழிவானதே எனவும் கூறியுள்ளார். ஆகவே வேள்வியைக் குறைகூறியிருக்கின்ருறேயொழிய மேன்மைப்படுத்திக் கூற வில்லை.

15. ஆதி, பகவன் என இருவரும் இந்துக்கள், ஆகவே வள்ளுவரும் இந்துவே என்பதன் கதை ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று. உலகிற்கு முதற் காரணம் தனது பெற்ருேர் என வள்ளுவர் நிச்சயம் கருதியிருக்க முடியாது. வள்ளுவருக்கு ஏற்றம் கொடுக்கக் கருதியோ, அன்றி பிராமணர்களுக்கு ஏற்றம் கொடுக்கக் கருதியோ, பின் வந்தவர்களால் கட்டி உரைக்கப்பட்டு அதற்காதாரமாக முதற் செய்யுளைக் கொண்டனரேயன்றி, அதில் உண்மை இருக்க வாய்ப்பில்லை என்பது முன்னரே விளக்கப் பட்டுள்ளது.

16. திருவள்ளுவ மாலையினுள் வள்ளுவர் நான் முகனுக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கும் இடத்தில், நான்முகனுக்கு ஒப்பு என்னும் கருத்து கொடுக்கப்படுகிறதேயன்றி நான்முகன் என்னும் தெய்வக்கருத்தை, வள்ளுவர் ஏற்றுக்கொண்டார் என்பது அன்று. நான்முகன்வேதம், வடமொழி நான்மறை. வள்ளுவர் வேதம் எல்லாருக்குமுரிய

பொய்யா மொழியாகும். நான்முகனுக்கு எதிரானவர் வள்ளுவர் என்னும் கருத்து இதனுள்ளே தோன்றுவதும் நோக்கற்பாலது.

ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்து, திருவள்ளுவர் தமிழ் மரபையே கையாண்டுள்ளார் என்பதும், திருவள்ளுவருக்கும் இந்து மதத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதும் உறுதிப்படுகிறது.

இனி திருவள்ளுவருக்கும் இந்து சமயத்திற்குமிடையேயுள்ள கருத்து வேற்றுமைகளைக் காண்போம்.

திருவள்ளுவர் இந்து மதத்திற்கு முரணானவர்.

முரண்பாடுகள் :-

1. திருவள்ளுவர் வணக்கம் ஒரே தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டது.

இந்து சமய வணக்கம் பல தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டது.

2. பலியிடல் கூடாது —திருக்குறள்

பலியிடல் மிக அவசியம். நரபலியும் கடவுளுக்கு உண்டு. (இந்து மதம்)

3. இறைவன் விருப்பு வெறுப்புக்குட் படாதவன். —திரு

விருப்பு வெறுப்புக்குட்பட்டவன். (இந்)

4. மது யாவரும் நீக்கவேண்டும். —திரு

கடவுளுக்கும் பிரியமானது. (இந்)

5. பொதுமகள் புறக்கணிக்கப்படவேண்டும். —திரு

கோவிலிலும், அதனருகிலும் அவர்கள் இருத்தல் வேண்டும். இறைவனுக்கும் அவசியம். (இந்)

6. இல்வாழ்வில் ஒருவன் ஒருத்தியாய் வாழ வேண்டும். —திரு

விருப்பப்படி வாழலாம், வரையறை இல்லை. (இந்)

7. பொறிவாயில் ஐந்தவித்து வழி காட்டியவன் இறைவன். —திரு

பொறிவழியே சென்று துன்புற்றவர்களில் கடவுளரும் உண்டு. (இந்)

8. கொல்லாமை புலால் மறுத்தல் கைக்கொள்ளவேண்டும். —திரு

இறைவனுக்குப் படைக்கப்படுவதில் இறைச்சியும் உண்டு. இறைவன் காட்சியளிப்பதும் கொலைக் கருவியுடனேயே. (இந்)

9. இறைவன் காட்சிக்கெளியவன். —திரு

கடவிளரில் சிலர் காட்சிக்குப் பயங்கரமானவர். (இந்)

10. உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. —திரு

உலகத்தோற்றத்தைப் பற்றிய பல கதைகள். (இந்)

11. சூது தூண்டிற் பொன்மீன் விழுங்கியற்று. —திரு

இறைவனே சூதாடித் துன்புற்றிருக்கிறார். (இந்)

12. வெளிச் சின்னம் தேவையற்றது. —திரு

வெளிச்சின்னத்திற்கு முக்கிய இடம் உண்டு. (இந்)

13. இறைவனுக்குச் செய்தல் ஏழைக்குச் செய்தலே. —திரு

உருவ வணக்கத்திற்கும், பிராமணர்க்கும் கொடுத்தலே இறைவனுக்குச் செய்தல். (இந்)

14. பிறப்பால் ஏற்றத்தாழ்வு இல்லை. —திரு
பிறப்பால் உயர்வு தாழ்வு உண்டு. (இந்)

15. தீமைக்கும் நன்மையே செய்க. —திரு
தீமைக்குத் தீமை செய்தலே மத அடிப்படை. துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம். (இந்)

16. மனிதன் பிறப்பில் குறைபாடு உள்ளவன். —திரு
கடவுளுக்குச் சமமானவன். இறைவன் 'நான்' (இந்)

17. ஆன்மா அழியாதது. —திரு
இறைவனோடு இரண்டறக் கலத்தலில் தனித் தன்மை இழந்து விடுகிறது. (இந்)

18. முற்பிறவியில் தீமையால் பெருகுவது. தீயவனுக்கு நிரம்புவது. —திரு
செல்வம் நன்மை செய்வதால் வருவது. (இந்)

19. ஆணும் பெண்ணும் சமம். —திரு
பெண் இழிவு, ஆணே மேல். (இந்)

20. மோட்சம் அடைய பற்றுக்களைக் களைந்து இறைவழி நடத்தல் வேண்டும். —திரு
மிகுந்த யாகங்கள் செய்ய வேண்டும். (இந்)

21. மறு பிறவி இல்லை. —திரு
மறுபிறவி உண்டு. (இந்)

22. எண்ணத்தில் குற்றமின்மையே அறம். —திரு
வெளிப்படையாகச் செயல்புரிவதே சிறப்பு. (இந்)

23. இல்லறம், துறவறம் இவற்றுள் இல்லறமே சிறப்பு. —திரு
துறவறமே சிறப்பு, மதத்தலைவர் துறவிகளே, சிறப்பித்துக் கூறப்படுபவர்களும் துறவிகளே.

[பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரசித்தம், சன்னியாசம்] (இந்)

24. இறைவனை எல்லோரும் நேரடியாக வணங்கலாம். —திரு

பிராமணர் மூலம் சென்றால்தான் அருள் கிடைக்கும். (இந்)

25. தனக்குத் துன்பம் செய்தவனை அழிக்க இறைவனிடம் வேண்ட முடியாது. —திரு

அவ்வாறு வேண்டலாம். (இந்)

26. துன்மார்க்கம், தீமை ஆகிய கொடியவைகளைச் செய்தவர்களும் தங்கள் செயல் வெற்றிபெற இறைவனை வணங்கலாம். (இந்)

அவ்வாறு முடியாது. —திரு

27. உழவுத் தொழிலே மேலானது. —திரு

அதுவே மிகவும் கீழானது. (இந்)

28. நல்லாரெனினும் கொளல் தீது. —திரு

பிச்சை எடுப்பவன் பிரபு. (இந்)

29. மறுமை தூய இன்பம். —திரு

மறுமையிலும் சிற்றின்பம் உண்டு. (இந்)

30. அரசனோ அந்தணனோ அறவழியில்தான் பொருள் ஈட்ட வேண்டும் என்பதில்லை. (இந்)

அறவழியில் இருந்து சிறிதும் மாறக்கூடாது. ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யற்க. —திரு

31. ஒழுக்கத்தால் மாத்திரமே உயர்வு —திரு

பிறப்பாலும் வேறு பல காரணங்களாலும் உயர்வு உண்டு. (இந்)

32. மதத்தின் அடிப்படை உயர்வான உள்ளம், பற்றற்ற தன்மை, இறைவனை அடைதல்.—திரு

நான்கு வருணம் தன் மேன்மையைத் தானே தேடல். (இந்)

33. பெண் கற்பு சிறப்பிக்கப்படுவது. —திரு

ஒரு பெண் பல ஆணை மணந்தாலும் தவறல்ல. (பாஞ்சாலி) (இந்)

34. தகாக் காமம் நீக்கப்பட வேண்டிய ஒன்று. —திரு

கடவுளுக்கே தகாக் காமம் உண்டு. (இந்)

35. நீதி எல்லோருக்கும் ஒன்று. —திரு

நீதி குலத்திற்குக் குலம் மாறுபடும். (இந்)

இதுவரை நாம் கண்டவைகளிலிருந்து, திருவள்ளுவர் சமண பௌத்த சமயங்களையோ, அன்றி இந்து சமயத்தையோ சார்ந்தவர் அல்ல என்பது எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி உறுதியாகிறது.

அப்படியானல் வள்ளுவரின் சமயம் எது? அவருக்கும், அவர் நூலுக்கும் பாராட்டுக்கள் பாடிய புலவர் பெருமக்கள், திருவள்ளுவமாலையில் இதைப் பற்றி ஏதேனும் குறிப்பிட்டிருக்கின்றனரா என்பதை இப்போது காண்போம்.

திருவள்ளுவமாலையில் தமிழ்மறை

'திருக்குறள் தோன்றிய காலநிலை' என்ற தலைப் பின்கீழ் நாம் முன்பு பார்த்ததைப் போன்று திருக் குறளின் பெருமை மக்கள் மத்தியில் பரவத் தொடங் கவே, அது பாண்டியன் அவையின்கண் கொண்டு வரப்பட்டது. அப்போது அதற்குக் கருத்துத் தெரிவித்தவர்களில் பலர், இது வடமொழி வேதத் திற்கு ஒப்பானது, அதாவது சிறந்ததல்ல என்றும், சிலர் அதைவிடச் சிறந்ததென்றும், கூறியிருத்தலை நாம் ஆழ்ந்து நோக்கக் கடவோம். சபைத் தலைவ னான அரசன் ஆரியச் சார்புடையவன். யாக அரங் கத்தைச் சிறப்பித்தவன். குறள் யாகத்தை எதிர்ப் பது. ஆகவே அவனுக்கு எதிர்க்கருத்துத் தெரிவிக்க விரும்பும் புலவர்கள் வெளிப்படையாகக் கூற முடியாது. தாம் சிறுபான்மை பற்றியும், மறை பொருளாகக் கூறவேண்டிய நிலை. இதை நாம் எண்ணத்தில் வைத்து ஆய்வினுள் செல்லுவோம்.

திருவள்ளுவ மாலை, திருக்குறள் அரங்கேற்றம் நடந்தகாலை, அங்கே வீற்றிருந்த புலவர் பெரு மக்களால் இயற்றப்பட்டதென்பர். இதில் ஓரளவு உண்மை இல்லாமல் இல்லை. மாலையிலுள்ள பாக்களை இயற்றிய புலவர்களில் பெரும்பான்மை யினர் சங்க காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. திருக்குறள் அரங்கேற்றம் நடந்தகாலை, அதுவரை வள்ளுவரைப் பற்றிப் பாடிய பாடல் களோடு, அதுகாலை பாடப்பட்டவைகளும் சேர்க்கப் பட்டன. பின் வந்த காலங்களில் வள்ளுவரைப் பற்றி இயற்றப்பட்ட பாடல்களும் பின் வந்த புலவர்களால் இத்துடன் ஒருங்கு இணைக்கப்பட் டிருக்கலாம். இதில் உள்ள பாடல்களுள் பெரும்

பான்மை, சங்கப் புலவர்களின் பெயரால் விளங்குவதாலும், குறளைப்போன்று வெண்பாவினால் இயற்றப் பட்டிருத்தலாலும் வள்ளுவரைப் பற்றி நாம் அறிந்துகொள்ளுவதற்கு, இதைத்தவிர நமக்கு வேறு சான்று கிடைக்காமையாலும் இதனுள் திருவள்ளுவரைப்பற்றிக் குறிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களை நாம் ஆராய்வோம்.

மாலையினுள் திருக்குறளுக்கு வேதம் என்ற பெயர் காணப்படுகிறது. வள்ளுவர் வேதம் ஓதியவர் எனச் சிறப்பிக்கப்படுகிறார். அத்துடன் வடமொழியாளரின் நான்மறையுடனும், நான்மறையை ஓதியதாகக் கருதப்படும் நான்முகனுடனும் ஒப்பிடப்படுகிறார்.

நான்மறை ஓதிய நான்முகனே, பின் வள்ளுவராகப் பிறந்து வேதப் பொருளை விளங்கத் தந்தான் எனக் கூறப்படுகிறார். அதாவது நான்முகனும் வள்ளுவரும் ஒன்றே. [4, 28]

நான்மறை செய்யாமொழி. அது அந்தணர்க்கும் அவரைச் சார்ந்தோருக்கும் உரியது. ஆனால் வள்ளுவர் மொழியோ பொய்யாமொழி, எல்லோருக்கும் உரியது.

அந்தணர், வேதத்தின் ஆற்றல், ஏட்டில் எழுதினால் குறையும் என ஏட்டில் எழுதார். முப்பால், எழுதினாலும் மற்றவர்கட்குக் கூறினாலும், ஆற்றல் அழிவதில்லை. அதற்குச் சோர்வும் ஏற்படுவது இல்லை.

நான்மறை மன்பதைக்கு உள்ள, அதாவது உணர அரிது. வள்ளுவர், உலகம் உணர்ந்துகொள்ளும்படி குறள் மொழிந்தார்.

ஆகவே குறள் நான்மறையிலும் சிறந்தது. இது ஒரு தனி வேதம் என்ற காரணத்தால் இதற்கு உத்ரவேதம் எனப் பெயரிட்டனர். உத்ரவேதம் -

எதிர் வேதம். அதாவது நான்மறைக்கு எதிர் வேதம். உலகம் முழுவதற்கும் பொது வேதம். ஆகவே பொதுமறை, இது தமிழ் மொழியில் இயற்றப்பட்டது, ஆகவே தமிழ் மறை. இம்மறையை இயற்றிய முதற் பாவலர் திருவள்ளுவர், ஆகவே முதற் பாவலர். இவர் மற்றவைகளைப்போலன்றி பொய்யே மொழியாதவர், ஆகவே பொய்யாமொழி. இப்படியே குறளுக்கும் வள்ளுவருக்கும் அவற்றின் பெயரால் உள்ள தன்மையை நாம் அறியமுடிகிறது.

ஆகவே இதுவரை நாம் பார்த்ததிலிருந்து வள்ளுவர் இயற்றியது ஒரு தனி வேதம். அது அந்தணருடைய வேதத்திற்கும் முரணானது. அது மாத்திரமல்ல, அதற்கும் மேலானது. உலகிலுள்ள யாவருக்கும் உரியது. தமிழிலே முதற் பாவலராகிய திருவள்ளுவரால் இயற்றப்பட்டது என்பது தெளிவாகிறது.

மேலும், கல்லாடர் இயற்றிய ஒன்பதாம் செய்யுளுள் 'அறுவகைச்சமயத்தாரும் தங்களுள், பொருளால் முரணிக்கொள்வர், இவ்வறுவகைச் சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் வள்ளுவர் முப்பால் மொழிந்தார்' எனக்கூறுவதினின்று இவர் கருத்து, அக்காலே நம் நாட்டில் விளங்கிய அறுவகைச் சமயத்தாருடையதற்கும் புறம்பானது என்பதும் தெளிவு. அதாவது அதுகாலே இங்கு நிலவிய சமயக் கருத்துடன் சேர்ந்ததல்ல திருக்குறள். அதினின்றும் வேருனது. ஆனல் யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடியது. ஒத்துக்கொள்ள வேண்டியது.

[42] அவ்வாறு சிறந்த பொருளை, அதுவும் ஒரு வேதத்தின் பொருளை, அது தமிழ் மொழியினின்றும் வேறு மொழியில் இருந்த காரணத்தால் மற்றவர்கள் அதைப் படிக்குமாறு தமிழில் உரைத்தார் வள்ளுவர்.

(உலகோர் ஓதத் தமிழால் உரை செய்தார்)

இந்நூலை, உள்ளே இருக்கும் இருள் நீங்கும்படி இயற்றினார். இவர் இயற்றியது ஒளியைப் பற்றியது. [யோ. 1 : 9. உலகத்திலே வந்த எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.]

வள்ளுவர், ஒளி விளங்குவதற்கு வேண்டுவன வாகிய தகளி, திரி, நெய், தண்டு இயற்றினார். அதிலே இறைவனாகிய தீ நின்று ஒளி கொடுக்கிறது.

அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்இருள் நீக்கும் விளக்கு. (47)

வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்இருள் நீக்கும் ஒளி. (52)

ஆகவே தமிழ் நாட்டில் ஒளி விளங்கக் காரண மாயிருந்தவர் வள்ளுவர் என்பது திருவள்ளுவ மாலையாலும், திருக்குறளாலும் நன்கு விளங்கித் தோன்றுகிறது. தமிழ் மொழியில் இவர் இயற்றிய ஒளி உலகெங்கும் பரவுவதற்கும் வழி ஆயிற்று.

மேலே நாம் கண்டவற்றிலிருந்து நாம் தெளியக் கூடியவை.

1. வள்ளுவர் இயற்றியது ஒரு தனி வேதம்.

2. அது அந்தணர் வேதத்தைக் காட்டிலும் உயர்ந்தது.

3. அதுகாலை இங்கு நிலவிய மற்ற மதங்கட்கும் மாறுபட்டது. யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது.

4. தமிழுக்கு இதுபுதுக்கருத்து. வேற்று மொழியில் இருந்த இக் கருத்தினைத் தமிழால் உரை செய்தார் [வேதப் பொருளை விரகால் விரித்து உலகோர் ஓதத் தமிழால் உரை செய்தார்.]

கிறித்தவம் தமிழ்நாட்டிற்குப் புதியது. முதலில் அதற்குக் கிறித்தவம் என்ற பெயர் இல்லை. ஆகவே

அக் கருத்து முதலில் பரவும்பொழுது மக்கள் அதை ஒரு தனி வேதமாக வரவேற்றிருப்பார்களே யன்றி குறிப்பிட்ட ஒரு பெயரால் அல்ல. கிறித்தவர்களை வேதக்காரர்கள் [வேதம் - மறை] என அழைக்கும் வழக்கத்தையும் நாம் காணலாம். ஆகவேதான் வடமொழி வேதங்கள் பரவி வருங்கால் இது அதனின்றும் சிறந்த வேதமாக மக்களால் வரவேற்கப் பட்டது. எதிர்வேதமாக்கப்பட்டது திருக்குறளின் பெயருள்ளும், தெய்வ நூல், உத்திர வேதம், தமிழ் மறை, பொதுமறை என்ற பெயர்கள் காணப்படுவது நோக்கத்தக்கது. உத்ரவேதம் - எதிர்வேதம் எதற்கு ?

திருவள்ளுவர் ‘முதற் பாவலர்’ என அழைக்கப் படுகிறார். எதற்கு முதற் பாவலர் ? புதுக்கருத்துக் களுக்கு அல்லவா ? இவர் ஒரு நான்முகன். புது நான்முகன். தோமையர் தமிழகத்திற்குக் கொண்டு வந்த கருத்து யூத மொழியில் இருந்தது. அதைத் தமிழ்மொழியாக்கி, தூய தமிழ்ச் சூழ்நிலையில், தமிழில் சிறந்த கருத்தாக வள்ளுவம் வகுக்கப் பட்டதா ? தோமையரின் நோக்கம் அறக் கருத்துக் களைப் பரப்புவது. வள்ளுவர் செய்திருப்பதும் அதைப் பின்பற்றியதா ?

கிறித்தவத்திற்கும், வள்ளுவத்திற்கும் தொடர் பிருக்கிறதென நாம் உணருங்கால், கிறித்தவம் எங்கே? எப்போது? தோன்றியது. அது தோன்றிய இடத்திற்கும் தமிழகத்திற்கும் தொடர்பிருந்திருக்க முடியுமா ? கிறித்தவம், தமிழ் நாட்டிற்கு எப்போது யாரால் கொண்டு வரப்பட்டது ? வள்ளுவருக்கும் கிறித்தவத்திற்குமுள்ள தொடர்பு என்ன? என்பதை வரிசையாக நோக்குவோம்.

முதற்கண் தமிழகத்திற்கும் கிறித்தவம் தோன்றிய மேற்கு ஆசியாவிற்கும் இடையே இருந்து வந்த தொடர்பை நோக்குவோம்.

தமிழகமும் மேற்கு ஆசியாவும்

தமிழகத்திற்கும், மேற்கு ஆசிய நாட்டினரான கிரேக்கர், ரோமர், எகிப்தியர், அசீரியர், பாபிலோனியர், யூதர், அராபியர், பினீஸியர் ஆகியோருக்கும் பண்டைநாளிலிருந்தே தொடர்பு இருந்து வந்ததென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இயேசு கிறித்து பிறந்து, வளர்ந்த பாலஸ்தீன நாட்டினரான யூதர்களுக்கும், அக்காலத்தில்யூதர்களை ஆண்டுவந்த ரோமர்களுக்கும், யூதர்களோடு நெருங்கிய வர்த்தகத் தொடர்பு வைத்திருந்த கிரேக்கர்களுக்கும் தமிழகத்துடன் மிகஅதிகத் தொடர்பு இருந்தது.

தமிழகத் துறைமுகங்களில் அந்நிய நாட்டுப் பொருட்களைக் கொண்டு வருவனவும், அந்நிய நாட்டுக்குப் பொருட்களைக் கொண்டு செல்வனவும் ஆகிய கப்பல்கள் எப்பொழுதும் குழுமியிருந்தன. கி.மு. 8ஆம் நூற்றுண்டிற்கு முன்னரே தமிழக மேற்கு ஆசியத் தொடர்பு இருந்ததென்பதற்கு, வரலாற்று ஆசிரியர் பல காரணங்கள் காட்டுகின்றனர். சாலாதியரது தலைநகராகிய 'ஊர்' என்னும் நகரம் கி. மு. 5000இல் அமைக்கப்பட்டதாகும். யூதர்களின் ஆதித் தந்தையான ஆபிரகாம் இந்நகரத்திலிருந்தே கடவுளால் அழைக்கப்பட்டதாக ஆதியாகமம். 11 : 3 இல் விவிலியம் விளம்புகிறது. இந் நகரத்தின் அழிபாடுகளில் உலகின் வேறு எப்பகுதியிலும் கிடைக்காததும், சேரநாட்டின் கடற்கரையில் மாத்திரம் கிடைக்கக்கூடியதுமான தேக்கு மர உத்திரம் கண்டெடுக்கப்பட்டது. தமிழகத்திற்கும், மேற்கு ஆசியாவிற்கும் நெருங்கிய

தொடர்பு ஏறத்தாழ 7000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததென்பதை இது தெளிவுபடுத்துகிறது.

கி. மு. 1700இல் யூதேயாவிலிருந்து எகிப்து சென்ற யோசேப்பின் வரலாறு இந்தியப் பொருட்கள் வணிகக் கூட்டத்தாரால் இந்தியாவிலிருந்து தரை வழியாக எகிப்து, சீரியா, பாபிலோன் முதலான நாடுகளுக்கு அரேபியாவின் மூலம் கொண்டுபோகப்பட்டன என்பதை அறிவிக்கும். கி. பி. 17ஆம் நூற்றுண்டில் இந்தியாவுக்கும், மேற்கு நாடுகளுக்கும் வியாபாரத் தொடர்பு இருந்த தென்பதற்கு, எகிப்திய ஓவிய எழுத்து நூலில் ஆதாரம் காணப்படுகின்றது. குரங்கை உணர்த்தும் 'கவி' என்னும் சொல்லின் திரிபாகிய 'கொவ்' எகிப்திய ஓவிய எழுத்தில் 'கவு' என்று காணப் படுகின்றது.

கி. மு. 1462இல் முடிவெய்திய எகிப்திய பதினெட்டாவது பரம்பரையிலுள்ள அரசரின் 'மம்மிஸ்' பிரேதங்கள் இந்திய மசுலின் துணி களால் சுற்றப்பட்டிருந்தன.

கி. மு. 1000இல் எருசலேமில் அரசாண்ட, ஞானத்தில் சிறந்தவனுகிய சாலமோன், தீருவின் மன்னனுகிய ஈராமுடன் ஒப்பந்தம் செய்து தமிழ் நாட்டுப் பொருட்களை வரவழைத்தான். ஈராமின் கப்பல்கள் ஒப்பீரிலிருந்து மிகுதியான வாசனை மரங் களையும், இரத்தினங்களையும், வெள்ளியையும் யானைத் தந்தங்களையும், கவிகளையும், மயில்களை யும் கொண்டு வந்தன. இக் கப்பல்கள் மூன்று ஆண்டுகளுக்கொரு முறை இப் பொருட்களைக் கொண்டு வந்தன. (1 இராஜா : 9, 10 அதி காரங்கள்) ஒபீர் என்பது தென்னிந்தியாவிலுள்ள உவரி என்னும் பண்டைத் துறைமுகம் என ஆராய்ச்சியாளரால் கருதப்படுகிறது. இதற்குக்

காரணம், மூன்று ஆண்டுகளுக்கொரு முறை பிரயாணம் செய்யப்பட்டமையாலும், கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையே ஆகையாலும், ஓபீர் தமிழ்நாட்டைச் சேர்ந்த உவரியாகவே இருத்தல் வேண்டும் என்பர்.

கிரேக்க மொழியிலுள்ள ஓரிசா, பிப்லி, இஞ்சிவேர் என்பன முறையே அரிசி, திப்லி, இஞ்சி என்பனவற்றின் திரிபாகும்.

அசீரிய நாட்டைச் சேர்ந்த கி. மு. 727 முதல் 722 வரை அரசாண்ட நான்காவது சால்மன்சர் என்னும் மன்னன், இந்திய யானைகளை வெகுமதியாகப் பெற்றதும், நேபுகாத்நெசர் என்னும் மூன்றுவது மன்னனின் (கி. மு. 604 - 562) அரண்மனையில் தமிழ்நாட்டின் தேக்குமர உத்திரம் காணப்பட்டதும், பவேரு சாதகம் (கி. மு. 500) இந்திய வணிகர் முதன் முதல், மயில்களைக் கடல் மார்க்கமாகப் பாபிலோனுக்குக் கொண்டுபோனதைக் கூறுதலும், பழைய எபிரேய விவிலிய நூலில் முதல் அரசர், இரண்டாவது அரசர் முதலியவற்றுள் தமிழ்நாட்டிலுள்ள பொருட்களுக்குத் தமிழ்ப்பெயர்களே காணப்படுவதும், தமிழ் நாட்டுக்கும், மேற்கு ஆசியாவுக்கும் இடையே கி. மு. 8, 7, 6ஆம் நூற்றாண்டுகளில், ஒழுங்கான கடல்வழி வாணிகப் போக்குவரவு இருந்தது என்பதை உணர்த்தும். பாபிலோனில் யூபிரத்தஸ், தைகிரஸ் என்னும் ஆறுகள் சந்திக்குமிடத்திற்கு அருகில், தமிழர் குடியிருப்பு இருந்ததாக அறிகிறோம்.

இயேசுகிறித்து வாழ்ந்த காலத்தில் அந்நாட்டையும் சேர்த்து ஆண்ட உரோமச் சக்கரவர்த்தியாகிய, அகஸ்தஸ் மன்னனுக்குப் பாண்டிய அரசன் கி. மு. 20இல் தூதுக்குழு ஒன்றை அனுப்பியுள்ளான். யவனப்போர்வீரர் பாண்டியரின்

கோட்டை வாயில்களைக் காவல் புரிந்ததாகச் சிலப்பதிகாரம் சொல்லுகிறது.

கிறித்தவ ஆண்டின் முற்பகுதியில் தமிழகத்திற்கும், உரோமுக்கும் இடையில் நெருங்கிய வாணிகத் தொடர்பிருந்தது. உரோமர் முசிறியிலும், பிற இடங்களிலும் குடியேறி இருந்தனர். கிரேக்கர் தமது வாணிகப்பாதுகாப்பின் பொருட்டு, முசிரியில் 2000 போர் வீரரை வைத்திருந்தனர். அகஸ்தஸ் இராயனைச் சிறப்பிக்கும் பொருட்டு, முசிரியில் ஓர் கோயில் அமைத்திருந்தார்கள் எனச்சொல்லப் படுகிறது. மலையாளக் கரையிலுள்ள பைசாந்தியம் என்னும் இடத்தில் உரோமர் குடியேறி இருந்தனர். அகஸ்துசீசர் முதல், சேனோ ஈருகவுள்ள ஒவ்வொரு உரோம அரசரின் உரோம நாணயங்களும், தமிழ் நாட்டின் பல இடங்களிலுமிருந்து கண்டெடுக்கப் பட்டுள்ளன. கயஸ்குளோடியர் என்னும் உரோம அரசனின் மனைவி, உலோலா, 300,000 தங்க நாணயம் விலைமதிப்புள்ள முத்துக்களால் தன்னை அலங்கரித்திருந்தாள். கிளியோபத்திரா என்னும் எகிப்திய இராணி, தமிழ்நாட்டின் சிறந்த முத்துக்களை வைத்திருந்தாள். கி. பி. 62 முதல் 113 வரை வாழ்ந்த பிளினி, ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் தங்கநாணயம் மதிப்புள்ள செல்வத்தைத் தென்னகம் விழுங்கி விடுவதாகக் கடிந்துள்ளார்.

முசிறி, கொற்கை, தொண்டி, மாந்தை, புகார், உவரி முதலியன, தமிழ் நாட்டின் முக்கிய துறைமுகங்களாகக் கருதப்பட்டன.

தமிழ் அரசர்களுக்கு வேண்டிய குதிரைகள் அரேபிய தேசத்திலிருந்து கலங்களின் மூலம் வரவழைக்கப்பட்டன.

மேலே கண்ட வரலாற்றுக் குறிப்புகளினின்றும், தமிழகத்திற்கும், மேற்கு ஆசியாவிற்கும் நீண்ட

நெடுங்காலமாகத்தொடர்பு இருந்தமையும், தமிழர் குடியிருப்பு மேற்கு ஆசியாவிலும், உரோம, கிரேக்க, யூதக்குடியிருப்புகள் தமிழகத்தில் இருந்தமையையும் நாம் அறிகிறோம். ஆகவே தமிழக மக்கள், யூத, கிரேக்க நாட்டிற்குச் செல்லுவதும், யூத கிரேக்க நாட்டிலுள்ளவர்கள் தமிழகத்திற்கு வருவதும் அடிக்கடி நிகழ்ந்தன.

கி. பி. 34 இல் யூத நாட்டில் துளிர்விட்ட கிறித்தவம், உலகின் பல பாகங்களுக்கும் பரவலாயிற்று. இயேசுவின் 12 மாணவர்களும், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின், அவரின் கட்டளைக்கிணங்க உலகின் பல பாகங்களுக்கும், தாங்கள் அறிந்த, நற்செய்தியை அறிவிக்கும் தூதர்களாகப் பரவிச் சென்றனர். பன்னிருவருள் ஒருவராகிய தோமன் முனிவர் தமிழ்நாட்டிற்குக் கிறித்தவமாகிய நற்செய்தியைக் கொண்டு வந்தார். இனி தமிழகத்தில் தோமன் முனிவரின் பணியைப் பற்றிப் பார்ப்போம்.

தோமையரும் தமிழகமும்

தூய தோமையர் ஏசு பெருமானின் 12 சீடர்களுள் ஒருவர். இவரைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது சந்தேகத்தின் சீடர் என்பர். அதாவது ஏசு பெருமான் இறந்து அடக்கம் பண்ணப்பட்டபின், முன்பு தன் மாணவர்களுக்குக் கூறியிருந்தது போலவே, உயிரோடு எழுந்துள்ளார் என மற்ற மாணவர்கள் இவருக்கு அறிவுறுத்திய ஞான்று அதை நம்ப மறுத்து, நான் நேராகக் கண்டாலொழிய இக்கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறியவர். ஏசுபெருமான், இவரிடம் தோன்றி தன் கையையும், குத்தப்பட்ட விலாவையும், காட்டியதோடு, தோமையரின், கைகளையும், விரல்களையும் தன் காயத்தினுள் திணித்துக் காட்டிய பின்னரே ஏற்றுக் கொண்டார் என விவிலியம் விளம்புகிறது.

இவ்வளவு சந்தேகத்திற்கு இலக்கானவர், ஐயம் நீக்கப்பட்ட காலை, தன்னை ஆண்டவனின் வேலைக்கு ஒப்புக்கொடுத்தார். இயேசுபெருமான் கி. பி. 34 இல் சிலுவையில் அறையப்பட்டார். அவருடைய உயிர்த்தெழுலுக்குப் பின் மாணவர்கள் பல இடங்களுக்கும் சென்று தாங்கள் கண்ட, அனுபவித்த நன்மையை மற்றவர்களுக்கும் தெரிவிக்கலாயினர். தோமையரும் நற்செய்தி அறிவிக்கும் தொண்டராக இந்திய நாடு வந்தார். அவர் இந்தியா வரக்காரணமாயிருந்தது, தமிழக மேற்கு ஆசிய வர்த்தகத் தொடர்பும், தமிழகத்தின் யூதக்குடியிருப்புமேயாகும். அவர் வேறுபல இடங்களுக்கும் சென்று பின், கி. பி. 52இல் தமிழகத்தின் மேற்குப் பகுதியாகிய சேரநாட்டில், கொச்சிக்கருகில், கிரங்கனூர் என்னுமிடத்தில் வந்து இறங்கினார்.

அப்போது அங்கு குடியிருந்த யூதர்கள் அவருக்குச் சிறந்த வரவேற்புக் கொடுத்தனர்.

கிரங்கனூரில் யூதர்கள் தற்காலம் வரை வாழ்ந்து வருகின்றனர். ஆவர்கள் ஆலயத்தின் நூற்றுண்டு விழா இந்தியப் பிரதமரான, திருமதி இந்திரா காந்தி அம்மையாரால் 1968 டிஸம்பரில் துவக்கிவைக்கப்பட்டது. அப்போது அதைப்பற்றி வெளியான செய்தி கூறுவன.

"சாலமோன் காலத்தில் இக்குடியிருப்பு அமைக்கப்பட்டது. கி. பி. 55ல் தோமா இங்கு வந்து இறங்கியபொழுது கிரங்கனூருக்குத் தெற்கே 6 மைல் தொலேவிலேயே அழகிய பெண்ணொருத்தி, புல்லாங்குழல் இசைக்க, இவரை யூதர் வரவேற்றனர். இங்கு யூதர்களுக்குத் தனியாட்சியும், தனி அரசனும் இருந்தனர். அரசன் கி. பி. 5 ஆம் நூற்றுண்டு முதல் கி. பி. 15 ஆம் நூற்றுண்டு முடிய ஆண்டுள்ளான். கி. பி. 379 ல் அரசாண்ட சேரமான் பெருமாளால், இவர்களுக்குத் தன் ஆட்சியுரிமையும், மற்றச் சிறப்புக்களும், அப்போது இருந்த யோசேப்புராபன் என்பவருக்கும் அவரைச் சேர்ந்த 72 யூதக்குடும்பங்களுக்கும், செப்புத்தகடுகளில் எழுதி உறுதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. யூதர்கள் மிக அதிகமான சிறப்புகளேப் பெற்றிருந்தனர். இதே சிறப்புக்களே அங்கு வாழ்ந்த, சீரியக் கிறித்தவர்களும் பெற்று வாழ்ந்தனர்.

இந்த யூத அரசாட்சியைக் குறித்து, கி. பி. 14 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த, ராபிநிசிம் என்ற யூதக் கவிஞர், மிகச் சிறப்பித்துத் தானே நேரில் கண்டதாகக் கூறுகின்றார். கி.பி. 1434 இல் வாழ்ந்த பராராவைச் சார்ந்த, எலிசா என்பவர் அவர் பிள்ளேக்கு எழுதிய கடிதத்தில், இந்த ஆட்சியையும், அரசனேயும் சிறப்பித்துக் கூறுவதுடன், இங்கே

உணவுக்காக உயிர் வாழும் பிராணி எதுவும் கொல்லப்படுவதில்லை எனவும் குறித்துள்ளார்.

யூதர்களுக்குத் தனிநாடாகிய இஸ்ரவேல்நாடு கிடைத்ததிலிருந்து இங்குள்ளவர்கள், பரிசுத்த மான தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை வர, வரக் குறைந்து வருகிறது. அவர்கள் இந்த நாட்டிலே வாழ்ந்த கதையைக்கூறும், அவர்கள் ஆட்சி, ஊர், ஆலயம், மக்கள் யாவருமே, இல்லாத நிலை ஏற்படலாம். யூதர்களுக்கு இங்கு எவ்வளவு சிறப்புக் கள் இருந்தன என்பது அப்போது தெரியாமல் போக லாம்.'' (இந்தியன் எக்ஸ்பிரஸ். தேதி: 29-12-68.)

இவ்வாறு செய்திகள் கூறுவதிலிருந்து சேர நாட்டில் இருந்த யூதக் குடியிருப்பையும், அங்கு தூய தோமையர் வந்ததையும், பின் கிறித்தவர்கள் வாழ்ந்ததையும், அவர்களும் யூதர்களைப் போன்ற சிறப்புக்களைப் பெற்றதையும், நாம் அறியலாம். தோமையர் யூதர்களைக் கிறித்தவர்களாக மாற்றி யதுமன்றி, மற்றவர்களையும் தன்னிடம் சேர்த்தார். இவ்வாறு அவர் யூதக் குடியிருப்பில், தன் தொண் டினைத் துவக்கி, அங்கிருந்து தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்து அநேக இடங்களில் சபையைக் கட்டினார். கொச்சிக்கு அருகிலுள்ள கிரங்கனூர் என்பதே பண்டைய முசிரியாகும். இவர் மலையன் காரா, பாலயூர், பாரூர், கோக்கமங்கலம், சாயல், நிரணம், கொல்லம் முதலான இடங்களில் கிறித்தவ சபைகளை ஏற்படுத்தினார். இவைகளைக் கவனிக்கும் பொருட்டு சங்கரபுரி, பக்கலாமட்டம், காளி, காளி யங்கல் ஆகிய 4 குடும்பங்களிலிருந்து குருக்களை நியமித்தார். இவைகளிற் சில இன்றளவும் நின்று நிலவி தோமையரின் தொண்டினை உலகிற்கு உணர்த்திக்கொண்டிருக்கின்றன.

சேர நாட்டில் கரையிறங்கிய தோமையர், சேர நாட்டில் சபைகளை ஏற்படுத்திய பின்னர், பாண்டிய சோழ நாடுகளைக் கடந்து, தொண்டைநாடு சென்றுள்ளார். அவருடைய முடிவு தொண்டை நாட்டில் நடைபெற்றுள்ளது. தொண்டை நாட்டில் தற்போதுள்ள சென்னைக்கு அருகிலுள்ள மயிலாப்பூரில் தங்கி, அங்கு நற்செய்தியைக் கூறி வந்தார். அவர் சொற்பொழிவாற்றிய இடங்கள், அவர் தங்கியிருந்த இடம், இவர் மதவிரோதத்தால் ஈட்டியால் குத்தப்பட்ட இடம், பின் இவர் உயிர் நீத்த இடம், இவர் மறைந்து வாழ்ந்த குகை, இவர் கல்லில் உருவாக்கிய இந்தியாவின் முதல் சிலுவை, இவர் குத்தப்பட்ட ஞான்று, தாகத்தால் தவித்தபோது பாறையினின்றும் நீர் ஊற்று வந்த இடம் முதலியன இன்றும் காக்கப்பட்டு வருகின்றன. இவை, மயிலாப்பூர், சின்னமலை, தூய தோமையர் மலை இவைகளில் இருக்கின்றன.

மயிலாப்பூரில் இவர் வாழ்ந்த இடத்திலேதான் இவர் பெயரால் அமைக்கப்பட்ட பெரிய தேவாலயம் அமைந்து காணப்படுகிறது.

இவர் தமிழகத்தில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். சேர நாட்டில் இவர் ஏற்படுத்திய சபைகள் இன்றும் இவரைப்பற்றிக் கூறிக்கொண்டிருக்கின்றன. மயிலாப்பூர் இவரின் முடிவை உலகுக்குணர்த்திக்கொண்டிருக்கிறது. இவர் கொல்லப்பட்டமைக்குக் காரணம் மத விரோதமே. மத விரோதம் இவரைக் கொல்லும் அளவுக்கு மேலோங்கி இருக்க வேண்டுமானால், இவர் கூறிய கருத்துக்கள் அவ்வளவு ஆழமாகவும், வேகமாகவும் பொதுமக்கள் மத்தியில் பரவியமையே காரணமாகும்.

இவர் கருத்துக்கள் தொண்டை நாட்டிலே வெகுவேகமாகப் பரவிப் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுச் சிறந்தோங்கவே, அங்கு அக்காலே வாழ்ந்து வந்த வைதீகர்களே அது பாதித்தது. அவர்களுக்குத் தாங்கள் முழுவதும் பாதிக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சம் தோன்றிய பொழுது, அச்சத்திற்குக் காரணமான தோமாவை அவர் இருப்பிடத்தில் சென்று ஈட்டியால் குத்திக் கொன்றனர்.

இவர் சேர நாட்டில் ஒளியை ஏற்றிவைத்துப் பின் பாண்டிய சோழ நாடுகளேயும் தன் போதனேயாம் ஒளியால் நிரப்பிப் பின் தொண்டை நாட்டில் ஒளியுடன் கலந்து பேரொளி வீசச் செய்தார்.

‘சான்ருேருடைத்து தொண்டை நாடு’. ஆகவே தன் பிற்கால ஊழியத்திற்குத் தொண்டை நாட்டை அவர் தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லே. சான்ருேரிடையே ஒளி சேருங்கால், அது மேலும் பொலிவு பெற்று விளங்குதல் இயல்பு. இவருடைய முடிவும் ஓர் சிறந்த மேன்மையான முடிவேயாகும். நற்செய்தியின் தூதனுக வந்தவர், தன்னே அதற்கு அற்பணித்தவர், அதன் பொருட்டே கொல்லப் பட்டார் என்பது, தன் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி, நற்செய்தியில் கலந்தார் என்பதையே குறிக்கும். இச் செய்தி எத்தனேபேரைச் சிந்திக்க ஏவியிருக்கும் ?

(யோவா 12 : 24) “கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், நிலத்தில் விழுந்து செத்ததேயாகில் அதிகமான பலனேத் தரும்” என்ற ஏசுநாதரின் உவமையை வாழ்க்கையில் நிலேநாட்டினுர்.

நெல் வீட்டிலே இருக்குமானுல் ஒரு நெல். நிலத்திலே சாகடிக்கப்பட்டு மாற்றுருவாம்

நெற் பயிர் தோன்றியக்கால் இப்போது அநேக நெல்,

" நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது."

என்றும் வள்ளுவர் கருத்தையும் நாம் ஆழ்ந்து நோக்கக்கடவோம்.

இவ்வாறு, தான் உடலால் மறைந்து கருத்தால் அநேகராகப் பரவி நின்றார் தூய தோமையர்.

தோமையரால் பரப்பப்பட்ட நற்செய்தி, கொல்லாமைக் கருத்திற்கு முரணானதா என்பதை அடுத்த தலைப்பில் காண்போம்.

கொல்லாமையும் கிறித்தவமும்

கிறித்தவம் யூத மார்க்கத்தின் முதிர்ச்சியினுல் தோன்றியது. யூத சமயத்தை அடிப்படையாகக் கொண்டு, அக்கட்டிடத்தின் முழுமையே கிறித்தவம்.

கிறித்தவத்தில் கொல்லாமையுண்டா? கொலே தவறு என சுட்டிக்காட்டப் படுகிறதா? என்ற ஐயப்பாடுகள் எழலாம்.

கிறித்தவம் கொல்லாமையையே அடிப்படையாகக் கொண்டது. யூத சமயத்தில் இறைவனுக்குக் கொலேயே விருப்பமானது. ஆகவே இறைவனுக்கு உயிர்களேப் பலியிட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. பலி இல்லேயேல் பாவ நிவர்த்தி இல்லே.

ஆனுல் கிறித்தவத்தில் இக்கருத்து பூரணமாக மறுக்கப்பட்டதுடன், உயிர்ப்பலி இறைவனுக்குப் பிரியமானதன்று; அவரவர் உள்ளத்தை இறைவனுக்குக் கொடுத்து, இறைவாழ்வு வாழ்வதே இறைவனுக்கு பிரியமான பலியென வற்புறுத்தப் பட்டது.

ஆகவே உயிர்ப்பலியிடுவது தவறு எனக் கொண்ட மதம் கிறித்தவம்.

பொதுவாகப் புலால் மறுத்தல் கருத்தை எடுத்துக்கொண்டால், அது உலகிலுள்ள எல்லா நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் போதிக்கக் கூடுமா? எல்லாரும் அதைப் பின்பற்ற முடியுமா என ஆய்ந்தால், அதில் அக்கருத்து சற்று பின்னடைவதை

நாம் அறியலாம். துருவப்பிரதேசங்களை ஒட்டி வாழும் லாப்லாந்தியர்களுக்கும், எஸ்கிமோக்களுக்கும் இக்கருத்து எவ்வளவு பொருந்தும்? அங்கு மாமிசத்தைத்தவிர வேறு உணவே கிடைப்பது அரிது. மாமிசம் அவர்கள் உண்ண வேண்டாம் என நாம் அவர்களுக்குக் கட்டளையிட்டால் அவர்கள் உயிர் வாழ்வதை நாம் விரும்பவில்லை என்பதில் முடியுமல்லவா?

அடுத்து, உயிர் எனக்கூறும் பொழுது அது ஓரறிவுயிர்முதல், ஆறறிவு படைத்த மனிதன் ஈருக் கொள்ளப்படுகிறது. ஓரறிவுயிரைக் கொல்லாமல் மக்கள் சமுதாயம் முழுவதும் எவ்வாறு உயிர் வாழ்வது? அது நடைமுறைக்கு உகந்ததுதானு' என்பதை நாம் ஆயுங்கால் அதிலும் நாம் பின்னடைவதைக் காணமுடியும்.

ஆகவே தான் கிறித்துவத்தில் மனிதன் வேருகவும், மற்ற ஐந்துவகை உயிரினங்களையும் வேருகவும் பிரித்துள்ளனர். ஆதியில், உயிர்களையும் மனிதனையும் படைத்த இறைவன் மனிதனுக்கு மாத்திரமே தன் ஜீவ சுவாசத்தை ஊதினுர் எனவும், எனவே அவன் ஜீவாத்துமாவானுன் எனவும், திருமறை அறிவிக்கிறது. மனிதன் ஒருவன் மாத்திரமே ஜீவாத்மாவையுடையவன். மற்றவை ஜீவாத்மாவையுடையன அல்ல, என்பது திருமறையின் கருத்து. எனவே கொலை என்பது மனிதனைக் கொல்வதையே குறிக்கும், மற்ற உயிரினங்களைக் குறிக்காது எனக்கொள்ளப்படுகிறது.

இந்தக் கண்ணேட்டத்தில் புலால் உண்ணலாமா? என்ற கேள்விக்கும் திருமறை விடை அளிக்கிறது. உண்ணல் என்பது உடல் சம்பந்தப்பட்ட செயல். "மனிதன் உணவினுலே மாத்திரம் உயிர் வாழபவனல்ல. தேவனுடைய வாயிலிருந்து

புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினுலும் உயிர் வாழ்கிருன்.'' ஆகவே உணவு இரண்டாந்தர இடத்தையுடையது. மனிதன் வாயினுள் செல்லும் எதுவும் அவனைக்குற்றப்படுத்தாது, அதாவது அவன் ஆத்துமாவைப் பாதிப்பதில்லை. ஆனுல் உள்ளத்திலிருந்து புறப்படுபவையே அவனைக் குற்றப்படுத்தும்'' என விவிலியம் விளம்புகிறது. இக்கருத்தினையே, கொல்லாமையைக் கொண்டு விளங்கும் சைவமும், சுவாமி விவேகானந்தர் போன்ருேரும் தெரிவிக்கின்றனர்.

பெரிய புராணத்திலே, கண்ணப்பர் வரலாறு தெரிவிப்பதென்ன? புலாலை அறவே வெறுத்து ஒதுக்கிய சான்ருேராகிய, வேதியராம் சிவகோசரியார் பார்க்கமுடியாத, அடையமுடியாத இறைவனை, இறைச்சியைத் தான்உண்டு, இறைவனுக்கும் படைத்த வேடர் குலத்தோன்றலாம், கண்ணப்பர் கண்ணுரக்கண்டார்; உள்ள மார உணர்ந்தார்; அவர் அருள் திறத்தை முனிவராம் சிவகோசரியாருக்கும் காட்டினுர் என்ருல், சிறப்பு, உள்ளத்திற்கல்லவா? இறைச்சியை ஏற்றுக்கொள்ளா சிவகோசரியாரின் இறைவன், கண்ணப்பர் அன்பின் பொருட்டு ஏற்று உண்டார் என்ருல், அதை எவ்வழியில் குறை கூறுவது?

அவ்வாறே சுவாமி விவேகானந்தரும் கூறுவதென்ன? ''பசுவைக் கொன்று தின்னும் புலையரேயாயினும் இறைவன் பாதத்தைத் தியானிக்கும் உண்மையான அடியவராயிருப்பாராளுல், அவரே இறைவனின் சிறந்த அடியார்'' என்பதல்லவா? ஆகவே தான் உள்ளம் பாராட்டப்படுகிறது. வள்ளுவர் கூறுவதும்,

மனத்துக்கண் மாசில ஞதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

என்பதல்லவா!

அப்படியானால் வள்ளுவர் புலால் மறுத்தலை வற்புறுத்துவானேன்?

அவர் புலால் மறுத்தலையும், இல்லலறவியலிலோ, அன்றி பொருட் பாலிலோ, வைக்காமை சிந்திக்கற்பாலது. பொதுவாகப் புலால் மறுத்தல் வாதத்திற்குரியதாக இருந்தாலும்கூட, தங்களை இறைவனுக்கென்று ஒப்படைத்து, இறைவாழ்வு வாழ முடிவு செய்துள்ள துறவிகள் உயிர்களைக் கொல்லக்கூடாது, அல்லது உயிர்க்கொலைக்குக் காரணமாயிருக்கக் கூடாதென வற்புறுத்துவதில் யாரும் தவறுகாண முடியாது.

மேலும் திருவள்ளுவர் வாழ்ந்த காலை, இங்கு பரவி இருந்த பௌத்த சமணக்கருத்துக்கள் மேலோங்கிய நிலையில், இது அவசியம் என்பது கண்கூடு. ஏனெனின், உணவு ஒரு ஆத்துமாவைக் கெடுக்காததாயிருந்தாலும் கூட, மற்றவர்கள் இடறல் அடைவதற்குக் காரணமாகவும் இருக்கக் கூடாது.

புலால் உண்ணுதவர்கள் மத்தியில் வாழும் ஒருவன், நிச்சயம் புலாலை மறுக்கிறவனாகவே திகழ வேண்டுமெனத் திருமறை சொல்லுகிறது. அவன் தனக்காக இல்லாவிட்டாலும் மற்றவர்களின் நன்மையின் பொருட்டு அவ்வாறு செய்ய வேண்டியவனே.

“ஆதலால் உணவு என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு என்றைக்கும் மாமிசம் புசியாதிருப்பேன்” (1 கொரிந்தியர். 8:13)

இக்கருத்தினையே, தமிழ்நாட்டில் வாழ்ந்த வள்ளுவர் தமிழ்ச்சூழ்நிலைக்கேற்ப ஏற்றுக்கொள்வது அவசியத்தின் பொருட்டும், தாம் கூறும் அறநூலுள்

பௌத்த சமண சமயங்களின் கண்ணேட்டத்துடனும், விவரித்துள்ளார் என நாம் கொள்ளலாம்.

மேலும் வள்ளுவர் கிறித்தவத்தை ஏற்றுக் கொள்ளு முன்பு சமணராக வாழ்ந்திருத்தல் வேண்டும். பௌத்தர்கள் புலால் மறுத்தலில், சற்று நீக்குப்போக்குடையவர்கள், அதாவது தாஞக இறந்த விலங்கின் மாமிசத்தைப் புசிக்கலாம்; ஒரு விலங்கைக் கொன்றுதான், தின்னக் கூடாதென்ற கொள்கையுடையவர். ஆஞல் சமணர்கள் புலால் மறுத்தலை, மற்ற யாவரிலும் அதிகம் கடைப்பிடித்தவர்கள். அந்த வழியே வந்த வள்ளுவர், அந்தக்கருத்தினை மருது ஏற்றுக் கொண்ட கிறித்தவ நிலையில், தன் கருத்தினைத் துறவறவியலுள் வற்புறுத்தியது, எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

கிறித்தவ சமயத்தைப் போதிக்க வந்த - புலாலையே பெருவாரியான உணவாகக் கொண்ட— மேல் நாட்டினர் சிலர், நம் தமிழ் நாட்டில் புலால் உண்ணுத தூய சைவராக வாழ்ந்தமை கண்கூடு. தத்துவப்போத சுவாமி என அழைக்கப்பட்ட, ராபெர்ட் டி நோபிலியின் வாழ்க்கை, இதை நமக்கு நன்கு விளக்குகிறது. அடுத்து, வீரமா முனிவர். இவரைப்பற்றிப் புலவர் அகராதி கூறுவது: ''இவர் பிராமணரைப் போலவே சைவ உணவு கொண்டு ஆசாரமுடையவராய் வாழ்ந்தார்'' (பக். 379) என்பது.

இதிலிருந்து, துறவு நிலையில் தமிழ் நாட்டில் வாழ்ந்த மேல்நாட்டினரும்கூட, புலால் மறுத்தலைக் கையாண்டார்கள் என்ருல், கிறித்தவம் புலால் மறுத்தலுக்கு ஆதரவு என்பதும் தெளிவு. இது மாத்திரமின்றி, சமண சமயத்தைச் சேர்ந்த தமிழ

ரான பேராசிரியர் திரு. சக்கரவர்த்தி நயினர் அவர்கள் கூறுவது :—

"ஏசுநாதர் கிறித்தவ மதத்தைப் போதிப்பதற்கு முன்பு யோவானிடத்தில் தீக்கை பெற்றுர். யோவானிடத்தில் தீக்கை பெறுபவர்கள் புலாலையும், மதுவையும் விலக்கிவிட்டுத்தான் ஞானக் குளியல் செய்து கொள்ள முடியும். ஏசுநாதரும் இதன்படி கொல்லாமை நெறியை ஏற்றுக்கொண்டார் என்றே நினைக்கவேண்டியுள்ளது. வைதீக யூதமதம் தன் மையக் கொள்கையாகக் கொண்ட இன வேறுபாட்டை ஏசுநாதரும் வன்மையாகக் கண்டித்தார். யூதர்களின் சடங்குகளும் விலங்குக் கொடையும் அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை".

—திருக்குறள் வழங்கும் செய்தி. (பக். 44.)

திருவள்ளுவருடைய கொல்லாமை, புலால் மறுத்தல் முதலியன கிறித்தவக் கருத்துக்களுக்கு உட்பட்டதுமன்றி தமிழ் நாட்டுக் கிறித்தவத் துறவிகள் கையாள வேண்டிய கடமையையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இதையே கிறித்தவத் துறவிகள் கையாண்டனர்.

எனவே கொல்லாமையும், புலால் மறுத்தலும் கிறித்தவத்திற்கு உட்பட்டதே என்பது தெளிவு.

இனி கிறித்தவர் என்பது யாரைக் குறிக்கும் என்பதை நோக்குவோம்.

யார் கிறித்தவன் ?

இந்தக் கேள்விக்கு யாரும் எளிதாக விடை கொடுக்க முடியும். கிறித்தவ மதத்தில் சேர்ந்தவர்கள் யாவரும் கிறித்தவர்களே, என்பது அந்த விடை. ஆனுல் இப்பதில் முழுமையானதா என நாம் ஆராய வேண்டியவர்களாகிருேம்.

கிறித்து ஒரு மதத்தை ஏற்படுத்த உலகிற்கு வந்தாரா என்ருல், இல்லே என்றுதான் பதில் கொடுக்க முடியும். கிறித்துவின் உபதேசங்கள் ஒரு தனிப்பட்ட பிரிவினர்க்குரியது அல்ல. மனித சமூகம் அத்தனைக்கும் பொதுவானதே. அப்படியானுல் கிறித்தவர்கள் எனக் குறிப்பிட்ட ஒருபிரிவினர் அழைக்கப்படக் காரணம் என்ன? ஆரம்ப காலத்தில் கிறித்துவின் போதனைகளைத் தங்கள் வாழ்க்கையில் கைக்கொள்ளுவோம் என உறுதி பூண்டு ஒரு குழுவாகச் சேர்ந்தனர் பலர். அவர்கள் தங்களைக் கிறித்தவர்கள் என அழைத்துக்கொள்ளவில்லை. ஆனுல் மற்ற மக்கள் அவர்களில் கிறித்துவின் போதனையை நடைமுறையில் கண்டமையால், கிறித்து + அவன் = கிறித்தவன். அதாவது அவனே கிறித்து, என அழைக்கலாயினர். இவ்வாறு கிறித்தவன் என முதன் முதல் அந்தியோகியா என்னும் இடத்திலுள்ளவர்களே மற்றவர்களால் அழைக்கப்பட்டனர். (அப்போ. 11 : 26) அதுவரை அவர்கள் சீடர்கள் (மாணவர்கள்) எனவே அழைக்கப்பட்டனர். இவவாறு அந்தியோகியாவில் அழைக்கப்பட்டபெயர், பிற்காலத்தில் அவர்களோடு சம்பந்தப்பட்ட நாட்டிலும் அழைக்கப்பட்டது.

இந்தியாவிற்குத் தோமையர் வந்து, கிறித்துவின் நற்செய்தியை உரைத்தபோது, அச்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்கள் கிறித்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் என நாம் திட்டமாகச் சொல்வதற்கில்லை. கிறித்துவின் உபதேசங்களை வாழ்க்கையில் கையாண்டு நடந்தனர். தாங்கள் மற்றவர்களுக்கும் அதே கருத்தினையே வற்புறுத்திக் கூறினர். ஆகவே ஒருவன் கிறித்தவனா என அறிவதற்கு அவன் பெயரோ, மதமோ பயன் படாது. தற்காலத்தில் ஏசுவின் போதனைக்கும் வாழ்க்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாதவர் களும், பிறப்பாலும், பெயராலும், மற்றவைகளா லும் கிறித்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் கிறித்துவின் போதனைகளைச் சரி வர நிறைவேற்றிவரும் உண்மைக் கிறித்தவர்கள் வெளிப்படையாகக் கிறித்தவர்கள் என அழைக்கப் படாநிலை இருப்பதை நாம் கண்ணுறுகிறோம். ஏன் இந்த நிலை இருக்கிறதென்றால், ஒருவன் உள்ளத் தில் கிறித்துவை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது. வெளியரங்கமான சில சடங்காச்சாரங் களையும், கிறித்தவ மதத்தில் செய்யவேண்டியவன் ஆகிறான். உள்ளத்தில் கிறித்துவற்றவன் வெளி யரங்கமான சடங்காச்சாரங்களின் மூலம் கிறித் தவன் என அழைக்கப்படும் நிலைமையும், உள்ளத்துள் கிறுத்துவையுடையவன், வெளியரங்க மான சடங்காச்சாரங்களை விரும்பாத காரணத்தால் கிறித்துவில்லாதவன் என அழைக்கப்படும் நிலையும் ஏற்படுவதை இதன் மூலம் அறியமுடியும்.

ஆகவே இந்த நிலையில் கிறித்தவன் என்றால், அதன் உண்மைப்பொருள், பெயர்க் கிறித்தவனைக் குறியாது, உள்ளத்தால் கிறித்தவனையே குறித்து நிற்கும். உள்ளத்தால் கிறித்தவனை நாம் அறியும் விதம், அவன் மனம், வாக்குக் காயங்களில் விளங்கித்

தோன்றும். மரம் நல்லது கெட்டது என்பதை எவ்வாறு அதன் கனி வெளிப்படுத்தி நிற்கின்றதோ, அவ்வாறே மனிதனின் நிலையை அவன் சொல்லும் செயலும் வெளிப்படுத்தி நிற்கும். கிறித்துவின் போதனையைச் சொல்லாலும், செயலாலும் வெளிப் படுத்தி நிற்பவனே கிறித்தவனே யொழிய, மற்ற எவற்ருலும் கிறித்தவன் ஆக முடியாது.

ஏசு பெருமானும் இதைக் குறித்துக் கூறுவது: "என் பிதாவின் சித்தப்படி செய்கிறவர்களே தேவ னுடைய இராஜ்யத்தில் சேருவார்களேயல்லாது என்னை நோக்கிக் கர்த்தாவே, கர்த்தாவே எனக் கூறுகிறவர்கள் அல்ல." (மத். 7:21-23)

"எனக்குத்தாய் யார்? சகோதரர் யார்? நான் விரும்புகிறபடி செய்கிறவர்களே."

இந்த நிலைப்படி ஒருவன் கிறித்தவனு? அல்லனு? என்பதை உறுதிப்படுத்துவது அவன் செயல்களே. செயலுக்குக் காரணம் சொல்லும், சொல்லுக்கு மூலமாயிருப்பது எண்ணமுமேயாகும். கிறித்து உள்ளத்தில், எண்ணத்தில் இருப்பா ராஞல், சொல்லும் செயலும் அதை வெளிப்படுத்தி நிற்கும். அதுவே ஒருவனைக் கிறித்தவன் என உணர்த்துவது புறம்பான எந்த அடையாளமோ அல்லது பிறப்போ அல்ல. அவனது சொல்லும் செயலுமேயாகும்.

ஒருவனுடைய சொல்லும் செயலும் கிறித்துவை வெளிப்படுத்தி நிற்க வேண்டுமாஞல், அவன் வெளிப்படையாகக் கிறித்துவின் பெயரைக் கூறிஞ லன்றி எவ்வாறு அறிதல் இயலும். ஏனெனில், அவன் அறநெறியில் தவருது ஒழுகி வருவாஞஞல், அறக் கருத்துக்கள் எல்லாச் சமயங்களிலும் காணப் படுவதால், அவன் எல்லாவற்றிற்கும் பொதுவான வஞகத்தானே காட்சியளிக்க முடியும். அவ்வாறு

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான கருத்துக் கொண்ட ஒருவனை, ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் சமயத்தைச் சார்ந்தவன், எனச்சொந்தம் கொண்டாடல் இயல்புதானே, என எண்ணத் தோன்றும். ஆனால் நுட்பமாக ஆய்கின்றவர் களுக்குக் குறிப்பிட்ட அவனின் கருத்து எந்த ஊற்றி லிருந்து புறப்பட்டு வருகிறதெனத் தெற்றென விளங்கி நிற்கும்.

ஒருவன் எவ்வளவுதான் பொதுக்கருத்துடைய வனாகத் திகழ்ந்த போதிலும், குறிப்பிட்ட சில கருத்துக்கள் அதிக முக்கியத்துவமும், உயிர் நாடி யுமாக அவனுள் மேம்பட்டு நிற்கும். அக்கருத் துக்கள் அவனின் சார்பை வெளிப்படுத்தி நிற்கும். ஆகவே பொதுவான, சாதாரணக் கருத்துக்களாம் அறங்களுக்கும், அவ்வவ்வழியின் உயிர்நாடியாம் சிறப்புக் கருத்துக்களுக்கும் வேற்றுமையுண்டு.

ஆகவே ஒருவன் கூறும் அறக்கருத்துக்களுள், உயிர்நாடியான கருத்துக்களைப் பிரித்தெடுத்து; ஆராயின், அம்மூலக்கருத்துக்கள் எவ்வூற்றிலிருந்து புறப்பட்டன என்பதை நாம் கண்டு தெளியலாம்.

இதுவரை நாம் பார்த்ததிலிருந்து, கிறித்தவன் யார் எனக் கண்டுகொள்ள, வெளிப்படையான அடையாளங்களும், செயல்களும் பயன்படாது. அவன் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கிறித் துவின் எண்ணங்கள் புறப்பட்டு வருகின்றனவா என ஆழ்ந்து ஆராயின் அதுவே காட்டி நிற்கும். உள்ளத்திலே ஒளி இருப்பவனுக்கு அதை மறைத் துக்கொள்ள முடியாது. அந்த ஒளியை வெளிப் படுத்தி நிற்பவனே கிறித்தவன். அவன் ஒரு இனத்தையோ அல்லது ஒரு மதத்தையோ சார்ந்த வன் அல்ல. அவன், கிறித்து எவ்வாறு உலகிற்குப்

பொதுவானவரோ அவ்வாறே உலகிற்குப் பொது வானவன்.

அந்த விதையிலிருந்து ஆயிரக்கணக்கான மணிகளை உலகம் பெற்றுக்கொள்ளும். அம்மணி களும் மேலும் மேலும் பெருகி நிற்கும்.

இனி திருவள்ளுவர் கிறித்தவரா என்னும் உண்மை காண, கிறித்தவர் அல்ல என்பதற்கு ஆதரவான கருத்துக்களை முதற்கண் நோக்கு வோம்.

திருவள்ளுவருக்கு முரண் கிறித்தவம்

1. கொல்லாமையை வள்ளுவர் ஆழ்ந்து சொல்லுகின்றார். கிறித்தவத்தில் கொல்லாமை வற்புறுத்தப்படவில்லை. அதுமாத்திரமின்றி கிறித்தவர்கள் புலால் உண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

2. மறுபிறவிக் கொள்கையுடையவர் வள்ளுவர். கிறித்தவர்களோ மறுபிறவிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்கள்.

3. பிறவி வினையால் வருகின்ற ஊழ் கிறித்தவக் கருத்தில் இல்லாத ஒன்று. ஆனால் வள்ளுவர் அதை ஏற்றுக் குறட்பா யாத்துள்ளார்.

4. திருக்குறளில் கிறித்தவப் பெயர்கள் ஒன்றும் குறிக்கப்படவில்லை. மாறாக இந்துப் பெயர்களும், சமணமோ என ஐயம் கொள்ளும் பெயர்களுமே குறிக்கப்பட்டுள்ளன. அவர் ஒரு கிறித்தவராய் இருந்திருப்பாரானால் இந்துப் பெயர்களை எடுத்தாண்டவர், நிச்சயம் கிறித்தவப் பெயர்களையும் கையாண்டிருக்க முடியும்.

5. இவர் காலம் கி. மு. 30 என மிகப் பழங் காலத்திலிருந்தே சொல்லப்பட்டு, எவ்வாறு கிறித்துவுக்கு ஆண்டு கணக்கிடப்படுகிறதோ, அதே போன்று வள்ளுவருக்கும் ஆண்டு கணக்கிடப்பட்டு வருவது யாரும் மறுக்க முடியாத உண்மை. முப்பது ஆண்டுகளுக்குப் பின் பிறந்தவருடைய கருத்தை,

முப்பது ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர் எடுத்து ஆண்டுள்ளார் எனக் கொள்வது எவ்விதத்திலும் பொருந்தாக் கருத்தே. ஏன் வள்ளுவர் கருத்தைக் கிறித்து கையாண்டார் எனக் கொள்ளக் கூடாது? அவ்வாறு கொண்டால் வள்ளுவத்திலிருந்து தோன்றியதே கிறித்தவம் எனப்படுமல்லவா? வள்ளுவர், அறம் போதித்த பெரியார் என்பது போலவே, ஏசுவும் அறம் போதித்தவர் எனக் கொள்ளலாமேயன்றி அவரை இறைவன் என எவ்வாறு கொள்ள முடியும்?

6. இவ்வளவு சிறந்த நூலை எழுதிய வள்ளுவர், உண்மையில் கிறித்தவராக இருந்திருப்பாராஞல், மற்ற வரலாறுகளையெல்லாம் திட்டமாக அளவிட்டுக் கூறும் கிறித்தவம், வள்ளுவரைப் பற்றியும் கூறியிருக்கலாமல்லவா? அவ்வாறு எங்குமே கூறப்படாமையிலிருந்து, வள்ளுவருக்கும் கிறித்தவத்திற்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பது விளங்குகிறதல்லவா?

7. வள்ளுவர் கூறும் கருத்துகளுக்கும் கிறித்தவக் கருத்துக்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது. ஆகவே வள்ளுவர் கிறித்தவர் எனக் காட்ட முற்படுவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அன்று. எவ்வாறெனில் எல்லா மதங்களும் அறக் கருத்துக்களைக் கூறுபவைகளே. அவ்வாறு அறக் கருத்துக்களைக் கூறும் மதங்களுள், உயர்ந்த கருத்துக்களில் ஒற்றுமை நிலவுவது, பிரிக்க முடியாத ஒன்ருகும். இம் முறையில் சிறந்த கருத்துக்களை கிறித்துவ மதம் கொண்டுள்ளமையினுலே, இன்று உலகின் பெரும் பகுதியினர் கிறித்தவர்களாகத் திகழ்கின்ருர்கள். அவ்வாறே வள்ளுவர் நூலிலும் சிறந்த கருத்துக்கள், தமிழ்ப் பொழிலில் தோன்றிய பூக்களுள் சிறந்த ஒன்ருகக் கொள்ளலாம். ஆகவே

கருத்தொற்றுமை காணப்படின், அது வள்ளுவரின் சிறப்பைக் காட்டுகிறதேயன்றி, வள்ளுவர் காப்பியடித்தார் எனக் கூறுவது சிறிதும் தகுதியன்று. அதிலும் ஒரு தமிழன், சிறப்பாகத் தமிழ்ப் புலவன் இதைக் கூறுவானுனால், அதை நாம் வள்ளுவரைப் பெற்றெடுத்த தமிழ்த் தாய் இப்படி ஒருவனையும் ஈன்றுவிட்டாள் என்றே வருந்த வேண்டியுள்ளது.

8. வள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்ததால் தோமையரின் மூலம் கிறித்தவக் கருத்துக்களை அறியலானுர் என்பது எவ்வளவு பொருந்தும் என்பது தோன்றவில்லை. வள்ளுவர் மயிலாப்பூரில்தான் வாழ்ந்தார் என்பதற்குத் திட்டமான ஆதாரம் கிடையாதபோது, அங்குதான் வாழ்ந்தார் எனக் கொள்ளுவது ஏற்றமுடைத்தன்று.

9. கிறித்தவர்களுள்ளும் துறவறம் மேலானது என்னும் கொள்கை கொண்டுதானே மதக்குருக்கள் துறவிகளாக வாழ்கின்ருர்கள். இல்லறமே சிறந்ததென்னும் கருத்திணைக் கொண்ட வள்ளுவத்திற்கு இது முரணுகும் அல்லவா?

10. பல தெய்வக் கொள்கை கிறித்தவத்தில் கிடையாது என்பது அங்கு பிதா, சுதன், ஆவி என மூவகையாக விளங்குவதால், உண்மைக்கு மாருன கருத்தாகும். திருவள்ளுவர் ஏக தெய்வ வணக்கமுடையவரெனில், கிறித்தவம் இதற்கு முரணுவது கண்கூடு.

11. திருவள்ளுவர் கிறித்தவரெனக் கொண்டால், கிறித்தவத்தைப் பரப்ப எழுந்ததாகத் திருக்குறளைக்கொள்ள நேரிடும். அவ்வாறு கிறித்தவம் தமிழ் நாட்டில் பரப்பப்பட்டிருக்குமாஞல், அதைப் பற்றிய வரலாறு இலக்கியத்தில் குறிக்கப்பட்டிருக்கும். இலக்கியத்தில் இதைப் பற்றிய குறிப்பு எங்குமே காணுதற்கில்லை. ஆங்கில வர்த்தகர்

களோ, அல்லது போர்த்துக்கீசிய வர்த்தகர்களோ தமிழ் நாட்டிற்கு வந்தபோது, தாங்கள் கைக் கொண்டு போற்றி வந்த கிறித்தவத்தைப் பரப்பினுர் களேயன்றி, அதற்கு முன் நிலைபெறவில்லை. திருக் குறள் கிறித்தவ நூலாக இருக்குமானுல், நிச்சயம் அதன் தொடர்ச்சி இருந்திருக்க வாய்ப்பு உண்டு. இலக்கியத்திலும் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

12. செவிவழிச் செய்தியாக வழங்கப்படும், வள்ளுவரைப் பற்றிய கதைகளிலும், அவர் கிறித்த வர் என்ற செய்தி கிஞ்சித்தும் காணப்படவில்லை. அவர் கிறித்தவராக வாழ்ந்திருப்பாராஞல் செவி வழிச் செய்தி நிச்சயம் அதைக் குறிப்பிடத் தவறி யிருக்காது. வேற்றுருவத்துடனுவது அது வழங்கி இருக்க வாய்ப்பு உண்டு.

ஆகவே வள்ளுவருக்கும் கிறித்தவத்திற்கும் எவ்விதத்திலும் தொடர்பிருக்க வாய்ப்பில்லை என் பது வெள்ளிடைமலை.

ஆய்வு

1. கொல்லாமை முன்பே விளக்கப்பட்டு, கிறித்தவத்திற்கு முரணுனது அன்று என உறுதி செய்யப்பட்டுள்ளது. ‘கொலை செய்யாதிருப் பாயாக’ என்ற கட்டளையும், புலால் உண்ணுவது இந்தியத் துறவிகளுக்கு ஏற்றதல்ல என்ற கருத்தும், உயிர்ப்பலியை நிறுத்திய உயர்பான்மையும், தன்னுயிர்போல மன்னுயிரையும் நேசிக்கும் சிறப் பும், விலங்குகள் பறவைகள் இவைகளும் அன்பு பாராட்டிய தூய சவேரியார் போன்ருேர்களைக் கொண்டதும், இன்னு செய்தார்க்கும் இனியவே

செய்யவும், வாழ்த்தவும் போதித்துள்ளமதம் கொல்லாமைக்கு முரணுனது என அறிஞர் எவரும் ஒவ்வார். சேரநாட்டுச் சபைகளுள் கொல்லாமை நிலைத்து நின்றது. ஆகவே தோமா கொல்லாமைக் கருத்தினையே போதித்தார். ஆங்கிலேயர் வரவால் அவர்களுடன் புலால் உண்ணல் வந்தமை கண்கூடு. அதற்கு முன் புலால் உண்ணல் இந்தியக் கிறித்தவத்தில் இல்லை.

2. மறுபிறவியை மறுக்கும் சமயம் கிறித்தவம் அல்ல. மறுபடியும் பிறக்க வேண்டும் என வற்புறுத்தும் வழியைக் கொண்டதே அது. ஆனல் உடல் செத்துப் பிறக்கும் மறு பிறவியை அல்ல; உள்ளம் மாறிப் பிறக்கும் மறுபிறவியையே வற்புறுத்துவது. இதையே வற்புறுத்துவது தான் வள்ளுவம் என்பது முன்பே நிறுவப்பட்டுள்ளது. மனுக்குலம் அத்தனைக்குமான, பாவத் தொடர்ச்சி, மனிதனுக்குப் பிறக்கும் பொழுது பின்தொடர்கிறது. இவன் தனிப்பட்ட முறையில் செய்யும் பாவமும், அதனுடன் சேர்ந்து அவனை இழிநிலைப்படுத்துகிறது. இந்தப் பிறவிக் கடலிலிருந்தும், பாவக்கடலிலிருந்தும், கரையேற்றுபவரே இறைவன் எனக்கிறித்தவம் கூறுகின்றது. அதே கருத்தினையே வள்ளுவரும் தெரிவிக்கின்ருர். ஆகவே இரண்டு கருத்தும் ஒன்றே யொழிய முரணுனது அன்று.

(பிறவிப் பெருங்கடல், பிறவாழி நீந்தல்)

3. வள்ளுவர் குறிக்கும் ஊழ், பழவினையை அடிப்படையாகக் கொண்டதன்று. இறைவன் உலகை நடத்திச் செல்லும் முறைமையை அடிப்படையாகக் கொண்டதென்ற முடிவு விளக்கப்பட்டுள்ளது. ஆகவே பழவினையையே அடிப்படையாகக் கொண்ட மற்ற எல்லாச் சமயங்களிலும் வள்ளுவர் மாறுபட்டு, முறைமையை வற்புறுத்தும்

கிறித்தவம் ஒன்றுடன் மாத்திரமே இணைந்து செல்லுகின்றார். ஆகவே அவர் கால மதங்களுள் அவர் கருத்துடன் முரணுகை அன்று, இணைந்து விளங்குவது கிறித்தவம் ஒன்று மட்டுமே என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

4. திருவள்ளுவர் இந்துப் பெயர்களைத் தன் குறட்பாவினுள் கையாண்டுள்ளார்; கிறித்தவப் பெயர்களைக் கையாளவில்லை, என்ற கருத்து முழு மையானது அன்று. அவர் கூற வந்தது அறநூல்; மதநூல் அன்று. ஆகவே அறத்தைக் கூறுங்கால் அவர் மதத்தின் அடிப்படைக் கண்ணோட்டம், மாத்திரமே வெளிப்பட்டு நிற்குமே யொழிய, மதப் பெயர்கள் வெளிப்பட்டு நிற்க வாய்ப்பு இல்லை.

இந்துப் பெயர்களையும் வள்ளுவர் கையாள வில்லை. எந்த இடத்திலாவது சிவன், திருமால், முருகன், பிரமன் என எழுதியுள்ளாரா? அல்லது பார்வதி, இலக்குமி, சரசுவதி என எழுதியுள்ளாரா? என நாம் ஆய்ந்தால், ஓரிடத்திலும் அவர் அவ் வாறு உபயோகிக்காதது மாத்திரமன்றி, அருக சமயப் பெயர்களான அருகன், ஜீனன் போன்ற பெயர்களையும் அவர் கையாளவில்லை.

அவர் கையாண்டுள்ள அத்தனையும் உவமை களே. தமிழ்நாட்டில் இந்த உவமைகளுடன் கூடிய பெயர்களுக்கு, அதனதன் பொருளைக்குறிப் பது நூல் மரபு. திருமகள் என்றால் தமிழ் மரபில் செல்வத்தைக் குறிக்குமேயன்றி இறைவனைக் குறிப் பதல்ல. அப்படியே, வறுமையைத் தவ்வை, முகடி எனவும், உயிர்ப்பிரிப்பைக் கூற்றுவன் என்பதும், தமிழ் மரபேயொழிய ஒரு குறிப்பிட்ட மதத்தின் பெயர்கள் அல்ல. புலவர்கள் மக்களிடையே வெறு மனே, நிலம் எனக் கூறுவதைவிட, நில நல்லாள் எனக்கூறுவது தாங்கள் கொடுக்க விரும்பும் அழுத்

தத்தை, அந்தந்த இடத்தில் கொடுப்பதற்காகவே. அதன் மூலம், கருத்து சிறப்படைந்து அணியுடன் பொலிவுபெற்று விளங்கும்.

அடுத்து அவர் கருத்துக் கூறுவது, தமிழ்மொழியில்; அதாவது தமிழ் மக்களுக்கு. ஒருவர் எவ்வளவு கற்றவராக இருந்திடினும், அவர் கருத்துக்களைக் கேட்கும் மக்களுடைய அறிவிற்கு ஏற்றவாறு எளிய முறையில் விளங்கும்படி அவர்களுக்குத் தெரிந்தவைகளை வைத்துத் தெரியாக்கருத்துக்களை விளக்குவதே சிறப்பு எனக் கூறியுள்ள வள்ளுவர், அதைத் தானே கையாண்டிருப்பார்.

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். (711)

இவ்விடத்து 'அவையறிந்து' என்பதன் பொருளை உட்கொண்டே, தமிழர்களான அவைக்கு, அவர்கள் நடைமுறையில் விளங்கக் கூடிய பெயர்களால் கருத்தினை வள்ளுவர் விளக்குகிறார்.

கிறித்தவப் பெயர்களை ஏன் கையாளவில்லை என்றால் நாம் முன்பே பார்த்தது போன்று, எந்த மதத்தின் பெயரையும் அவர் கையாள அவசியம் இல்லை. ஏனெனில் கூறுவது மதநூல் அன்று, அறநூல். கிறித்தவப் பெயர்களும் தமிழ்நாட்டிற்குப் புதியவை. ஆகவே சொல்ல அவசியமில்லாப் பெயர்களைத் தேவை இல்லா இடங்களில் வலிந்து புகுத்தும் குற்றம், வள்ளுவரை அணுகவும் இயலாது. மதநூலில்தான், மதம் தோன்றிய வரலாறு, செயல்படும் முறையுடன் மதக்கருத்து பின்னிப் பிணைந்து செல்லும். அறநூலுள் வரலாறு தேவை இல்லை. கருத்து மாத்திரமே இணைந்து செல்லும் இம்முறையையே வள்ளுவரும் கையாண்டுள்ளார்.

5. கிறித்துவுக்கு ஆண்டு கணக்கிடுவது போன்று, வள்ளுவருக்கும் ஆண்டு கணக்கிடுவது

இவருடைய சிறப்பையே காட்டுகிறது. இருவருடைய ஆண்டுக்கும் 30 ஆண்டுகளே வேற்றுமை உள்ளது என நாம் காணுங்கால், ஏறத்தாழ இருவரும் ஒரு காலத்தில் வாழ்ந்தவர் என நாம் கொள்ள ஏதுவாகிறது. கிறித்துவைப் பின்பற்றிய மாணவர்களில் பெரும் பகுதியினர், கிறித்துவைவிட வயதில் பெரியவர்கள் என நாம் பார்க்கிறோம். இயேசுவைச் சிலுவையிலறைந்தபோது, முப்பத்து மூன்றரை வயது நிரம்பிய இளைஞராகவே காணப்பட்டார். அவர் வெளிப்படையாக மக்கள் மத்தியில் கருத்துக்களைப் பரப்பிய காலம் மூன்றரை ஆண்டுகளே. அந்த மூன்றரை ஆண்டுக்காலங்களில்தான், சீடர்கள் அவரைப் பின்பற்றியது. சீடர்கள் வயதால் முதியவராயினும், அவரைப்பின் பற்றக் காரணம் என்ன? அதுதான் இறையருள். திருநாவுக்கரசு சுவாமிகளைவிட, திருஞான சம்பந்தப்பெருமான் ஆண்டில் மிகவும் இளைஞரே. அவ்வாறிருக்க சம்பந்தர் பல்லக்கைச் சுமக்க, நாவுக்கரசர் ஆவல் கொள்ளக் காரணம்என்ன? அதுவும் மறைந்து நின்று சுமந்துவரும் அளவுக்கு அடியவர் ஆசை செல்லுமானால், அங்கு வயது ஏற்றத்தாழ்வுக்கு ஏதாவது பொருள் உண்டா? வயது ஏற்றத்தாழ்வு சிறந்தவர்களுக்கு மதிப்புக் கொடுப்பதற்குப் பின்னடைந்ததாக வரலாறு இல்லை.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

இதன்கண் "யார் யார்" என்பது விளக்குவது, வயதையும் உள்ளடக்குகிறதன்றோ. கூறுபவர் இளைஞரேயாயினும், சிறந்த கருத்தைக் காண்பதே அறிவு எனக் கூறியவர், வயதால் ஏற்றத்தாழ்வு நோக்க இடமிராது.

இருவருக்கும் ஆண்டு கணிக்கப்படுவதிலிருந்து இருவரும் சமுதாயத்தில் மாபெரும் புரட்சி செய்

தவர்களாக நாம் கருத வாய்ப்புண்டு. மக்கள் மறக்காத அளவுக்கு அவர்கள் புகழ் நிலைத்திருக்கின்றதென்பதையே இது காட்டி நிற்கின்றது. இக் கண்ணோட்டத்தில் சில கருத்துக்களை ஆழ்ந்து நோக்குவோம்.

இருவருடைய கருத்துக்களும் ஒரே அமைப்பில் இணைந்து செல்லுபவை. மக்கள் மத்தியில் மாத்திரமன்றி,மதத்திலும் புரட்சியைஏற்படுத்தியவை. அம் மதப் புரட்சிக்கு, யூதேயநாட்டில் கிறித்துவும், தமிழ் நாட்டில், வள்ளுவரும் மாத்திரமே முதன்மையானவர்கள். அப்போது இக் கருத்தோடு தொடர்புடைய கருத்துகளைத்தெரிவித்தவர்கள் வேறுயாருமே தமிழ் நாட்டில் இல்லை. ஆகையால்தான் இவர், புது மதக் கருத்தாம், புது மறை அமைத்த புது நான்முகன் எனவும், குறளும், மறை எனவும் மக்களால் அழைக்கப்பட்டது. யூதேய நாட்டில் கிறித்து இக் கருத்தை அடிப்படையின்றி முழுவதும் கூறவில்லை. யூத மதத்தின் அடிப்படையிலேயே, அதைவிடச் சிறப்புக்களான கருத்துப் பொலிவுடன், கிறித்தவம் அமைக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி இயேசு, இறைவனின் அவதாரம் என அவர் தோன்றும் காலத்திற்கு முன்பே தீர்க்கதரிசிகள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் தோன்ற வேண்டிய அவசியமும், அவர் தோன்றிச் செய்யப்புகும் காரியங்களும் திட்டமாக முன் குறிக்கப்பட்டிருந்தன.

அவர் தோன்றியகாலை, முன்பே குறிக்கப்பட்டதைத் திட்டமாய் அறிந்த, அதாவது யூதக் கருத்துக்களையும், வானசாத்திரத்தையும் நன்கு கற்றிருந்த முனிவர் மூவர், இந்தியாவினின்றும் புறப்புட்டு யூதேயநாடு சென்று, கண்டு வணங்கிக் காணிக்கையும் கொடுத்துள்ளனர்.

முன் குறிப்பிட்டபடியே பிறந்தார். முன் குறிப்பிட்டபடியே கொல்லப்பட்டு, முன் குறித்தபடியே

மரணத்திலிருந்து எழுந்தார். ஆகவே அவர் வாழ்க்கை, போதனை, உயிர்த்தெழல் எல்லாம் எதிர் பாராமல் நடக்கவில்லை. முன் குறிப்பிட்டவைகளின் நிறைவேற்றமாகவே இருந்தது.

ஆகவே இத்தகைய போதனை எழக்கூடிய ஓர் இடம் இருக்க வேண்டுமானால், அதற்குத் தகுந்த சூழ்நிலையும், முன்பின் தொடர்ச்சியும் வேண்டியதிருக்கிறது. இவை அத்தனையும் இயேசுவாகிய பிறப்போடு ஒருங்கியைந்து சென்றன. இவை கட்டுக்கதையல்ல. வரலாறு கூறும் காட்சிகள். அத்தனையும் திட்டமான தேதியுடன் கூடியதாக விளங்குகின்றன. ஆகவே இயேசுவின் மூலம் இக் கருத்துக்கள் வெளிப்பட, மற்றச் சூழ்நிலையும், காலமும், தேவையும், நிறைவேற்றுதலும் இருந்தது. ஆனால் வள்ளுவருடன் இவை ஒருங்கியைந்து செல்லுதலை நாம் காணமுடியாது.

இரண்டாவதாக இவர் செய்தது மத நூலும் அன்று. வள்ளுவர் ஒரு மதத்தை ஏற்படுத்தினர் எனக் கூறவும் முடியாது. அறக்கருத்துக்கள் யாவும் அவர் உள்ளத்திலிருந்து மாத்திரமே புறப்பட்டன எனக் கொள்ளவும் இயலாது. மற்றவர்கள் கருத்தினை ஏற்றுச் செய்யுள் செய்துள்ளார் என்பது :-

யாம் மெய்யாய்க் கண்டவற்றுள், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை, என்றுரைக்கும் நூல், யாமறிவது இல்லை முதலியவற்றால் விளங்கி நிற்கின்றது. வள்ளுவர் மிகச் சிறந்தவர் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் அவரை இறைவனாக யாரும் கொண்டாடவில்லை. அவருக்குக் கோயில் கட்டி வழிபாடியற்றுபவர்களும், முன்னோருக்கும் செலுத்தும் மரியாதைகளைச் செய்கின்றனரேயன்றி, இறைவனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவரும் எந்த இடத்

திலும் தன்னை இறைவனாகக் கூறவில்லை. ஆனால் இயேசு பெருமான் தன்னை திட்டவட்டமாகப் பல இடங்களில் இறைவன் எனக் கூறியுள்ளார். இன்று உலகில் பெரும் பகுதியினர் அவரை இறைவனாக ஏற்றுள்ளனர். ஆகவே வள்ளுவர் கூறும் வாலறிவன் நிலைக்கு இயேசு கொண்டாடப்படுவதால், அவரிடம் பூரண புதுக் கருத்துக்கள் வெளிப்பட்டன.

அதே புதுக் கருத்துக்கள், தமிழ் நாட்டிற்கு வந்து, வள்ளுவர் மூலமாக வெளிப்படலாயிற்று. மக்கள் இங்கு வள்ளுவரைப் போற்றினர். ஆண்டு கணக்கிட்டனர், வள்ளுவர் கருத்து திருமறையாம் விவிலியத்திற்குச் செல்லவில்லை. அதன் கருத்தே இங்கு தோன்றியுள்ளதென்பது, விருப்பு வெறுப்பின்றித் திருக்குறளையும் திருமறையையும், ஆய்கின்றவர்கள் அறிந்துகொள்ள முடியும்.

அடுத்து வள்ளுவர் ஆண்டு கி. மு. 30 எனக் கணக்கிடுவதை அறிஞர் யாவரும் ஒப்புக்கொண்டனர் எனக் கொள்ளமுடியாது. இந்த ஆண்டைக் கணக்கிட்டு எத்தனை வரலாறுகள் கூறப்படுகின்றன என ஆராயின், ஆண்டு அதனுள் கிறித்தவ ஆண்டைவிடப் பிறபட்டு இருத்தலை நாம் காண முடியும். தமிழ் ஆண்டு வேறாகவும், வள்ளுவர் ஆண்டு வேறாகவும், கொல்லம் ஆண்டு, சாலிவாகன ஆண்டு முதலியனவும் தமிழ் நாட்டில் கையாளப்பட்டு வருகின்றன. வள்ளுவர் காலத்தைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை காணப்படினும் நாம் நிறுவியுள்ள காலம் இதற்கு முரணானது அன்று. வள்ளுவர் 100 வயதுக்குமேல் வாழ்ந்தவர் எனக் கொண்டால் கி. பி. 52 இல் தமிழகம் வந்த தோமாவின் மூலம், கிறித்தவக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட வள்ளுவர், தனது இறுதிக் காலத்தில் உலகம் புகழ் திருக்குறளை வெளியிட்டார் எனக் கொள்வதிலும் தவறு ஒன்றும்

இல்லை. வள்ளுவரின் வேண்டுகோளுக்கிணங்கவே சேரநாட்டிலிருந்து தோமையர் மயிலாப்பூர் வந்திருத்தல் வேண்டும்.

தாமின் புறுவது உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

எனக் கூறிய வள்ளுவர் தோமையரின் மூலம் தான் அறிந்த கருத்தினை மற்றவர்களும் அறிந்துகொள்ள விரும்பினூர் எனக்கொள்ளின் அது பொருந்துவதே.

6. கிறித்தவர்கள் வரலாறு திட்டமாக அமையக் காரணமாயிருந்தது கிறித்தவ சபைகளே. கிறித்தவ சபைகள் பரம்பரை பரம்பரையாக இருந்த இடங்களில் அந்தந்த வரலாறுகள் தொடர்ந்து குறிக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்படி தமிழ்நாட்டினுள்ளும், சேரநாட்டில் தோமையர் வந்ததற்கும், சபைகளை நிறுவியதற்கும் சான்றுகளாக இருப்பவை இன்றுவரை இருக்கும் சபைகளே. ஆனல் தோமையர்தொண்டை நாட்டிலுள்ள மயிலாப்பூரில் தனது இறுதிக் காலத்தில் சபை ஏற்படுத்திக்கொண்டிருந்தபோது, மத விரோதத்தால் கொல்லப்பட்டார். அவர் கொலை செய்யப்பட அந்த இடத்தின் அரசனும் அவனது காவலாளர்களுமே உடந்தையாயிருந்திருக்கின்றனர். இவ்விதம் புதுக் கருத்துக்களைப் பரப்பிவந்த தலைவர் அழிக்கப்படவே, அவரது அடியவர்களும் அழிக்கப்படுவதும், சிதறடிக்கப்படுவதும் இயல்பே. இம்முறைப்படி சிதறடிக்கப்பட்ட இடத்தின் வரலாறு நேரடியாக நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போயிற்று.

திருவள்ளுவர் இதைத்தவிர இன்னும் பல நூல்கள் இயற்றி இருக்கலாம். அவற்றுள் விளக்கமாகப் பல கருத்துக்களையும், தன் உள்ளக்கிடக்கையையும் வெளியிட்டிருக்கலாம். அவர் காலததில் வாழ்ந்த புலவர்களோ அல்லது அரசர்களோ

அவருக்குச் சிறப்போ, வரவேற்போ அளிக்கவில்லை என்பதை நாம் முன்பே கண்டோம். அவருடைய புதுக் கருத்துக்கள் பலமாக எதிர்க்கப்பட்டன. அவை நாட்டில் பரவவிடாமல் செய்வதற்கு வேண்டியன அத்தனையும் செய்யப்பட்டன.

தொகையில் அதிகமாக இருந்தவர்களும், தமிழ் இலக்கியத்திலும், இலக்கணத்திலும் பெருந் தொண்டாற்றியுள்ளவர்களுமான சமணர்களும், அவர்கள் இலக்கியங்களும், முழுதுமாகப் பிற்காலத் தார் கைக்கு எட்டாதபடி அழிக்கப்பட்டிருப்பதைக் காணும் தமிழறிஞர் யாவரும், கிறித்தவக் கருத்துக் களைப் பரப்பிய அல்லது பரப்பக் காரணமாயிருந்த இலக்கியச் சான்றுகள் அழிக்கப்பட்டிருக்குமென் பதை நடுநிலை நின்று ஆய்பவர் ஏற்றுக்கொள்வர். இவ்வாறு அழிக்கப்பட்ட சமண பௌத்த நூல்களுள் நீலகேசி, குண்டலகேசி, வளையாபதி முதலியன பெயரால் தெரிபவை. இன்னமும் பெயரே தெரியா மல்போனவை எவ்வளவோ? ஆகவே வள்ளு வரைப் பற்றிய நூல்களும், வள்ளுவரே எழுதிய வேறு நூல்களும் இருந்திருக்கலாம். காலவெள்ளத் தில் அழிக்கப்பட்டிருக்கலாம். திருக்குறள் மாற் றுருவம் கொடுக்கப்பட்டிருந்த காரணத்தால் காப் பாற்றப்பட்டது அல்லது மற்றவைகளோடு சேர்த்து அழிக்கப்பட்டிருக்கும். மேலும் தமிழர்கள் எதனை யுமே வரலாறுகளுடன் எழுதும் வழக்கம் இல்லாத வர்கள். ஆகவேதான் தமிழர் வரலாற்றில் பல இருண்ட காலங்களை நாம் காணுகின்றோம். இக் குறைபாடு தமிழ்க் கிறித்தவர்களிடையேயும் இருந் திருக்கலாம். ஆகவே இலக்கியச் சான்றில்லை. தள்ளப்பட வேண்டியது என நாம் முடிவாகக் கூறமுடியாது. இலக்கியச் சான்றே எழுதப்படா நிலையும், எழுதியிருந்தாலும் அழிக்கப்பட்ட நிலை யும் தமிழ் இலக்கியத்தில் ஏராளம், ஏராளம்.

7. எல்லா மதங்களும் அறக் கருத்துக்களைக் கூறுபவைகளே. அவைகளுள் உயர்ந்த கருத்துக்களுள் ஒற்றுமை காணப்படும் என்பதும் இயல்பே. ஆனாலும் அடிப்படை வேற்றுமையில்லாவிட்டால் மதத்திற்கு மதம் வேறுபடுவானேன்? வேற்றுமையான அடிப்படைக் கருத்துக்கள் இருப்பதால் தானே அவை வெவ்வேருக இயங்குவதுடன், சில சமயங்களில் வெளிப்படையாக வேற்றுமை பாராட்டவும் முற்படுகின்றன. வேற்றுமை முற்றிப்பகையாக மாறும் நிலைமையையும், நாம் வரலாற்றில் அறிய முடிகிறது. இங்கு நாம் நோக்க வேண்டிய முக்கிய அடிப்படை, கிறித்துவம் ஒரு மதம். ஆனால் திருக்குறள் ஓர் மத நூலன்று, அற நூல். மதத்தின் அடிப்படையில் அறநூல் செல்வதே இயல்பு. ஏனெனில் அறநூல் கூறுபவரின் சமயச் சார்பையே அவர் கூறும் அறக் கருத்து வெளிப்படுத்தி நிற்கும். திருக்குறளும் திருவள்ளுவரின் சமயச் சார்பையே வெளிப்படுத்தி நிற்கிறதென நாம் கொள்ளுவதில் எவ்விதத் தவறும் இல்லை. ஏனெனில் இவ்விதக் கருத்துக்கள் எந்தச் சூழ்நிலையில் தோன்றியன என்பதை நாம் முன்பு விரிவாகப் பார்த்துவிட்டோம்.

வள்ளுவர் காப்பியடித்தார் எனக் கூற எந்தத் தமிழனும் முன்வரமாட்டான். ஆனால், விருப்பு வெறுப்பு இன்றி ஆய்பவர்கள் தங்கள் ஆய்வின் முடிவில் வரும் கருத்துக்களை வெளியிடப் பின் வாங்கினால் அவர்கள் உண்மை ஆய்வாளர் அல்லர்.

மற்றவர்கருத்தைக் கேட்கக்கூடாது, சிறந்தவர் கருத்தை ஏற்கக்கூடாது. எங்கெங்கு சிறப்புப் பொருள் உண்டோ அங்கங்கே நோக்கக்கூடாது என்னும் கொள்கையைக் கொண்டவர் அல்ல வள்ளுவர். சிறப்பான கருத்துக்கள் அத்தனைக்கும்

வரவேற்புக் கொடுக்க வேண்டும். அவைகளைப்பின் பற்ற வேண்டும். அதுவே,

> *இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே*
> *ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்.*

ஒருவனுடைய சிறந்த ஊன்றுகோல் எனக்கூறிய வள்ளுவர், சிறந்தவர் கருத்துக்குச் செவிசாய்த் திருக்கமாட்டார் எனக்கொள்ளுவது வள்ளுவர்க்கு இழுக்கு. வள்ளுவர் கூறிய இக்கருத்துக்கள் தமிழ்ச் சூழலில் தோன்றுவதற்கு இருந்த வாய்ப்பைவிட, வேறிடத்தினின்றும் வந்திருக்க, மதமாக வந்திருக்க அதிக வாய்ப்பிருந்தது என்னுமிடத்தில் அதை ஏற்றுச் செய்யுள் செய்தார் என்பது எவ்விதத்திலும் அவருக்கு இழுக்கு ஏற்படா-ஒன்றுகும். அவர் மதத்தை ஏற்படுத்தவில்லை, அவர் இயற்றியது அற நூலே என்பதை மறுபடியும் இவ்விடத்து வற்புறுத் துதல் சிறப்பே.

அடுத்து இன்னொரு கருத்தும் தமிழரிடையே நிலவி இருப்பதை நாம் காண முடிகிறது. அதாவது கிறித்தவம் தமிழனுக்குப் புறம்பானது. தமிழனுக்கு இந்து சிறப்பு. சமணம், பௌத்தம் இவை தமிழனுக்குப் பரவாயில்லை. ஆகவே ஒருவனைக் கிறித்தவன் எனக் கூறினுல், அவன் தமிழரிடமிருந்து மாறுபட்டவன் என எண்ணுவது. நன்ருய்ச் சீர்தூக்குமிடத்து இக்கருத்து தவருனது என்பது நன்கு விளங்கித் தோன்றும்.

இந்து மதத்தின் பிரிவுகள் அத்தனைக்கும், தமிழனின் மாறுபட்ட ஆரியர் ஆட்சியும், ஆரியக் கருத்தும், சமணம், பௌத்தம் போன்றவைகளுள் தமிழினின்றும் மாறுபட்ட வடவர் கருத்துக்களுமே, மேலோங்கி நிற்பது யாவரும் மறுக்க முடியா உண்மை. இவைகளுள் எந்த மதமும் தமிழனுல்

ஏற்படுத்தப்பட்டவை அல்ல. யாவும் தமிழனுக்கு அன்னியவை. இன்று உலகில் நிலவும் மதங்களுள் பெரும்பாலன ஆசியாக் கண்டத்துள் தோன்றியவையே.

இந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் தமிழனுக்கு எல்லா மதமும் ஒன்றே. ஏதாவது ஒரு மதத்தைப் பின்பற்றுதல் சிறப்பையோ, பிறிதொன்றைப் பின்பற்றுதல் இழிவையோ தமிழனுக்குக்கொடுக்குமென எண்ணுதல் உள்ள உயர்வு ஆகாது.

தமிழனின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களே கிறித்தவர்கள். கிறித்தவர்கள் நம் தமிழுக்குச் செய்த தொண்டினை "கிறித்தவமும் தமிழும்" என்ற மயிலை வேங்கடசாமி அவர்களின் நூலை வாசித்தவர்கள் உணரமுடியும்.

திருவள்ளுவர் எல்லாக் கருத்தினையும் ஆய்ந்து சிறப்பானதைக் கையாண்டுள்ளார் என்பது அவருக்கு உயர்வைக் கொடுப்பதேயன்றி இழிவைக் கொடுப்பதல்ல. கூறுபவனும் தமிழ்த்தாயின் பகைவன் அல்ல. உண்மையை அஞ்சாமல் உரைப்பவனே புலவன்.

8. வள்ளுவர் மயிலாப்பூரில்தான் வாழ்ந்தார் என்பதற்குத் திட்டமான ஆதாரம் கிடையாத போது, அங்குதான் வாழ்ந்தாரெனக் கொள்ளுவது ஏற்றமுடைத்தன்று என்னும் கருத்தினை ஆய்வோம்.

வள்ளுவரைப் பற்றிய திட்டமான குறிப்பு எதுவுமே நமக்குக் கிடைக்கவில்லை. முன்பே பார்த்தபடி எல்லாம் காலவெள்ளத்தில் கரைந்து விட்டது. திருக்குறளைப் பற்றி எஞ்சி இருப்பவை குறட்பாக்களும், திருவள்ளுவமாலையுமே ஆகும். இவற்றுள்ளும் திருவள்ளுவமாலையைப் பற்றியும்

அறிஞரிடையே கருத்து வேற்றுமை இருந்து வருகிறது.

இந் நிலையில், வள்ளுவரைப் பற்றிய திட்டமான ஆதாரம் எதுவுமே கிடையாச் சூழ்நிலையில், அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளக் காரணமாய் இருப்பவையும், அவர் மயிலாப்பூரில் வாழ்ந்தார் என நாம் கொள்ளுவதற்காதாரமாய் இருப்பவையும் :

1. அவரைப் பற்றி வழங்கி வரும் செவிவழிச் செய்தியில் அவர் மயிலாப்பூரில்தான் வாழ்ந்தார் எனக் கூறப்படுகிறது.

2. இதுவரை அவரைப் பற்றிய வரலாறு கூறப் புகுந்த ஆசிரியர் அத்தனைபேரும், மயிலாப்பூரைக் குறிக்கத் தவறியதில்லை.

3. தமிழ்நாட்டில் வேறு எங்குமே அவருக்கு ஆலயம் கட்டி வழிபடவோ அல்லது இந்த இடத்தில்தான் இருந்தார் எனத் தவறியும் கூடச் செய்தியோ இல்லை. மயிலாப்பூரில், அவர் வாழ்ந்த இடம், வணங்கிய இடம், மறைந்த இடம் ஆகிய அத்தனையும் குறிக்கப்பட்டுள்ளது. இன்றும் ஐந்து ஏக்கர் நிலத்தில் வள்ளுவர் வாழ்ந்த இடம், மயிலாப்பூரின் மத்தியில் விளங்குகிறது.

4. திருவள்ளுவ மாலையில் 'கூடற்கச்சு' எனக் குறிக்கப்படும் பகுதிக்கு, வள்ளுவர் அரங் கேற்றத்தின் பொருட்டு மதுரைக்குச் சென்று சிலகாலம் அங்கு தங்கியதால் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது, அவர் வாழ்ந்த இடம் மயிலாப்பூர் என ஆசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

5. கபிலரகவல் வள்ளுவர் வாழ்ந்ததாக,

தொண்டை மண்டிலத்தில் வண்டமிழ் மயிலையில்
நீளாண்மை கொளும் வேளாண் மரபுயர்
பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்.

எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை தள்ளத் தக்கதொன்று அன்று. ஆகவே வள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தமை உறுதி செய்யப் படுகிறது.

அடுத்து வள்ளுவர் தமிழ்நாட்டில் வாழ்ந்த ஓர் தமிழ்ப் பெரியார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. தமிழ்நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் அவர் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

மயிலாப்பூரில் மாத்திரமே திருவள்ளுவர் வாழ்ந் திருந்தால்தான், தோமாவைச் சந்தித்திருத்தல் முடியும் என யாரும் கொள்ளமுடியாது. சேரநாட் டில் இறங்கிய தோமா அங்கு சபைகளைக் கட்டினார். சோழ பாண்டிய நாட்டில் எவ்வளவு நாள் தங்கி னாரோ தெரியவில்லை. ஆனால் இறந்த இடமாக மயிலாப்பூர் குறிக்கப்பட்டுள்ளது. இவர் தமிழகத்தில் வாழ்ந்த காலம் 20 ஆண்டுகள். ஆகவே அவர் கருத்து சேர சோழ பாண்டிய தொண்டை நாடுக ளாகிய தமிழகமெங்கும் பரவி, அறிஞரிடையே புத்துணர்வை ஏற்படுத்தி நின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு ஆய்வை ஏற்படுத்திய கருத்தினை, வள்ளுவர் யாதாமோர் இடத்திலிருந்து அறிந்து தோமையரைக் கண்டு அவர் கருத்தைத் தெளிவாகக் கேட்டார் எனக் கொண்டால் அது பொருத்தமானதே. ஆகவே இன்றைய நிலையில் வள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தாலும் அல்லது எங்கு வாழ்ந்தாலும் தோமையரைச் சந்தித் தவரே.

9. கிறித்தவத்துள் துறவறமே மேலானது என்னும் கொள்கை கிடையாது. மாறாக, இல் வாழ்க்கையே சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆதிமனிதனைப் படைத்த இறைவன், மனிதன் தனித்திருப்பது நல்லதல்ல என்று கண்டு அவனுக்கு ஏற்ற துணையையும் படைத்து, முதல் இல்லறத்திற்கு வழிவகுத்ததன்மூலம் இல்வாழ்வின் சிறப்பு காண்பிக்கப்பட்டது. இயேசுவும் தன் ஊழியத்தின் முதல் கட்டமாக, முதன் முதலில் ஒரு திருமண வீட்டிலே தான், தனது இறைத்தன்மையை வெளிப்படுத்தியதன் மூலம் இல்லறத்தைச் சிறப்பித்தார். அவர் எந்த இடத்திலும் இல்வாழ்வைவிட துறவறமே சிறந்தது எனக்கூறவில்லை.

(மத் 19 : 4 - 6) ‘‘அவர்களுக்கு மறுமொழியாக ஆதியிலே மனிதரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார், என்பதையும் இதனிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோட இசைந்திருப்பான்,அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்க்வில்லையா ?

இப்படி இருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை, மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்’’ என்று இயேசு சொன்னார்.

கிறித்தவ மதத்தலைவர்கள், குருக்கள் என அழைக்கப்படக்கூடாது என்ற கட்டளை உண்டு. குருக்கள் அத்தனை பேரும் துறவிகள் அல்ல. இல்லறத்தாரும் உண்டு. துறவிகளாக மாறுபவர்கள் துறவறமே சிறந்தது, அதுவே வழி என்பதற்காகவும் அன்று. துறவறம் மேற்கொண்டால் தாங்கள், மற்றவர்களுக்கு அதிகம் ஊழியம் செய்ய

வாய்ப்பு ஏற்படும், என்பதைக் கருதியேயொழிய, தாங்கள் மற்றவர்களைவிட மேலானவர்கள் ஆவோம் என்ற கருத்தில் அல்ல; அல்லது மறுமையில் தங்களுக்குத்தான் சிறப்பான இடம் என்பதைக் கருதியும் அல்ல. இங்கு முக்கியம் உள்ளத் திருத்தமேயொழிய இல்லறமா, துறவறமா என்பதும் அன்று. சபையை மணமகளாகவும், இறைவனை மணமகனாகவும் கிறித்தவம் கொள்ளுகிறதேயன்றி துறவற நிலையாலும் அன்று. ஆகவே வள்ளுவத்திற்கு முரணான கருத்து எவ்விதத்திலும் கிறித்தவத்துள் இல்லை.

10. பிதா, சுதன், ஆவி என மூவகையாக வணங்குவது ஒரே இறைவனையே. மூன்று தன்மைகள் கூறப்படுகின்றதேயொழிய மூன்று உருவங்கள் கூறப்படவில்லை. மகன், தந்தை, பாட்டன் என்பது ஒருவனைக் குறிக்குமா? பலரைக் குறிக்குமா? மகன் கடமை வேறு, தந்தை கடமை வேறு, பாட்டன் கடமை வேறு. ஆனாலும் மூன்றும் மூன்று தனி ஆட்களைக் குறியாது ஒரே மனிதனையே குறித்து நின்றன. ஒருவன் தந்தைக்கு மகன். தன் மகனுக்குத் தந்தை. பேரனுக்குப் பாட்டன். தன்மை மூன்று; ஆனாலும் மனிதன் ஒன்றே. இதே நிலை (திரித்துவம்) மும்மை எனக்கூறப்படும் இதனுள்ளும் உண்டு. இதையே கிறித்து சபையின் அதநாசியர் என்பவரின் (அதநாசியஸ்) விசுவாசப் பிரமாணம் கூறுகிறது. அதன் பகுதி,

"பிதா ஒருவராலும் உண்டாக்கப்பட்டவருமல்ல; சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெநிப்பிக்கப்பட்டவருமல்ல.

குமாரன் பிதாவினாலேயே இருக்கிறவர்: உண்டாக்கப் பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப் பட்டவருமல்ல, ஜெநிப்பிக்கப்பட்டவரே.

பரிசுத்த ஆவி பிதாவினாலும், குமாரனாலும் இருக்கிறவர்; உண்டாக்கப்பட்டவருமல்ல. சிருஷ்டிக்கப்பட்டவரு மல்ல. ஜெநிப்பிக்கப்பட்டவருமல்ல. புறப்படுகிறவரே. ஆகையால் மூன்று பிதாக்களில்லை. ஒரே பிதாவும்; மூன்று குமாரரில்லை. ஒரே குமாரனும்; மூன்று பரிசுத்த ஆவிகளில்லை ஒரே பரிசுத்த ஆவியும் உண்டு.

அன்றியும் இந்தத் திரித்துவத்தில் ஒருவரும் முந்தினவருமல்ல; பிந்தினவருமல்ல; ஒருவரிலொருவர் பெரியவருமல்ல சிறியவருமல்ல.

மூவரும் சம நித்தியரும்: சரிசமானருமாம்.

ஆகிலும் மூன்று நித்திய வஸ்துக்களில்லை; நித்திய வஸ்து ஒன்றே ” என்பதே.

மேலும் வள்ளுவரின் இறைவணக்கத்தினுள்ளும் தனக்குவமையில்லான், ஆதிபகவன், இறைவன் ஆகியவை, பிதாவையும், எண்குணத்தான், ஐந்தவித்தான், அறவாழியந்தணன் ஆகிய மூன்றும் குமாரனையும், வேண்டுதல் வேண்டாமையிலான், வாலறிவன், மலர்மிசை ஏகினான் என்பன, தூய ஆவியையும் விளக்கி நின்றன. இது பின்னரும் விளக்கப்படும்.

ஆகவே பிதா, சுதன், ஆவி என்பன பலதெய்வ வணக்கம் அல்ல ஒரே தெய்வ வழிபாடே என்பதும், அதையே திருவள்ளுவரும் ஏற்றுச் செய்யுள் செய்துள்ளார் என்பதும் விளங்க, திருவள்ளுவர் கிறித்தவ நிலையின் அடிப்படையையே பின்பற்றியுள்ளார் என்பது தெளிவு.

11. இலக்கியச்சான்றே எழுதப்படா நிலையும், எழுதியிருந்தாலும் அழிக்கப்பட்ட நிலையும், தமிழ் இலக்கியத்தில் ஏராளம் என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. ஆங்கில வர்த்தகர்களோ அல்லது போர்த்துக்கீசியர்களோ வந்த பின்னர்தான், கிறித்

தவம் தமிழகத்திற்கு வந்ததென்னும் கூற்று உண்மைக்கு மாறானதாகும். கிறித்துவின் நேர்சீடரான தோமையர் இங்கு வந்ததையும், கிறித்தவம் பரப்பப்பட்டமையும் யாரும் மறுக்க முடியா உண்மை. அத்தனைக்கும் வரலாற்று ஆதாரங்கள் உண்டு.

12. செவிவழிச் செய்திகள் யாவும் உண்மை என நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர் சங்கத்திலிருந்து மாறுகொண்டவர் என்ற செய்தி ஒன்றே, மற்றவர்களின் கருத்துக்கு இவர் மாறுபட்டவர் என்பதை விளக்கி நிற்கின்றது. தன் கொள்கையிலிருந்து மாறுபட்டவரை விளக்கமாகக் கூறுதல் எங்கும் இல்லை. ஆகவே, இவரைப் பற்றிய விளக்கமும் இல்லை. இவர் எழுதிய வேறு நூல்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்பதை முன்பே பார்த்துள்ளோம். இலக்கியங்களே மாறுபட்டுத் தோன்றுங்கால் செவிவழிச் செய்தி சிதைவதில் வியப்பில்லை. ஓரிரண்டு நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்தவர்கள் வாழ்க்கையைப் பற்றியே செவிவழிச் செய்தி எத்தனையோ மாற்றங்களைக் கொடுக்கும் நிலையில் 2000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவரைப் பற்றிய செவிவழிச் செய்தி எவ்வளவு சிதைவுறுதல் கூடும் என்பது ஆய்வாளர்களுக்கு விளங்காததொன்றல்ல.

ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்து திருவள்ளுவர் கிறித்தவத்திற்கு முரணானவர் என்னும் கருத்து வலிவிழந்து, கிறித்தவத்திற்கு ஆதரவானவர், ஏன் கிறித்தவராகவே இருக்கலாம் என்னும் கருத்து மேலோங்குவதை நாம் உணர முடிகிறது.

இனி திருவள்ளுவரின் இறைக் கொள்கையை நோக்குவோம்.

திருவள்ளுவர் போற்றும் இறைவன்

திருவள்ளுவருடைய சமயச் சார்பை நாம் காண முக்கிய ஆதாரமாய்க் கொள்ளவேண்டியது அவரது இறைக்கொள்கையே. அவர் காட்டும் இறைவனை நாம் கண்டால் அதன் மூலம் அவரது சமயச் சார்பையும் நாம் காணமுடியும்.

வள்ளுவர் எழுதியது மத நூல் அன்று, அற நூலே. ஆகையால் இறைவன் பெயர் குறிக்க அவசியம் இல்லை. இறைவனின் தன்மைகளை மாத்திரமே குறித்துள்ளார்.

இறைவன் தன்மையாக வள்ளுவர் காட்டுவன:

1. ஆதிபகவன்
2. வாலறிவன்
3. மலர்மிசை ஏகினன்
4. வேண்டுதல் வேண்டாமையிலான்
5. இறைவன்
6. பொறிவாயில் ஐந்தவித்தான்
7. தனக்குவமை யில்லாதான்
8. அறவாழி அந்தணன்
9. எண்குணத்தான்

இறைவன் என இரண்டிடத்துக் கூறும் காரணத்தால் 10 குறளில் 9 தன்மை அமைகிறது. மேலே காட்டப்பட்ட ஒன்பது தன்மைகளையும்

வள்ளுவர் மூன்று, மூன்று அடங்கிய முப்பகுதி களாகக் காட்டுகிறார்.

1. தனக்குவமை யில்லாத ஆதிபகவனை இறைவன்.

2. எண்குணத்தையுடைய ஐந்தவித்தவனும் அறவாழியந்தணன்.

3. வேண்டுதல் வேண்டாமையிலா வாலறிவ னை மலர்மிசை ஏகினன்.

முதற்பகுதிக்கண் இறைவன் எல்லாவற்றிற்கும் மேலானவன், தனக்கு ஒப்பு ஒன்றுமில்லாதவன், அண்டத்தின் துவக்கம் அவனே, அவனே தலைவன் என அருவமாகக் காட்டுகிறார்.

இரண்டாம் பகுதியில், எளிய குணத்தையுடையவன், ஐம்பொறியோடு கூடியவன், அறத் தன்மையே பொருந்திய கடலாய் விளங்குபவன் என உருவகமாக விளக்குகிறார்.

மூன்றும் பகுதியில் விருப்பு வெறுப்பின்றித்தூய அறிவாக விளங்கும் அவன் எல்லாருடைய இதயக் கமலத்திலும் தானே வந்து காத்திருப்பவன் என ஆவியுருவாய்க் கூறுகிறார்.

மலர் இதயத்தைக் குறித்து நின்றதானல், 'மிசை' எனவும் குறிக்கப்பட்டுள்ளமையால், மேல் அதாவது வெளியே என்னும் பொருள் கொண்டு இதயத்தினுள்ளே வருவதோ,வராததோ இறைவன் செயல் மாத்திரமல்ல. மனிதன் இறைத்தன் மையை ஏற்றுக் கொண்டால்தான், உள்ளே வர முடியும். ஏற்றுக்கொள்ளாவிடத்து வெளியிலேயே காத்திருக்க வேண்டியது என்பதாகிறது. காத்திருக்கும் இறைவன் ஓர் தனி இடத்தில் இல்லை. எல்லா இடங்களிலும் ஆவியாய்ப் பரவி இருப் பவன். அவன் இல்லா இடம் இல்லை. அவன் தூய

அறிவானவன். ஆவியாய் எங்கும் பரவியுள்ளவன். அவனுக்குத் தனி விருப்பு வெறுப்பு இன்றி யாவரையும் ஏற்றுக்கொள்ளும், அதாவது நுழையக் கூடிய எல்லா இதயங்களிலும் செல்லுபவன். 'ஏகினுன்' எனக்குறித்துள்ளமையால், விரைவுப் பொருளை யுணர்த்தி நின்றது. ஆகவே ஏற்றுக்கொள்ளுபவர் உள்ளத்து விரைந்து ஏகும் ஆவியாயிருப்பவன் அவன்.

எனவே விருப்பு வெறுப்பற்ற தன்மையில் தூய அறிவினனுக விளங்கி, ஒவ்வொருவர் உள்ளக்கமலத்தின் கண்ணும் காத்திருக்கும் ஆவிமயமானவன் இறைவன்.

ஆகவே முதல் பகுதியின்கண் இறைவனின் தலைமைத் தன்மையையும், இரண்டாம் பகுதியில், இறைவனின், உருவம், குணம், தன்மை ஆகியவைகளையும், அதாவது முதல் பகுதியோடு ஒப்பிடுங்கால் முதல் தன்மையாம் அருவத்திலிருந்து, உருவகமாகத் தோன்றிய பிள்ளைத்தன்மையையும், மூன்ரும் பகுதியினுள் எங்கும் நீக்கமற, விருப்பு வெறுப்பற்ற தன்மையில், தூய அறிவுடன் எல்லாருடைய் இதயக் கமலத்தினிடமும் பரவிச் சூழ்ந்துள்ள ஆவியின் தன்மையுடையவன் எனவும் கூறுகின்ருர். இவைகளைத் தெளிவாகச் சுருங்கக் கூறினுல்,

முதற் பகுதி - முதல்வன்

இரண்டாம் பகுதி - மகன் (ஐம்பொறியுடைய மனிதன்)

மூன்ரும் பகுதி - ஆவி

முதல்வனுய் விளங்குபவனும் அவனே;

மகனுகக் காட்சி அளிப்பவனும் அவனே;

எங்கும் ஆவியாய்ப்பரவி யிருப்பவனும் அவனே.

முதல்வன் எல்லாத்தோற்றத்திற்கும் காரணன். மகன் மாந்தர்க்கு வழியைக் காட்டுபவன்.

ஆவி நம்மோடு நம் உள்ளத்தில் காத்திருப்பவன்.

ஆனலும் மூன்று பொருளில்லை. மூவரும் ஒன்றே.

எனத் தெள்ளு தமிழ் வள்ளுவர் திட்டமாய் விளக்குகிருர்.

இனி வள்ளுவர் இயற்றிய குறட்பா ஒவ்வொன்றையும் நோக்குவோம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

தெரிந்ததைக் காட்டித் தெரியாததை விளக்குகிருர். எழுத்துக்கள் தெரியும். அவைகளுள் முதன்மை பெற்றது உயிர். உயிரினுள்ளும் முதன்மையிடம் பெறுவது அகரம். அகரம் இன்றேல் உயிரில்லை. உயிரில்லையேல் மற்ற எழுத்துக்கள் இல்லை.

அவ்வாறே இறைவன் இல்லையேல் உலகில்லை. உலகில்லையேல் அதில் ஒன்றும் இல்லை. எழுத்துக்களுள்ளும் உயிரும் மெய்யும் சேர்ந்தியங்கும், உயிர் மெய் எழுத்தின் வரிவடிவில் காட்சிக்குப் புலப்படுவது மெய்யின் உருவம். ஆனல் அதற்குள்ள மதிப்பு அதனுள் இருக்கும் உயிரின் அளவு. உயிர் மெய் எழுத்துள், உயிர் கண்ணுக்குப் புலப்படுவதல்ல. ஆனல் உள்ளிருந்து இயக்குவது. அவ்வாறே உலகினுள் இறைவன் கண்ணுக்குப் புலப்

படுபவன் அல்ல. ஆனால் உள்ளிருந்து இயக்கு பவன் அவனே. உயிர் எழுத்து, தானும் தனித் தியங்கி மற்றவைகளையும் இயக்கும் வன்மை வாய்ந் தது. அவ்வாறே இறைவன் தானும் தனித்தியங்கி மற்றவைகளையும் இயக்குபவன்.

உலகில் தோன்றிய முதல் மனிதனின் முதல் வார்த்தை. "அ" ஏனெனில் வாயைத் திறந்த வுடன் வேறு முயற்சியின்றிப் பிறப்பது அகரம். மற்ற முயற்சியின் காரணமாகவே மற்ற ஒலிகள் தோன்றின. ஆகவே "அ" முதல் எழுத்துமாத்திர மல்ல, முதல் வார்த்தையின் முதல் எழுத்துமாகும்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அது தேவ னாயிருந்தது."

'உலகம் முதற்று ஆதிபகவன்'

உலகம் ஐம்பூதங்களால் தானே நிலைபெறுவது, யாராலும் படைக்கப்பட்டதல்ல என்னும் கருத் தினை மறுத்து, உலகம் இறைவனால் படைக்கப் பட்டது; இறைவனின்றி உலகம் இயங்குதல் முடியாது. ஆகவே உலகத் தோற்றத்தின் மூல காரணம் இறைவன் என விளக்கியுள்ளார். "ஆதி யிலே பகவன் வானத்தையும் பூமியையும் படைத் தார்." ஆதியாகமம் 1ம் அதிகாரம் முதல் வாக் கியம் "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவரையல்லாமல் உண்டாக வில்லை." (யோவான் 1 : 3.)

விவிலியத்தின் முதல் வார்த்தை 'ஆதியிலே பகவன்'

திருக்குறளின் முதல் குறளில் 'ஆதிபகவன்' முதல் குறளில் வெளியிடும் கருத்து.

1. இறைவன் ஒருவன் உண்டு.

2. யாவும் அவனுல் படைக்கப்பட்டவை.

2. கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் றொழா அர் எனின்.

தூய அறிவினன் பாதத்தைத் தொழாதவன் கல்வி பயன் அற்றது.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

உண்மை அறிவை வளர்ப்பதே கல்வி. உண்மை அறிவு என்ன? உள்ளத்தின் மெய்த்தன்மையைக் காட்டும் அறிவு.

"நல்ல மனிதன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிசத்திலிருந்து நல்லதை எடுக்கிருன். கெட்டவன் கெட்டவைகளையே எடுக்கிருன்."

உள்ளம் நல்லதாளுல் அறிவு நன்மைக்குப் பயன்படும். உள்ளம் தீயதாளுல் அறிவு தீமைக்குப் பயன்படும். ஆகவே திருந்திய சிறப்பான உள்ளம் பெறுதலே முதல் தேவை. அப்படியில்லாவிட்டால் வெறும் கல்வியால் யாது பயன்? கடவுளை வணங்காக் கல்வி பயன் அற்றது. கல்வி பெருகப் பெருகக் கடவுளைக் காணவேண்டும்.

(நீதிமொழிகள் 2:5.) "கர்த்தருக்குப் பயப்படுவது இன்னதென்று உணர்வாய். கடவுளை அறியும் அறிவைக் கண்டடைவாய்."

ஆகவே கடவுளை அறியாத அறிவும் உண்டு. அவ்வறிவைக் கற்றதனுலாய பயனென்கொல்? என வினவுகிருர் வள்ளுவர். ஏனெனில் தூய அறிவுக்கு இருப்பிடமாகி எல்லா இடத்தும் நீக்கமற ஆவியாய் நிறைந்து இருப்பவன் இறைவன். அவனைக் காணுக் கல்வி ஒரு கல்வியா?

இதில் வள்ளுவர் விளக்கும் கருத்துக்கள் :

1. வெறும் கல்வியால் இறைவனை அடைய முடியாது
2. இறைவனை அறிவதே கல்வியின் பயன்
3. அறிவை அளிப்பவன் இறைவனே
4. அவன் தூய அறிவோடு எங்கும் இருப்பவன்,

3. *மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
நிலமிசை நீடு வாழ்வார்.

இங்கு இறைவனின் தன்மை வெளிப்பட்டு நிற்கின்றது. மனிதன் இறைவனைத் தேடிச்செல்லு முன் இறைவனே மனிதனைத் தேடி வந்தார். 'ஏகினான்' என்னும் சொல் இதைத் திட்டமாய் விளக்குவதாய் இருக்கிறது. ஒவ்வொருவர் உள்ளக் கமலத்திலும் அவர் காத்து நிற்கிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் இதயக் கதவின்முன் நிற்கும். அவரை இதயத்தினுள் ஏற்றுக்கொள்வது ஒன்றே. "இதோ நான் வாசற்படியில் நின்று தட்டிக்கொண் டிருக்கிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் அவனுள் பிரவேசிப் பேன்". (வெளி.3:20) இதயத்தினுள் ஏற்றுக்கொள் ளும்பொழுது அங்கு அதுவரை ஆட்சியில் இருந்த 'நான்' மறைந்து இறைவன் ஆட்சிபுரிகிறார். அவ் வாறு இறைவனின் வழி நடத்தலை விரும்புகிற வர்கள் நீடித்து வாழ்வார்கள்.

"என்னைப் பின்பற்றுகிறவன் மரிப்பதில்லை. அவன் மரித்தாலும் பிழைப்பான்."

இங்கு மரணம் என்பது உடல் மரணத்தைக் குறியாது, ஆத்ம மரணத்தைக் குறித்து நின்றது. உடல் மரணம் அழிவு. ஆத்ம உயிர்ப்பு நீடிய வாழ்வு.

இதில் விளக்கப்படும் கருத்துக்கள் :

1. யாவருடைய இதயத்திலும் வர ஆயத்தமாய் எங்கும் வியாபித்திருப்பவன்.

2. பின்பற்றியவர்களுக்கு நீடிய வாழ்வைக் கொடுப்பவன்.

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.

வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என நோக்காது, மக்கள்யாவரும் மேன்மையுற விரும்பும் இறைவன். தீயவர்களை வெறுக்காது அவர்களும் திருந்த வேண்டுமென நினைக்கும் இறைவன்.

இயேசு பெருமானும் அவரது சீடர்களும் ஓர் கிராமத்திற்குச் சென்று, அவர்களுக்கு நறசெய்தியை எடுத்துக் கூறத் தொடங்கிய காலை, கிராமத்தினர் செய்தியைக் கேட்க மறுத்ததுமன்றி, பெருமானுக்கும், சீடர்களுக்கும் துன்பம் விளைவிக்கத் தொடங்கினர். அதுகாலை சீடர்கள் இயேசு பெருமானிடம், வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து அக்கிராமத்தினரை அழிக்க வேண்டினர். அப்போது பெருமான் அவர்களைக் கண்டித்து, ''நான் அழிப்பதற்கல்ல சரிப்படுத்தவே வந்தேன்'' எனக் கூறினார். இதிலிருந்து இறைத் தன்மை, விருப்பு வெறுப்பற்ற நன்மை செய்தலே என்பது தெளிவாகும.

யாண்டும் இடும்பை இல :

''வருத்தப்பட்டுப்பாரம் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என இயேசு பெருமான் கூறுகிறார். இறைவன் பாதம் சேர்ந்தார்க்கு என்றும் துன்பம் இல்லை.

இதில் விளக்கும் கருத்துக்கள் :

1. யார் வேண்டுமானாலும் பின்பற்றக்கூடியவன் இறைவன்.
2. யாரையுமே வெறுக்காது ஏற்றுக்கொள்பவன்.
3. அவனைச் சேர்ந்தவர்களுக்கு எக்காலத்திலும் துன்பம் இல்லை.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

இருவினை என்பதற்கு நல்வினை, தீவினை ஆகிய இருவினை எனப் பொருள் கூறப்படுகிறது. இது தவறு. நல்வினை செய்யாமல் சிறந்தவர் யாரால் வாழ முடியும்? வள்ளுவரும் "மேல் உலகம் இல்லெனினும் ஈதலே நன்று" எனக் கூறியுள்ளார்.

ஆகவே நன்மை செய்தாகவேண்டிய நிலையில் நல்வினையும் இருளில் சேர்க்கும் என்பது பொருந்தாமை அறிக.

இருள்சேர் இருவினை என்பது இருளில் சேர்க்கக்கூடிய கொடிய வினை, பெரிய வினை என்பதே பொருள்.

இறைவன் மெய்ப்பொருள் சேர்ந்த, புகழைக் கூறினவர்களுக்குப் பாவ வினை சேராது.

"என்னிடத்தில் வருகிற எவரையும் நான்
புறம்பே தள்ளுவதில்லை."

இக்குறள் இறைவன்புகழை வாயினால் சொல்ல வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்திற்று. இதனுள் விளக்கப்படுவன :

1. இருளில் சேர்க்கக்கூடிய கொடிய வினை மனுதனை இயற்கையில் பற்றும்.

2. இறைவன் புகழ் புரிந்தார் மாட்டு அது சேராது.

6. *பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்ரூர் நீடுவாழ்வார்.*

வள்ளுவரின் இறைவணக்கத்துள் இது ஆணி வேர் போன்றது. ஏனெனில் அருவமாகக் கூறப் பட்ட இறைவன் உருவமாக, மனிதனுகத் தோன்றி யமை கூறப்படுகிறது. அத்துடன் அவருக்கு, ஐம் பொறியுடன் இருந்த போராட்டமும், அதில் அவர் பெற்ற வெற்றியும், கூறப்படுகிறது. இதில்தான் திருவள்ளுவர் தனது இறைக் கொள்கையைத் திட்டமாய்க் கூறுகிரூர். அவர் கூறுவன

1. இறைவன் ஐம்பொறியோடு உலகில் தோன்றினுன்.
2. ஐம்பொறியோடு அவனுக்குப் போராட்டம் இருந்தது (சோதனை)
3. அதிலே அவன் பூரண வெற்றி கொண்டான். அதாவது அடக்க யாத்திரம் செய்யவில்லை. அவித்தான்.
4. பொய்தீர் ஒழுக்கம். அதாவது குற்றமற்ற ஒழுக்கமாகிய சத்தியமாய் விளங்கினுன்.

5. நெறியாம் வழியை, அதாவது மனிதர் நடக்க வேண்டிய வழியைக் காட்டித் தான் மேல் நிலையடைகிறவர்களுக்கு வழியாகவும் விளங்குகிரூர்.

6. நீடுவாழ்வாம், ஜீவனுகத் தான் விளங்கி, தன்னை அடைகிறவர்களுக்கும் ஜீவனுக விளங்கு கிரூர். குருடன், குருடனுக்கு வழிகாட்ட முடியாது. ஆகவே தவறுதல் நிறைந்த மனிதர்களுக்கு, தவறே இல்லாத, இறைவனே மனிதனுகத் தோன்றி வழி யைக் காட்டியுள்ளார்.

யோவான் 14:6 " நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" எனக்கூறி மனுடாவதாரம் எடுத்து ஐம்புலனை அவித்தவர் (இயேசுகிறித்து ஒருவரே) யார்?

7. *தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்*
மனக்கவலை மாற்றல் அரிது.

'கர்த்தருக்கு நிகரானது யார்?' இறைவனுக்கு உவமை எதுவுமே கிடையாது. மனிதனின் மனக் கவலையை மாற்றும் மருந்து அவனே. மத்தேயு. 6 : 27 " கவலைப்படாதிருங்கள். எவன் கவலைப்படுகிறதினால் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்."

கவலைக்கு மருந்தும் கூறுகிறார் :

" தேவனுடைய இராஜ்யத்தையும் அவர் நீதியையும் தேடுங்கள். அப்பொழுது மற்றவையெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்."

வள்ளுவர் விளக்குவன :

1. இறைவனுக்கு உவமை கிடையாது.
2. மனிதனுக்கு இயற்கையில மனக்கவலை உண்டு.
3. மனக்கவலையை மாற்றுபவன் இறைவன்.

8. *அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
பிறவாழி நீந்தல் அரிது.

அறக்கடலாகி நிற்பவன் இறைவன். அவனிடம் கிஞ்சித்தும் அறத்திற்குமாறான மறச் செய்கையைக் காணல் முடியாது.

1. சீடர்கள் தங்களை அவமதித்தவர்களை அழிக்க வேண்டியபோது அறக்கடலாய் விளங்கினார் இயேசு.

2. தன்னைச் சிலுவையில் அடித்தபோதும், அறக்கடலாம் தன்மையை, ''பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென அறியாதிருக்கிறார்களே'' என உருக்கமான வேண்டுதல் நிமித்தம் வெளிப்படச் செய்தார்.

இறந்துபோன லாசருவை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பியவர், நினைத்தால் சிலுவையிலிருந்து இறங்க முடியாதா? முடியும். ஆனாலும் அறத்தன்மையை வெளிப்படுத்தவே, தன்னைக் கொல்கிறவர்களுக்காகவும், வேண்டுதல் செய்தார்.

பிறவாழி நீந்தல் :

அறவாழிக்கு மாறானது பிறவாழி. பாவமாகிய கடல். இக்கடலை மனிதன், தான்மாத்திரம் கடக்க முடியாது. மனிதன் தனது முயற்சியாகிய தவம், விரதம், நல்லொழுக்கம் இவற்றால் மாத்திரம் கடக்க வேண்டும் என நினைத்தால் அது முடியாமல் இடையில் முறிவுபட்டுப்போகும். அதைக் கடக்க வழிகாட்டி, பாவமே இல்லாதவன், அறக் கடலாக விளங்குபவனாகிய இறைவன் துணை அவசியம். அது இல்லை என்றால் மனிதன் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் அவ்வளவும் முடிவில் வீணாகவே முடியும். ஏனெனில் நமக்கு விரோதமான சக்தி வேறு எங்கும் இல்லை. நம்மில் தானே உண்டு. அதிலிருந்து விடுதலையைக் கொடுத்து மேனிலைப்படுத்துகிறவன் அறவாழி அந்தணனாக விளங்கும் இறைவன் ஒருவனே.

கடவுளின் உதவியின்றி முக்திநிலையை அடைய முடியும் எனக் காட்டும் சமயங்களை மறுத்துரைக்கிறார். இறைவனுக்குக் கொடூர குணங்களைச் சித்தரிக்கும் சமயங்களையும் மறுத்து அவன் அறக் கடலாய் விளங்குகிறான் எனக் கூறுகிறார்.

இதில் வள்ளுவர் காட்டுவன :

1. இறைவன் அறக் கடலாக விளங்குகிறுன்.
2. மனிதன் பாவக் கடலில் தத்தளிப்பவன்.
3. மனிதன் தன்னைத்தானே பாவக்கடலி லிருந்து விடுவித்துக் கொள்ளும் ஆற்றல் அற்றவன்.
4. அறக்கடலான இறைவன் மக்களைப்பாவக் கடலிலிருந்து கைதூக்கி எடுக்கிருர்.
5. அறக்கடலான இறைவனிடம் சேராத வர்கள் பாவக்கடலிலிருந்து விடுதலை பெற முடியாது.

9. *கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
தாளை வணங்காத் தலை.

நன்மையை அடைவதற்கு உதவியாக விளங்க வேண்டிய பொறியால், தீமை வருமானுல் அவ்வுறுப் பால் பயன் என்ன ? அது இருப்பதை விட இல்லா திருப்பதே சிறப்பு (மத்தேயு. 5 : 29; மாற் 9 : 47). "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினுல் அதைப் பிடுங்கிப்போடு. நீ இரண்டு கண்ணுடைய வனுய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க் கிலும், ஒற்றைக் கண்ணனுய் தேவனுடைய அரசில் நுழைவது உனக்கு நலமாயிருக்கும். அவ் வாறே மற்ற அவயவங்களும்."

இறைவனை வணங்காத உறுப்புகளால் யாது பயன் ?

எண்குணத்தான் :

எளிமையான குணத்தையுடையவன். அரசன் காட்சிக்கு எளியவனுக இருக்கவேண்டுமென வற்

புறுத்திய வள்ளுவர் இறைவனும் காட்சிக்கு எளிய வனும் தன்மையை விளக்குகிறார்.

'எண் பொருளவாகச் செலச்சொல்லி' என்ப தனுள் எண் பொருள், எளிய பொருள் எனவே பொருள் படுதலைப் போன்று, எண்குணம் எளிய குணம் எனப்பொருள் பட்டது. அதாவது இறை வன் மக்கள் அடைவதற்கு அரியவன் அல்ல. எல் லோருமே எளிதில் அடையக்கூடிய, எளிய குணத்தான். (மத்தேயு 11 : 29 - 30) "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என் னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக் கும். என் நுகம் மெதுவாகவும், என் சுமை இலகு வாயும் இருக்கிறது" என்று இயேசு கூறினார்" பொறிவாயில் ஐத்தவித்தவனும் இயேசுவின் தோற் றத்தை நாம் பார்த்தாலும்.

ஏழையின் வீட்டில் பிறந்தார். பிறந்தது வீடு கூட இல்லை, அதுவும் மாட்டுத்தொழு. அதுவும் கூட இரவல். வாழ்ந்தகாலை அவருக்கென்று ஒன்றும் இல்லை. 'மனித குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை' என்ற நிலையில் ஏழையோடு ஏழையாய் வாழ்ந்தார். அவர் பழகியது சாதாரண மக்கள். அவருக்குச் சீடர்கள் படிப்பு அதிகம் இல் லாத சாதாரண மீன் பிடிக்கும் தொழிலாளிகள். அவர் சிலுவையிலறையப்பட்டுப் பின் அடக்கம் பண்ணப்பட்டதும் கூட ஒரு இரவல் கல்லறை. ஆகவே அவரை விட எளிமையாக வாழ்ந்து வழி காட்டியவர்களை வேறு எங்கும் காணமுடியாது.

இக் குறளினால் வள்ளுவர் விளக்குவன :

1. இறைவன் எளிய குணத்தையுடையவன்.

2. மக்கள் பின்பற்றுதலுக்குக் கடினமானவன் அல்ல.

3. அவன் வழிநில்லா, அதாவது அவனை வணங்காத உறுப்புக்களால் பயன் இல்லை.

10. *பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
இறைவன் அடிசேரா தார்.

பிறவிப் பெருங்கடலை இறைவனடி சேர்ந்தாராலேயே நீந்த முடியும். மற்றவர்களால் நீந்த முடியாது. பிறவி என்பது பிறப்பைக் குறித்து நின்றது. மனிதன் பிறந்ததனாலேயே வாழுகிறான். பிறப்புக்கு இயற்கையிலேயே ஒரு தன்மை உண்டு. அது என்ன? பேதைமை. அதைத்தான் வள்ளுவரும் பிறப்பென்னும் பேதைமை என்றார். பேதைமை என்பது ஏதங்கொண்டு ஊதியம் போக விடல். அதாவது தீமையைக் கைக்கொண்டு நன்மையை விட்டுவிடல். தேவையானது, செய்ய வேண்டியது நன்மை, தேவையற்றது தள்ளத் தக்கது தீமை. ஆனால் மனிதன் நன்மையைத் தள்ளித் தீமையைச் செய்கிறான். காரணம் அவனது இயற்கைத் தன்மையாம் பேதைமை.

"நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை.

ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையைச் செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால் நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.

ஆனபடியால் நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில், தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்.

என் மனத்தின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.

நிர்ப்பந்தமான மனுஷன் நான். இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் ?
(ரோமர் 8 : 18-25.)

இவ்வாறு தூய பவுல் பிறவிப் பெருங்கடலையும், அதில் தத்தளிக்கும் மனிதனையும், அவன் கரையேற இறைவனே வழி எனவும் விளக்குகிறார்.

ஆகவே மனிதன் பிறவியில், பேதைமையுடையவன். அவனை பிறவிக் கடலிலிருந்து கரையேற்றுபவர் இறைவனே. இறைவனையன்றி ஒருவனும் கரையேறுதல் முடியாது என வள்ளுவர் கூறுகிறார். இயேசுநாதரும் தன்னைப் பின்பற்றுகிறவனுக்கு விடுதலையுண்டு எனக் கூறுகிறார்.

இதில் வள்ளுவர் விளக்கும் கருத்துக்கள் :

1. மனிதப் பிறவி பேதைமை நிறைந்த கடல்.
2. மனிதன் தானாக அதிலிருந்து கரையேற முடியாது.
3. பேதைமைக் கடலிலிருந்து கைதூக்கி எடுத்துக் கரை சேர்ப்பவன் இறைவனே.

ஆகவே வள்ளுவர் காட்டும் இறைக்கொள்கை:

1. இறைவன், முதல்வன், மகன், ஆவி என்ற மூன்று நிலைகளில் செயல்படுகிறான்.
2. யாவும் அவனால் படைக்கப்பட்டவை.

3. வெறும் கல்வியால் இறைவனை அடைய முடியாது.

4. இறைவனை அறிவதே கல்வியின் பயன்.

5. அறிவை அளிப்பவன் இறைவனே.

6. யாவருடைய இருதயத்திலும் வர ஆயத்தமாய் எங்கும் வியாபித்திருப்பவன் இறைவன்.

7. பின்பற்றியவர்களுக்கு நீடிய வாழ்வைக் கொடுப்பவன்.

8. யார் வேண்டுமானாலும் பின்பற்றக் கூடியவன்.

9. யாரையுமே வெறுக்காது ஏற்றுக்கொள்ளுபவன்.

10. அவனைச் சேர்ந்தவர்களுக்கு எக்காலத்திலும் துன்பம் இல்லை.

11. இருளில் சேர்க்கக்கூடிய கொடிய வினை மனிதனை இயற்கையில் பற்றும்.

12. இறைவன் புகழ்புரிந்தார்மாட்டு அது சேராது.

13. இறைவன் ஐம்பொறியோடு உலகில் தோன்றினான்.

14. ஐம்பொறியோடு அவனுக்குப் போராட்டம் இருந்தது.

15. அதிலே அவன் பூரண வெற்றிகொண்டான். ஐம்புலனை அடக்கமாத்திரம் செய்யவில்லை. அவித்தான்.

16. பொய்தீர் ஒழுக்கம், அதாவது குற்றமற்ற ஒழுக்கமாகிய சத்தியமாய் விளங்கினான்.

17. நெறியாம் வழியை, அதாவது மனிதர் நடக்க வேண்டிய வழியைக்காட்டி, மேல் நிலை யடைகிறவர்களுக்குத் தான் வழியாகவும் விளங்குபவன்.

18. நீடுவாழ்வாம் ஜீவனாகத்தான் விளங்கி, தன்னை அடைகிறவர்களுக்கும் ஜீவனாக விளங்குகிறான்.

19. இறைவனுக்கு உவமை கிடையாது.

20. மனிதனுக்கு இயற்கையில் மனக்கவலை உண்டு.

21. மனச்கவலையை மாற்றும் மருந்து இறைவனே.

22. இறைவன் அறக்கடலாக விளங்குகிறான்.

23. மனுதன் பாவக்கடலில் தத்தளிப்பவன்.

24. மனிதனுக்குத்தன்னைத்தானே பாவக்கடலிலிருந்து மீட்டுக் கொள்ளும் ஆற்றல் கிடையாது.

25. அறக்கடலாகிய இறைவன் மக்களைப் பாவக்கடலிலிருந்து கைதூக்கி எடுக்கிறான்.

26. அறக்கடலான இறைவனிடம் சேராதவர்கள் பாவக் கடலிலிருந்து விடுதலைபெற முடியாது.

27. இறைவன் எளிய குணத்தையுடையவன்.

28. மக்கள் பின்பற்றுதலுக்குக் கடினமானவன் அல்ல.

29. அவன் வழிநில்லா, அதாவது அவனை வணங்காத உறுப்புகளால் பயன் இல்லை.

30. மனிதப்பிறவி பேதைமை நிறைந்த கடல்.

31. மனிதன் தானுக அதிலிருந்து கரையேற முடியாது.

32. பேதைமையாம் பிறவிக்கடலிலிருந்து கை தூக்கி எடுத்துக் கரைசேர்ப்பவன் இறைவனே. என்பவையாம்.

இறைவணக்கமாகக் கூறப்பட்ட 10 பாக்களுள்ளும் மூலாதாரமான ஆணிவேரான குறட்பா எதுவென ஆய்வோம்.

அமைப்புமுறையை நோக்கினுல் முதல் குறட்பாவினுள் இறைவனையும் உலகையும் பற்றிக் கூறுகிருர். 2 முதல் 10 முடிய உள்ள 9 குறட்பாக்களுள்ளும், இறைவனுக்கும்மனிதனுக்கும் உள்ளதொடர்பு விளக்கப்படுகிறது.

இந்த 9 குறட்பாக்களுள் 7 குறட்பாவினுள், தாள் அல்லது அடிசேர்தல் கூறப்படுகிறது. மீதி இரண்டு குறட்பாவினுள்ளும் ஒன்றில் இறைவன் புகழ் கூறுதலும் மற்றதில் இறைவன் நெறி நிற்றலும் கூறப்படுகிறது.

7 இடங்களில் தாள் சேர்தலைக் கூறியவர். தாள் சேர்தல் என்ருல் என்ன? எப்படிச் சேர்வது? என்பதை விளக்கும்படியாக.

நீடு வாழ்வார் என இரண்டு குறட்பாவினுள் கூறுகிருர். ஒன்று தாள் சேர்தலால் நீடு வாழ்வு. அடுத்தது நெறி நிற்றலால் நீடு வாழ்வு. ஆகவே நீடு வாழ்வை இரண்டிடத்தும் கூறு முகத்தான், தாள் சேர்தலாவது நெறி நிற்றல் என விளக்கினுர்.

இறைவன்நெறியை மக்கள் அறியும் பொருட்டு, உலகில் ஐம்புலன்களுடன் தோன்றி, சோதனையை வென்று ஐம்புலனையும் அடக்கி வழிபாகவும் சத்திய

மாகவும் ஜீவனுகவும் விளங்குகிறுர் என விளக்கு கிறுர்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவைக் கூறும் 9 குறட்பாவின் நடு நாயகமாக, இக்குறட்பா வைக்கப்பட்டமையாலும், அடிசேர்தலாம் தன் மையை விளக்கி நெறி நிற்றல் எனக்காட்டலாலும், நெறி ஏற்படுத்த இறைவன் மனிதனுக வந்தான். வழி வகுத்தான், எனக் கூறியமையாலும் இதுவே வள்ளுவரின் மூலக்கருத்தும் ஆணிவேரான கொள் கையுமாகும்.

இம் மூலக் கருத்தான இறைக் கொள்கை கிறித்தவம் ஒன்றில் மாத்திரமே நிலே பெறுவது யாவரும் அறிந்த உண்மை.

ஆகவே திருவள்ளுவர் போற்றும் இறைவன் இயேசு கிறித்து ஒருவரே என்பதும் விளங்கித் தோன்றுகிறது.

திருக்குறளில் காணப்படும் கிறித்தவக் கருத்துக்கள்

திருக்குறளின் அடிப்படைக் கருத்துக்கள் அத்தனையுமே கிறித்தவத்தோடு தொடர்புடையனவே, அதனுடன் வேறுபட்டு எந்த நிலையிலும் இயங்கவில்லை என்பது நுட்பமாக ஆயும் அறிஞர்கள் அறிந்துகொள்ள முடியும். சமயங்களின் அடிப்படையான நிலைக்களன் எவை ?

இறைவன், உலகத்தோற்றம் உயிர்களின் தோற்றம் இறைவனுக்கும் உலகுக்கும், இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பு. உயிர்களின் தன்மை, மனிதனுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு; இறைவன் உலகுக்காகவும் மனிதனுக்காகவும் செயல்படும் திறம், மனிதனின் முடிவு, ஒருவன் மற்ற மனிதர்களோடு நடந்துகொள்ள வேண்டிய முறை அவனது கடமைகள் சமுதாய ஒழுக்கங்கள் ஆகும்.

இக் கருத்துக்கள் கிறித்துவத்திற்கும், திருக்குறளுக்கும் எவ்வித வேற்றுமையுமின்றி நடைபெறுகிறது. மற்ற சமயங்களில் இந்த அடிப்படைக் கருத்துக்கள் வள்ளுவத்தோடு முற்றிலும் மாறுபட்டு நடைபெறுகின்றன என்பது ஆய்வாளரால் அறியக் கிடப்பன.

இனி திருக்குறளில் காணப்படும் கிறித்துவ அடிப்படைகளை நோக்குவோம்.

திருக்குறளில் காணப்படும் கிறித்தவக் கருத்துக்கள்

1. உலகம் இறைவனால் படைக்கப்பட்டது.

2. ஆதி முதல் விளங்குபவனே இறைவன்
3. இறைவன் மானிட உருவம் எடுத்துப் பூமிக்கு வந்தார்
4. ஐம்புலனுடன் அவருக்குப் போராட்டம் இருந்தது
5. அப் போராட்டத்தில் அவர் வென்றார்
6. மனிதர்களுக்கு வழியைக் காட்டினார்
7. பொய்தீர் ஒழுக்கமாம் சத்தியமாய் விளங்கினார்.
8. மனிதர்களைப் பாவக் கடலிலிருந்து தூக்கி எடுப்பவர் அவர்
9. மனிதர்களுக்கு நீடுவாழ்வைக் கொடுக்கும் ஜீவனானவர் அவர்
10. பிறவியாம் கடலை ஒருவன் நீந்த வேண்டு மானால் இறைவன் பாதங்களே துணை. ஒருவனும் இறைவனையன்றிப் பாவக்கடலையும், பிறவிக் கடலையும் கடக்க முடியாது.
11. மனிதன் இயற்கையில் பேதைமை அல்லது பாவம் நிறைந்தவன்
12. பேதைமையாம் பாவம் நீங்க, சிறப்பென்னும் செம்பொருளாம் இறைவனைக் கண்டடைவதே வழி
13. இறைவனை அடைந்த ஆத்துமா என்றென்றும் நீடித்து வாழும்
14. இடைவிடாத முயற்சியுடையவர்கள் முறைமையையும் மாற்ற முடியும்
15. இல்லறம், துறவறம் இவை இரண்டும் சமமானாலும் இல்லறமே இயல்பானது, சிறப்பிக்கப்பட வேண்டியது

16. ஒவ்வொருவர் இருதயத்திலும் விருப்பு வெறுப்பின்றி வந்து நிற்பவன் இறைவன் (ஒவ்வொருவர் மீட்புக்காகவும்)

17. அறத்தின் வடிவாக நிற்கும் இறைவன் மனிதர்களைத் தேற்றுபவனேயன்றி அழிப்பவன் அல்ல

18. ஆணும், பெண்ணும் சமமானவர்களே. பெண் இழிவாகக் கருதப்பட வேண்டியவள் அல்ல

19. மனிதர் யாவரும் சமமே. அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு கிடையாது. அவனவன் செயலால் அவனவனுக்கு உயர்வும் தாழ்வும் கிடைக்கிறதேயன்றி, பிறப்பாலோ அல்லது மற்றெந்தக் காரணத்தினாலோ அன்று.

20. இறைவனுக்கு உயிர்ப்பலி இடுவது தவறு. அவருக்குப் பிரியமானது உள்ளம் சீர்திருந்தலே

21. பொதுமகள், கள், சூது இவை அழிவை ஏற்படுத்தக்கூடியவை

22. கொலை செய்யாதிருப்பாயாக

23. பிறன் பொருளை விரும்பாதிருப்பாயாக

24. கற்பு ஆண், பெண் இருவருக்கும் இருக்கவேண்டியது. ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணே

25. எல்லாத் தொழிலும் சிறப்புடையதே. உழவுத்தொழில் புனிதமானது. தேவவசனத்தைப் போதிக்கும் சிறந்த நல்லாசிரியனுக்குச் சமமானது விதைத்தல்

26. இவ்வுலக வாழ்வில் பொருள் முக்கியமல்ல. அருளே முக்கியம்

27. செல்வன் மோட்சம் செல்வது அரிது.

28. இன்னு செய்தார்க்கும் இனியவே செய்க.

29. பொய்த்துறவி அழிவுக்கு வழிகாட்டி

39. புறச்சின்னம் தேவையற்ற ஒன்று. உள்ளம் திருந்தலே காரியம்

31. வெளி ஆடம்பரமான அறமோ, அன்றி மற்றும் செயல்களோ சிறப்பாகாது. உள்ளத்தில் குற்றமற்றுச் செய்வதே அறம்.

32. தேவதூதர்களும் அவர்களுக்குத் தலைவனும் இறைவன் ஏவல் கேட்பவர்கள்

33. திருவள்ளுவர் காட்டும் இன்பத்துப்பாலும், சாலமோன் காட்டும் உன்னதப் பாட்டும் ஒரே அடிப்படையில் பின்னிப் பிணைந்து செல்லுபவை

34. கவலையை நீக்க இறைவனே வழி

35. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே மேல்

36. உள்ளதை உள்ளதெனவும் இல்லதை இல்லதெனவும் கூறுவாயாக. பொய் சொல்லாதே.

மேலே நாம் கண்டவைகளிலிருந்து திருவள்ளுவர், கிறித்தவ அடிப்படைக் கருத்திலேயே தன் முப்பாலை மொழிந்துள்ளார் என்பது தெளிவு.

இனி கிறித்தவ அடிப்படைக் கொள்கைகளையே தன் நூலில் கொண்டுள்ள திருவள்ளுவர் கிறித்தவரா என்பதை நோக்குவோம்.

திருவள்ளுவர் கிறித்தவரா?

திருவள்ளுவருடைய சமயத்தை இப்போது முடிவு செய்வோம். திருவள்ளுவர் வாழ்ந்த நாளில் தமிழ் நாட்டிலிருந்த மதங்கள் இரண்டு பிரிவில் அடங்கின. அவை: 1. வைதீகம் மேலோங்கிய இந்து சமயம். 2. சமணக் கருத்துக்கள் சிறந்த பௌத்த சமணம். இவை இரண்டையும் வள்ளுவர் கருத்துடன் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் கண்டோம். நாம் பார்த்தனவற்றுள் வள்ளுவரின் சமய அடிப்படைக் கருத்துக்கள் இவ்விரண்டு பிரிவினோடும் பெரிதும் வேறுபட்டு நடைபெற்றதையறிந்தோம். ஆகவே இவை இரண்டினுள், திருவள்ளுவர் கருத்து அடங்காமையால் வள்ளுவர் வைதீகம் மேலோங்கிய இந்து சமயத்தையோ அன்றி சமண பௌத்த சமயத்தையோ சார்ந்தவர் அல்ல என்பது மிகத் தெளிவுபட்ட ஒன்று.

அடுத்து அவர் வாழ்ந்தகாலே, தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்ட கிறித்தவக் கருத்துக்கள் தமிழ் நாடு முழுவதும் பரவ வாய்ப்பிருந்தமையால் திருவள்ளுவர் அக் கருத்தை உட்கொண்டு குறள் யாத்துள்ளார் என்பதற்குக் கிடைக்கும் குறிப்புகள் வலிமை பெற்றவையாக விளங்குகின்றன.

அவ்வாறு நாம் முடிவு செய்வதற்கு ஆதாரமான கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், திருவள்ளுவர் கிறித்தவரா? என்னும் கேள்வி இன்று எழுப்பப் பட்டதல்ல. சுவாமி சுத்தானந்த பாரதியார் போன்றவர்களால் 'திருவள்ளுவர் பைபிளையும்

கேட்டிருக்கிறார்' எனக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமானால், அது அதற்கு வெகு காலத்திற்கு முன்பே எழுப்பப்பட்டிருக்கிறது என்பது திண்ணம். திருவள்ளுவர் முகமதியரா? யூதரா? என்ற கேள்வி எப்போதும் ஏற்படவில்லை. திருவள்ளுவர் கிறித்தவரா? என்னும் கேள்வி அவருடைய நூலைக் கற்கும் அனைவர் மனத்திலும் வெகுகாலமாக எழுப்பப்பட்டு வந்ததாக நாம் அறியலாம். இளங்கோ கிறித்தவரா? சாத்தனார் கிறித்தவரா? ஔவை கிறித்தவரா? அப்படியே காப்பியர் முதல் கம்பர் ஈருகச் சிறந்து விளங்கிய புலவர்களைப் பற்றிய கேள்வி இல்லை. காரணம் என்ன? அவர்கள் யாவரையும் திட்டமாய் வகுப்பதற்கு வழி இருக்கிறது. ஆனால் வள்ளுவர் கிறித்தவரா? என திருவள்ளுவரைப் பற்றி எழுதியவர்களில் ஆராயாது விட்ட தமிழறிஞர் யாரும் இல்லை எனலாம்.

எனவே மற்றப் புலவர் சமயங்களைப்பற்றி எழாத ஐயம் வள்ளுவர்மேல் மாத்திரம் தோன்றக் காரணம் என்ன?

நெருப்பு இல்லாமல் புகை தோன்றாது என்பதற்கிணங்க வள்ளுவருக்கும் கிறித்தவத்திற்கும் இருந்த தொடர்பே இதற்குக் காரணம்.

திருவள்ளுவர் காலத்திருந்த அறிஞர் கருத்துக்களுக்கும் இவர் கருத்துக்களுக்கும் அடிப்படை வேற்றுமை பல இருக்கின்றன. இந்த வேற்றுமைக்குக் காரணம் என்ன? இவ்வேற்றுமை வள்ளுவர் நூலில் மாத்திரம் தோன்றக் காரணம் என்ன? திருக்குறளுக்கு உத்ரவேதம் அதாவது எதிர்வேதம் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் இது எதற்கு எதிர்வேதம்? இவ்வேதம் எச்சமயச் சார்புள்ளது என ஆராயின் அடிப்படைக் கருத்துக்கள் அத்தனையும் கிறித்தவத்துடன் ஒன்

றியைந்து நடைபெறுவதால் இங்கிருந்த மற்ற வேதங்களுக்கு எதிர்வேதமான கிறித்தவ வேதத்தைச் சார்ந்ததாகத் தெரிகிறது. திருவள்ளுவரின் இறை வணக்கம் கிறித்தவ இறைக் கொள்கையாகவே விளங்குவதை நாம் தெளிவாகப் பார்த்தோம். இவ் வடிப்படைக் கருத்தமைந்த மதம் தமிழகத்தில், ஏன் உலகில் வேறு எம்மதமும் இல்லை.

திருவள்ளுவர் வாழ்ந்த காலம், தோமையர் தமிழகத்தில் வாழ்ந்த காலமெனவே உறுதிப் படுவதால், தோமையரின் கருத்து மெய்ப்பொருள் காணும் அவா உடையார் அத்தனை பேராலும் வரவேற்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, அதே காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் தோமையரின் கருத்துக்களுள் சிலவற்றைமாத்திர மன்றி, முழுவதையுமே ஏற்றுக் குறட்பா இயற்றி யுள்ளார்.

திருவள்ளுவர் வாழ்ந்த இடமாகப் பலவகை யாலும் மைலாப்பூர் குறிக்கப்பட்டுள்ளமை முன்பு விளக்கப்பட்டுள்ளது. தோமையர் வாழ்ந்து நற்செய்தி உரைத்ததும் அதே இடம். மைலாப்பூர் இருவருடைய வாழ்விடங்களாக இன்றள வும் குறிக்கப்படுகின்றமையாலும், இருவர் பெய ராலும் தமிழகத்தில் வேறு எங்குமின்றிப் பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ள இடமாகவும், அவை மிக அருகருகே இன்றளவும் நிலைத்து நிற்கின்றமை யாலும், திருவள்ளுவர் அரசியலில் வேலைபார்த்த அரசாங்க அலுவலர் என்பது பெருங்கதை போன்ற நூல்களால் உறுதி செய்யப்படுகின்றமையாலும், தோமையரும் அங்கு வாழ்ந்து, மறைந்துள்ளமை மட்டுமின்றி அங்குள்ள அரசியலுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டமையாலும் தோமைய ருக்கும் திருவள்ளுவருக்கும் தொடர்புண்டு.

இலக்கியத்தில் திருவள்ளுவரைப் பற்றிய குறிப்பு அதிகம் காணப்படாமையிலிருந்து, அவர் வரலாறு திட்டமிட்டு அழிக்கப்பட்டிருத்தலை நாம் நோக்கக் கூடியவர்களாக இருக்கின்றமையாலும், பின்னர் அவர் கருத்துக்கு மாருகவே, அவர் பாக்க ளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டு, அவையே சிறப் பானதென வற்புறுத்தப்பட்டு வந்துள்ளமையைக் காண, அவர் கருத்துக்கள் வேண்டுமென்று மறைக் கப்பட்டிருத்தலையும் நோக்க, சங்கத்தில் இவர் அரங்கேற்றத்திற்குத் தடையிருந்தமையையும் நாம் காண, இவர் புதுமை நாடிய பெரும் புலவர் என் பதும், தமிழகத்திற்குப் புதுக் கருத்தாம் கிறித்த வத்தை ஏற்றுக்கொண்டவர் என்பதும் தெளிவா கிறது.

மறுபிறவி, ஊழ் இவை இரண்டுமின்றி வைதீகம் மேலோங்கிய இந்து சமயமும், பௌத்த சமண சமயங்களும் நடைபெருது. இவை இரண்டுமின்றி இயங்கிச் செல்வது கிறித்தவம் ஒன்றுமே. அதே கிறித்தவ அடிப்படை வள்ளுவரால் பின்பற்றப்பட் டிருக்கிறது.

நானே, வழி சத்தியம் ஜீவன் எனக்கூறிய ஏசுவைப் பின்பற்றும் கிறித்தவர்களைப் போன்றே, வள்ளுவரும் சென்றுள்ளார். அதையே சிறப்பித்துத் தன் மூலாதாரமான குறட்பாவினுள் கூறியுள்ளார். மற்றக் குறட்பாக்களுள்ளும் இயேசு கிறித்துவின் போதனைகளையே காட்டியதோடு அதைச் சிறப்பித் தும் கூறியுள்ளார்.

வள்ளுவரை இங்குள்ள மற்ற மதங்களுடன் ஒப்பிட்டு இடர்ப்பாடடையும் அறிஞர், திருவள்ளு வர் எந்த மதத்தையும் சேர்ந்தவர் அல்ல என்ற முடிவுக்கு வருகின்றனர். ஏன் கிறித்தவத்துடன் ஒப்பிட்டு, அது அதனுடன் பூரணமாக இணைந்து

வருவதை நோக்க, திருவள்ளுவர் கிறித்தவர் எனக் கூறக் கூடாது? திருவள்ளுவர் கிறித்தவக் கருத்துக் கள் அத்தனையையும் ஏற்றுக் குறட்பா யாத்துள் ளார். ஒரு பூரணக் கிறித்தவனை அறநூல் இயற்றும் படி கேட்டுக்கொண்டால் அவன் எவ்வாறு கருத்துக் களைக் கூறுவானே, அதே நிலையில் எள்ளளவும் மாற்றமின்றி வள்ளுவர் சென்றுள்ளமையால் திரு வள்ளுவர் கிறித்தவத்தைப் பின்பற்றினுர் என்பது உறுதிப்படுகிறது. ஆகவே திருவள்ளுவர் கிறித்தவரே.

திருவள்ளுவரும் தோமையரும்

ஏசுவின் மாணவராகிய தோமையர், ஏசுவின் போதனைகளைத் தமிழகத்தில் பரப்பும் பொருட்டு நற்செய்தியின் முதல் தூதனுகத் தமிழகம் வந்து சேர்ந்ததை நாம் முன்பு கண்டோம். இவர் கி. பி. 52இல் தமிழகம் வந்தவர் கி.பி. 72இல் தமிழகத்தில் தன் பணியிலேயே கலந்துவிட்டார்.

திருவள்ளுவர் காலம் கி. பி. முதல் நூற்றுண் டெனப் பார்த்தோம். ஆகவே, தோமையரும் திருவள்ளுவரும் ஒரே காலக்கட்டத்தில் தமிழகத் தில் வாழ்ந்திருக்கிறுர்கள் என்பது தெளிவு.

அடுத்து திருவள்ளுவர் மயிலையில் வாழ்ந்த தாகச் சொல்லப்படுதலை 1. செவிவழிச் செய்தி, 2. வரலாறு கூறுவோரின் கூற்று, 3. திருவள்ளுவர் கோவில், 4. கபிலரகவல் ஆகியன உறுதிப் படுத்துவதாலும், தோமையர் மயிலையில் கொல்லப்

பட்டார் எனத் திட்டமான ஆதாரங்கள் இருப்ப தாலும், இருவரும் ஒரே காலத்தில், ஒரே இடத்தில் வாழ்ந்தவர்கள் ஆகிருர்கள்.

திருவள்ளுவர் புதுக்கருத்துக்களை நாடுவதி லும், நாடியதை ஆய்ந்து நல்ல கொள்ளுதலிலும் பின்னடையாதவர். ஆகவே, மைலாப்பூரில் ஏசு பெருமானைப்பற்றிக் கூறிய கருத்துக்களை வள்ளுவர் மிக்க ஆவலுடன் கேட்டிருக்க வாய்ப்பு உண்டு. அவர் கேட்டது மாத்திரமல்லாமல் தோமையரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டார் என்பது திருக் குறளினுள் கிறித்தவத் தத்துவங்களையே எடுத் தோதுவதால் தெற்றென விளங்கி நிற்கின்றது.

புதுக்கருத்தை அறிவிப்பதற்காகவே அலை கடலைக் கடந்து அந்நிய நாடு வந்தவர் தோமையர். புதுக்கருத்துக்கள் சிறப்புடன் விளங்கிஞல் அதை ஆவலோடு வரவேற்பவர் வள்ளுவர். இவர்கள் இருவரும் ஒன்றுசேர்ந்ததில் வியப்பதற்கு ஒன்றுமே இல்லை.

வள்ளுவர் என்பவர் அரசியலில் முக்கிய அலு வலை வகிப்பவர் என பெருங்கதை முதலியவற்ருல் நாம் அறிகிறேம். வள்ளுவர் அவ்வாருன பணி செய்தவர் என்பதை வள்ளுவரின் பொருட்பால் விளக்கும்.

வள்ளுவ முதுமகனைப் பற்றிப் பெருங்கதை கூறுவது :

“ நன்னுள் இதுவெனப் பன்னுடறியப்
பசும்பொற் பலவார் விசிந்து பிணிஉறிஇக்
கோதை முத்தொடு தாமந்ததைஇ
ஏற்றுரி போர்த்த இடியுறழ் தழங்குரல்
கோற்ருெழில் வேந்தன் கொற்ற முரசம்
பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலியோச்சி

முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச்சேனை வள்ளுவ முதுமகன்
நறுவெண் சாந்தொடு மாலை அணிந்து
மறுவில் வெண்டுகில் மருங்கணி பெறீஇ
அணைமிசை அமர்தந் தஞ்சுவரு வேழத்துப்
பணைபெருத் தேற்றிப்.......................
....
மாலை மன்னவன் மணமகன் ஆகும்
காலை இதுவெனக் கதிர்மணிக் கதுப்பிற்
கண் அதிர்ந்தியம்ப இன்மொழி பயிற்றிக்
கல்லென அறையும் ஒல்லென் கம்பலை''

எனக் கூறுவதிலிருந்து இந்நாளில் அரசியல் செய்தியை வானொலியில் அறிவிப்பாளரைப் போன்று, அன்று வள்ளுவர் அரசியல் செய்தி அறிவிப்பாளராகச் செயல்பட்டு வந்தனர் என்பது விளங்கி நிற்கின்றது. ஆகவே வள்ளுவர் என்பது அரசாங்கத்தின் முக்கிய தொழிலைச் செய்து வருபவரைக் குறித்து நிற்கின்றதே யொழிய, தனிப்பட்ட ஒருவரின் சிறப்புப்பெயர் அல்ல.

மைலாப்பூரில் ஓர் சிற்றரசன் தோமையர் தமிழ் நாட்டில் வாழ்ந்தகாலை இருந்ததாகவும், அவ்வரசனின் அதிகாரி தோமையரை மயிலைக்கு அழைத்து வந்ததாகவும், தோமையரின் நடவடிக்கைகள் (ஆக்ட் ஆப் தாமஸ்) என்னும் நூல் கூறுகின்றது. அது மேலும் கூறுவதாவது,

"இந்தச் சமயத்தில் பிறிதொரு மன்னனை (மஜுடை) மகாதேவன் என்பவனின் அரண்மனை அலுவலர் தோமையரைத் தனது மனைவிக்கும் மக்களுக்கும் ஏற்பட்டிருந்த நோயைக் குணமாக்க வரும்படி அழைத்தார். தோமையர் தான் ஏற்

படுத்தியிருந்த சபையைத் தகுந்த ஒரு தலைவனை நியமித்து அவனிடம் ஒப்படைத்துவிட்டு, அழைக்கப்பட்ட இடத்திற்கு வந்தார். இவர் வந்தவுடன் நோய் குணமாக்கப்பட்டது. பின்பு அவர்கள் கிறித்துவை ஏற்றுக்கொண்டார்கள். அதுமாத்திரம் அல்ல, அரசனின் மனைவியுட்பட அரசாங்க அலுவலர் அநேகர் ஏசுவை ஏற்றுக்கொண்டனர். இது அரசனுக்குப் பிரியமில்லாதிருந்த காரணத்தால் அவன் தோமையரைச் சிறையிலிட்டான். இவர் சிறையிலிருந்தகாலை அரசனின் மகனும், மகனின் மனைவியும், ஏற்றதோடு வேறு முக்கிய அரசியல் அலுவலர்களும் ஏசுவை ஏற்றுக்கொண்டனர். இது அரசனுக்குப் பெருங்கோபத்தை உண்டாக்கவே அரசன் தோமையரைக் கொலைசெய்யும்படி கட்டளையிட்டான். தோமையர் கொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டார். பின்பு சிலகாலம் செல்லவே அரசனின் குமாரர்களில் ஒருவன் நோய்வாய்ப் பட்டான். நோய் அதிகமாகவே அரசன் பரிசுத்த முள்ள தோமையரின் எலும்பு தன் மகனைத் தொட்டாலும் மகன் குணமடைவான் என நிச்சயித்து கல்லறையைத் திறந்தான். ஆனால், அதற்கு முன்பே எலும்புகள் மெசப்பத்தோமியா கொண்டு செல்லப்பட்டதை உணர்ந்தான். எலும்புகள் இருந்த இடத்தின் தூசிபட்டாலும் தன் மகனுக்குக் குணம் கிடைக்கும் என நம்பினான். அவ்வாறு அந்த இடத்தின் மண்ணை எடுத்துத் தன் மகனின் கழுத்தைச் சுற்றித் தடவவே மகனின் நோய் நீங்கியது. அரசனும் தன் தவறை உணர்ந்தான்''

மேலே காணும் கூற்றிலிருந்து நாம் அறிவதென்ன? மைலாப்பூரில் தோமையர் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டமைக்கு அவர் மதம் பிடிக்காதவர்களே காரணம். அவர்களின் ஆதிக்கத்தில் இருந்த அரசன், அவர்களின் விருப்பத்திற்

கிணங்க தோமையரைக் கொலை செய்யச் சம்மதித்தான். அரசன் மகன், மருமகள், மனைவியுட்பட அரசாங்க அலுவலர் பலர் ஏசுவை ஏற்றுள்ளனர். இவர்களுள் வள்ளுவரும் இருந்திருக்க அதிக வாய்ப்பு இருக்கிறது ஏன்? வள்ளுவர் வாழ்ந்தது அதே காலம், அதே இடம், அவர் பெயர் குறித்து நிற்பதும் அரசாங்க அலுவல். அவர் இயற்றிய நூலின் கருத்தும் தோமையரின் கருத்துக்கள். ஆகவே தோமையரால் கிறித்துவுக்குள்ளாக்கப் பட்டு, ஞான முழுக்குப்பெற்ற அரசாங்க அலுவலர் களுள் திருவள்ளுவரும் ஒருவரே என நாம் ஏன் கொள்ளக்கூடாது?

அவர் தான் எழுதியுள்ள திருக்குறளினுள்ளும், தோமையர் தான் மற்றவர்களுக்குப் பயன்பட்டது மட்டுமின்றி, தோமையரின் எலும்பு, எலும்பின் துகள் மன்னன் மகனைக் குணமாக்கியதை எண்ணியே,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு.

என மொழிந்திட்டார். அதுமாத்திரமன்றி,

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

ஒப்புரவினல் வரும் கேடெனில் அ:தொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்.

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்
நோயின்மை வேண்டு பவர். [நோய்செய்யார்

இவையெல்லாம் சிந்திக்கற்பாலன. ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்து வள்ளுவர்;

தோமையரின் மூலம் பெற்ற நற்செய்தியாம் அறத்தை, தன் அரசியல் பணியிலிருந்து பெற்ற அரசியலறிவாம் பொருளுடன், தன் இல்வாழ்வின் அடித்தளத்தில் விளங்கிய இன்பத்தோடு சேர்த்துத் தமிழ்ச் சூழலில் முப்பாலாக மொழிந்துள்ளார்.

கிறித்தவமாகிய மலையிலிருந்து எடுக்கப்பட்ட அறமாகிய கருங்கல், தமிழாகிய கங்கையில் நீராட்டப்பட்டுத் திருவள்ளுவராகிய சிற்பாசாரியால் சிறப்பாக வடிக்கப்பட்டுத் திருக்குறளாம் பேசும் சிற்பம் தோன்றியது. அதன் உயர்வு இன்று உலகமெல்லாம் ஒளிவீசி நிற்கின்றது.

திருவள்ளுவர் தமிழ்நாட்டுக்கு மாத்திரம் உரியவர் அல்லர். உலகம் முழுவதற்கும் பொதுவானவர். ஏன்? தமிழ்நாட்டில் மாத்திரம் நிலவும் கருத்தையே முக்கியமாக வைக்காது உலகம் முழுவதும் நிலவும், ஏற்றுக்கொள்ளும் கருத்தைத் தன் நூலில் அமைத்தார். ஆகவே அவர் உலகப் பெரும் மேதையாகிறார். இவரோடு ஒப்பிடப்படும்பொழுது மற்றப் புலவர்கள் குறைந்த நிலையிலும், இவர் நிறைந்த நிலையிலும் காணப்படும் காரணத்தின் அடிப்படை இதுவே. பாட்டுக்கு ஒரு புலவர் பாரதி, இளங்கோ போன்ற பெரும் புலவர்களைத் தமிழ்நாட்டிற்குச் சிறப்பானவர்களாக,

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணியாரம் படைத்த தமிழ்நாடு.

எனக்கூறிச்சிறப்பித்ததுடன்? வள்ளுவரை தமிழகத்தையும் தாண்டி உலகக் கருகத்தைத் தெரிவிக்கும் உலகப் பெரும் மேதை என உலகுக்குரியவர் ஆக்கி,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு.

எனச் சிறப்பித்துள்ளார்.

வணக்கம்

நம் தமிழ்மொழி எல்லா மதங்களுக்கும் பொது வானது. ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்தவர்களும் ஒவ்வொரு காலங்களில் சிறப்பான பணியாற்றி அதை வெகுவாக வளர்த்துள்ளனர். இதை யாராலும் மறுக்கவோ மாற்றவோ முடியாது. இந்தக் குறிப்பிட்ட சமயந்தான் தமிழர்களுடையது. மற்றவை எல்லாம் அவர்களுக்குப் புறம்பானது என்று எந்தச் சமயத்தையும் சொல்லமுடியாது.

அடுத்து தமிழர்களுக்கே உரிய மதம், இன்று தமிழகத்தில் உலவுவதில் எது? நடுநிலை ஆராய் வாளர் எதையுமே ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன்? தற்போது தமிழகத்தில் அதிகமாக இருக் கின்ற இந்து சமயம் பிராமணர் ஆதிக்கமும், பிரா மணக் கருத்தும் நிறைந்ததேயொழிய, தூய தமிழ்ச் சூழ்நிலையிலேயே தோன்றித் தமிழ்க் கருத்துக்களே நிறைந்தவை என்றும் யாரும் சொல்லுவதற்கில்லை. ஆகவே அது தமிழனுக்கு அன்னிய மதமே. அதிலும் தமிழனுக்கு அநீதி விளைவிக்கும் கருத்துக் கள் அதனுள் உண்டு என்ற எண்ணத்தில், இந்து மதத்தில் பிறந்தும், தூய தமிழ்க் கருத்தினை விரும்பு பவர் அதனை எதிர்க்கின்றனர்.

தமிழ் நாட்டில் உலவும் மற்ற மதங்களும் அவ்வாறே வேறிடத்தில் தோன்றிப் பின் தமிழ் நாட்டில் பரவினவையே.

ஆகவே, சிறந்த தமிழன், எல்லா மதங்களை யும் அவை தமிழ் வளர்ச்சிக்கு உதவிய காரணத் தால் சமமாக எண்ணவேண்டுமேயல்லாது, தன்

மதம் நோக்கி மற்றவற்றைக் குறைவாக எண்ணக் கூடாது. அப்போது தமிழ் சிறப்புறும்.

ஏன் இதை இங்கே கூறுகிறேன் என்ருல் சிறந்த ஆய்வாளரும், தமிழறிஞருமான மயிலே சீனி. வேங்கடசாமி அவர்கள் தான் எழுதிய ''சமணமும் தமிழும்'' என்னும் நூலின் முன்னுரையிலே கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்ருர்.

''நேரத்தையும் உழைப்பையும் செலவிட்டு இந்த நூலே எழுதி ஏன் என் ஆயுளே வீணுக்கினேன் என்று கருதி இதை வெளியிடாமலே இருந்து விட்டேன். அதற்கும் சில காரணங்கள் உண்டு. அவற்றை இங்கு கூற விரும்பவில்லே. ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளி களுக்குத் தமிழ் நாட்டில் இடமில்லே என்பதே அது. பாமரர்களேப்பற்றியும் படிக்காத பணக்காரர்களேப் பற்றியும் கூறவில்லே நான். ''கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்''. கல்வித்துறையிலே மிக உயர்ந்த நிலேபெற்று ஆராய்ச்சியின் அருமை பெருமைகளே அறிந்தவர்கள்கூட ஆராய்ச்சியாள ரைப் போற்றுவதில்லேயென்ருல், இந்நூல்களே ஏன் எழுதவேண்டும், ஏன் வெளிப்படுத்த வேண்டும்''

இவர் இவ்வளவு மனம் நொந்துகொள்ளக் காரணமானவ இனியேனும் நம்மிடம் இருத்த லாகாதெனவே வேண்டுகிறேன். அதுவே நம் அன்னேயாம் தமிழ்த்தாய் வளர வழி. தமிழ்த் தாயின் முன் தமிழ் மக்கள் அத்தனே பேரும் சமமே யன்றி அவர்களுக்குள் எவ்விதத்தாலும் ஏற்றத் தாழ்வு இல்லே என்பதை உணருவோமாக.

இதுவரை என்னுடன் பொறுமையாக ஆய்வு நடத்தியதற்காக நன்றி தெரிவிக்கின்றேன்.

இறுதியாகத் தங்களிடம் ஓர் வேண்டுகோள் விடுகிறேன். இதுவரை நாம் ஆய்ந்ததைப் பற்றிய தங்களின் தனிப்பட்ட கருத்து என்ன என்பதை எனக்கு தெரிவிக்க வேண்டுகிறேன். குறைகளையும் மாற்றுக் கருத்துக்களையும் ஆவலுடன் வரவேற் கிறேன்.

எவர் மனத்தையேனும் புண்படுத்தும் சொற்கள் ஏதேனும் இருக்குமாகில் பொருத்தருள வேண்டு கிறேன், குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்கக் கொளல் தங்களைப் போன்ற அறிஞர் செயலன்றே !

இதில் காணப்படும் குறை யாவும் எனது அறியாமை எனவும், நிறை யாவும் இறையருள் எனவும் கொள்ள வேண்டுகிறேன்.

வணக்கம்.

கா ணி க் கை

வாழ்க்கையின் அடித்தளத்தில்
வாழ்வுக்காகப் போராடும்
பிச்சைக்காரப் பெருமக்களாம்
கண்கண்ட கடவுளருக்குக்
காணிக்கை இந்நூல்.

ஆசிரியர்.